
செங்கற்பட்டு



பத்தாண்டு சாதனைகள்

செங்கற்பட்டு

பத்தாண்டுச் சாதனைகள்

தமிழ்நாடு அரசாங்க
செய்தித்துறை வெளியீடு

முதற் பதிப்பு : டிசம்பர், 1961.

விலை : 25 காசுகள்

ஷண்முகம் பிரஸ்
பிரைவேட் லிமிடெட்,
சென்னை—1.



முன்னுரை

மக்கள் வாழ்க்கை வளம்பெற வேண்டும் என்பதற்காக ஐந்தாண்டுத் திட்டங்கள் வகுக்கப் பட்டன. அத் திட்டங்களின் கீழ் மாநிலத்தின் எல்லாப் பகுதிகளிலும் அபிவிருத்தி வேலைகள் நடைபெற்று வருகின்றன. அந்தந்தப் பிரதேசத்தின் அமைப்பு, இயற்கை வளங்கள், மக்கள் மனப் போக்கு ஆகியவற்றுக் கேற்ப, முன்னேற்றத்தின் அளவு அமைந்திருக்கிறது. ஆனால் வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் சிறந்த வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. இந்த வளர்ச்சியைப் பிறநாடுகளிலிருந்து வருகின்ற தலைவர்களும் பாராட்டி யிருக்கிறார்கள்.

மாவட்ட வாரியாக நம்முடைய பத்தாண்டுச் சாதனைகளைத் தொகுத்துத் தனித்தனியாக 12 நூல்களை வெளியிட்டு இருக்கிறோம். எல்லாம் சாதித்தாகிவிட்டது என்று பூரித்துப் பேசுவது இந்த நூல் வரிசையின் நோக்கமல்ல. எந்த அளவுக்கு அபிவிருத்தி வேலைகள் நடந்துள்ளன என்னும் விவரம் இதன் மூலம் பொது மக்களுக்கு எடுத்துச் சொல்லப் பட்டிருக்கிறது. உருவாகி வரும் சுபீட்ச மாளிகையின் எழுத்து உருவம் இது. அந்த மாளிகையைப் பூரணமாகக் கட்டி முடிப்பதில் நடந்துள்ள பணியை அறியவும், நடக்க வேண்டிய வேலையை அனுமானிக்கவும் இது பயன்படும். ஐந்தாண்டுத் திட்டங்களின் வெற்றிக்குப் பொது மக்கள் தொடர்ந்து ஒத்துழைக்க இந்நூல் பெரும் தூண்டுகோலாக இருக்கும் என்று நம்புகிறோம்.


சென்னை-9
27-12-1961

நெறியாளர்,
தமிழ்நாடு அரசாங்கச் செய்தித்துறை.

அட்டைப் படம்

செங்கற்பட்டு மாவட்டத்தைப் பற்றி நினைக்கும் பொழுது நம் மனக்கண் முன்னால் சைக்கிள் சக்கரங்கள் சுழல்கின்றன; மோட்டார் அடித்தளங்கள் அழகாகப் பவனி வருகின்றன. கலைச் சிறப்புக்கு உறைவிடமாக விளங்கும் இம்மாவட்டம் இன்று தொழில் துறையிலும் செழித்து முன்னேறி வருகிறது. இதனை எழிலுறச் சித்திரிக்கிறது அட்டைப் படம்.

பொருளடக்கம்


செங்கற்பட்டு
ஆந்திரப் பிரதேசத்திற்கு
மாற்றப்பட்ட பகுதி சுமாராகவே
குறிக்கப்பட்டுள்ளது.
ஆந்திரா
பொன்னேரி
எண்ணூர்
பக்கிங்காம்
பூண்டி
நீர்த்தேக்கம்
திருத்தணி
திருவள்ளூர்
புழலேரி
திருவொற்றியூர்
கூவம் ஆறு
அம்பத்தூர்
சென்னை
சைதாப்-
பேட்டை
பறங்கிமலை
ஸ்ரீபெரும்புதூர்
செம்பரம்பாக்கம் ஏரி
தாம்பரம்
குறிப்பு:
மாவட்ட எல்லை
வட்ட எல்லை
ஆறுகள்
தேசிய நெடுஞ்சாலை
பிராட் கேஜ்
மீட்டர் கேஜ்
இருப்புப் பாதை
காஞ்சீபுரம்
வாலாஜாபாத்
பாலாறு
செய்யாறு
செங்கற்பட்டு
பக்கிங்காம் கால்வாய்
உத்திரமேரூர்
மாமல்லபுரம்
திருக்கழுக்குன்றம்
வங்காள
விரிகுடா
மதுராந்தகம் ஏரி
மதுராந்தகம்
பரப்பளவு : 3,188 சதுர மைல்கள்
மக்கள் தொகை : 21·9 லட்சம்
ஆண்கள் : 11·2 லட்சம்
பெண்கள் : 10·7 லட்சம்
எழுதப் படிக்கத் தெரிந்தோர்
சதவிதம் : 26·8
ஆண்டுச் சராசரி மழையளவு :
1187·9 மில்லி மீட்டர்.

மக்கள் திட்டம்

பொழுது புலர்ந்தது. புள்ளினம் ஆர்த்தன. ஆர்த்தன முரசம். பொங்கியது எங்குஞ் சுதந்திர நாதம். வெள்ளிய சங்கம் முழங்கின. வீதியெல்லாம் அடிமை விலங்கொடித்த அணிவகுப்பின் ஆரவாரம். அந்த ஆரவாரத்தோடு நாட்டின் பொருளாதார சுபிட்சத்துக்கான புதிய போராட்டம் ஆரம்பமாயிற்று. தாழ்வும் நலிவும் நீங்கி, மகிழ்ச்சியும் பொலிவும் நிறைந்த புதுவாழ்வு காண மாபெரும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இடையில் ஏற்பட்ட இடையூறுகள் அனைத்துக்கும் ஈடு கொடுத்துப் புதுவாழ்வு என்னும் பயிரைத் திட்டமிட்டு வளர்க்கத் தொடங்கினோம்.

1951 இல் முதல் ஐந்தாண்டுத் திட்ட வேலை ஆரம்பமாயிற்று. இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றிய பின்பு இப் போது மூன்றுவது திட்ட வேலை தொடங்கியிருக்கிறது. மூன்றுவது திட்டம் மிகப் பெரியது என்று அனைவரும் கருதினாலும், அதில் வெற்றி காணமுடியும் என்ற தன்னம்பிக்கை நமக்கு ஏற்பட்டுள் ளது. இந்தத் தன்னம்பிக்கையை நமக்குக் கொடுத்தது எது? முதல் இரு திட்டங்களில் கிடைத்த வெற்றியே.

ஐந்தாண்டுத் திட்டம் என்றால் சமுதாயத்தின் மேல்தளத்தில் உள்ள சிலர், கீழே இருக்கும் பலரை வேலை வாங்கும் திட்டமல்ல.

இது மக்கள் திட்டம். மக்கள் நலனுக்காக மக்கள் ஒத்துழைப்பைக் கொண்டு நடத்தப்படும் திட்டம். இந்தியாவின் பொருளாதார ஜனநாயகத்துக்குக் கொடுக்கப்பட்ட வரிவடிவமே இது.

நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கான தேசீயத் திட்டம், மூன்று பெரும் பிரிவுகளைக்கொண்டது. மத்திய அரசாங்கத் திட்டம், மாநில அரசாங்கத் திட்டம், தனியார்துறைத் திட்டம் என்பன அந்த மூன்று பிரிவுகள் ஆகும்.

புதிய உருக்காலைகள் அமைப்பு, கனரக யந்திரத் தொழிற்சாலை, ரசாயன உரத் தொழிற்சாலை, நிலக்கரிச் சுரங்கம், எண்ணெய் வளம் கண்டுபிடித்தல், எண்ணெய் சுத்திகரிப்பு, பெரிய துறை முகங்கள், ரயில்வேக்கள் ஆகியவற்றின் அபிவிருத்தி வேலைகள் முதலியன மத்திய அரசாங்கத் திட்டம் என்ற பிரிவில் வருகின்றன.

மாநில அரசாங்கத் திட்டத்தின் கீழ், வேளாண்மை, மின்சாரம், போக்குவரத்து, கல்வி, சமூகநலப் பணிகள், சுகாதாரம், கிராம முன்னேற்றம் முதலியன அடங்கும்.

மூன்றுவது, தனியார் துறை. ஜவுளி, சர்க்கரை, சிமிட்டி, இஞ்சினீரிங் மற்றும் இதர பொருள்கள் உற்பத்திக்கான ஸ்தாபன ரீதியான தொழில்களில் பொதுமக்கள் முதலீடும், வேளாண்மை, வீடு கட்டுதல் ஆகியவற்றில் பொதுமக்கள் முதலீடும் இந்தப் பிரிவில் சேர்ந்தவை.

திட்டச் செலவுகள்

முதல் இரண்டு திட்டக் காலங்களில் இந்தியா முழுவதற்குமாக ரூ. 10,110 கோடி செலவிடப்பட்டது. மூன்றுவது திட்டத்தில் இந்தியா முழுவதற்குமாக உத்தேசமாக ரூ. 11,600 கோடி செலவாகும். இதில் மத்திய அரசாங்கம் ரூ. 3,775 கோடி செலவழிக்கும். மாநில அரசாங்கங்கள் ரூ. 3,725 கோடி செலவழிக்கும். தனியார் துறை ரூ. 4,100 கோடி செலவிடும்.

தமிழ் நாட்டின் முதலாவது, இரண்டாவது திட்டங்களுக்குச் செலவிடப்பட்ட மொத்தத் தொகை ரூ. 266 கோடியாகும். அதாவது முதல் திட்டத்தில் ரூ. 80 கோடியும், இரண்டாவது திட்டத்தில் ரூ. 186 கோடியும் செலவிடப்பட்டது.

திட்ட வேலைகளின் பயனாக இந்தப் பத்து ஆண்டுகளில் தமிழ் நாட்டில் வேளாண்மை, பாசனம், கல்வி, மின்சாரம், தொழில்கள், சமுதாய நலன், போக்குவரத்து ஆகிய எல்லாத் துறைகளிலும் நல்ல வளர்ச்சி ஏற்பட்டுள்ளது.

முதல் திட்ட ஆரம்பத்தில் மாநிலத்தில் உணவு உற்பத்தி 38 லட்சம் டன்னுக இருந்தது. இரண்டு திட்டங்களை நிறைவேற்றிய தின் பயனுக உற்பத்தி இப்போது 53 லட்சம் டன் ஆக உயர்ந் துள்ளது. ஏக்கர் விகித மகசூலை அதிகரிக்கும் முறையில் உயர்தர வித்துக்களைப் பரப்புவதிலும் ஜப்பானியமுறைச் சாகுபடியை அனு சரிப்பதிலும் தீவிர கவனம் செலுத்தப்பட்டது. அதன் விளைவாக மாநிலத்தில் நெல் சாகுபடியாகும் பரப்பு முழுவதிலும், புஞ்செய் தானியங்கள் சாகுபடியாகும் பரப்பில் 45 சதவிதத்திலும் உயர்தர வித்துக்கள் பயன்படுத்தப்படுகின்றன. சென்ற பத்து ஆண்டு களில் வேளாண்மை, சமுதாயநலத் திட்டங்களின்கீழ் சுமார் ரூ. 42 கோடி செலவில் இந்த அபிவிருத்தி வேலைகள் நடந்துள்ளன.


பாசனமும், மின்சாரமும்

தமிழ் நாட்டில் பாசன வசதிகளைப் பெருக்கச் சென்ற பத்து ஆண்டுகளில் ரூ. 37 கோடிக்குமேல் செலவிடப்பட்டது. 14 பாசனத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. இதன் விளைவாக 4·65 லட்சம் ஏக்கர் நிலங்கள் புதிதாகப் பாசனம் பெற்றன. ரூ 35 கோடி செலவாகக் கூடிய பரம்பிக்குளம் - ஆளியாறு திட்ட வேலை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இதனுல் 2·4 லட்சம் ஏக்கர் பாசனம் பெறும்.

மின்சாரப் பெருக்கம் தமிழ் நாட்டின் மற்ரெரு முக்கிய சாதனை யாகும். சென்ற பத்து ஆண்டுகளில் மின்சார அபிவிருத்திக்காக மட்டும் சுமார் ரூ. 110 கோடி செலவிடப்பட்டிருக்கிறது. இதன் விளைவாக மின்சார வசதி பெற்ற கிராமங்களின் எண்ணிக்கை 1,610-லிருந்து 11,000-ஆக அதிகரித்துள்ளது. மின்சாரத்தால் இயங்கும் பம்பு செட்டுகளின் தொகை சென்ற பத்து ஆண்டுகளில் சுமார் 14,000-லிருந்து 1,16,000-ஆக அதிகரித்துள்ளது.

கல்வி

முதல் திட்ட ஆரம்பத்தில் மாநிலத்தில் சுமார் 16,000 ஆரம் பப் பள்ளிகள் இருந்தன. தற்போது ஆரம்பப் பள்ளிகளின் தொகை கிட்டத்தட்ட 27,000 ஆகும். 1951-ல் பள்ளிகளுக்குச் சென்ற குழந்தைகள் தொகை 18·53 லட்சம். 1961-இல் பள்ளிகளுக்குச் செல்லும் குழந்தைகள் தொகை 33.90 லட்சம் ஆகும். குழந்தை கள் பள்ளிக்கு வரும்படிச் செய்வதில் ஊக்கமளிப்பதற்காக நண் பகல் உணவுத் திட்டத்தை அரசாங்கம் மேற்கொண்டது. இத் திட்டப்படி, ஒவ்வொரு ஏழைக் குழந்தைக்கும் பத்துக் காசு செலவில் இலவசமாக உணவு அளிக்கப்படுகிறது. மாநிலத்தில் சுமார் 10 லட்சம் குழந்தைகள் இத்திட்டத்தால் பயனடைகின்ற னர். இலவச நண்பகல் உணவு மட்டுமின்றிச் சுமார் 3·6 லட்சம்



நெய்வேலியில் உருவாகிவரும் புதிய அனல் மின்சார நிலையம்

குழந்தைகளுக்கு இலவசமாக நிகராடை வழங்கப்பட்டது. பள்ளிச் சீரமைப்பு மகாநாடுகள் நடத்துவதும் கல்வித் துறையில் ஒரு குறிப்பிடத்தக்க நடவடிக்கையாகும். இத்திட்டத்தின் மூலம் ஆங்காங்கே உள்ள பொதுமக்கள் பள்ளிக்கு வேண்டிய வசதிகளைச் செய்ய முன்வருகின்றனர். ரொக்கமாகவும் பொருளாகவும் உதவுகின்றனர். இந்த வகையில் அளிக்கப்பட்ட உதவியின் மதிப்பு ரூ. 6·47 கோடி.

தொழில் வளர்ச்சி


தொழில் நுட்பக் கல்வி வசதியில் இரண்டாவது , திட்டக் காலத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. மாநிலத்தில் பொறியியல் கல்லூரிகளில் இரண்டாவது திட்ட ஆரம்பத்தில் ஆண்டு ஒன்றுக்கு மொத்த இடவசதி 662 ஆகும். இரண்டாம் திட்ட முடிவில் இந்த இடவசதி 1,157-ஆக அதிகரித்தது. பாலிடெக்னிக்குகளில் இடவசதி சென்ற 5 ஆண்டுகளில் ஆண்டுக்கு 822-லிருந்து 2,910-ஆக அதிகரித்துள்ளது.

தமிழ் நாட்டின் தொழில் வளர்ச்சியும் குறிப்பிடத்தக்க முன்னேற்றமடைந்துள்ளது. நெய்வேலிப் பழுப்பு நிலக்கரிச் சுரங்கத் திட்டம், தமிழ் நாட்டில் மத்திய அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட மாபெரும் தொழில் முயற்சியாகும். இத் திட்டத்துக்குச் செலவு மதிப்பு 110 கோடி ரூபாய். இந்திய அரசாங்கம் இதுவரை

ரூ. 49 கோடி முதலீடு செய்துள்ளது. பழுப்பு நிலக்கரி எடுக்கும் வேலை தொடங்கி விட்டது. நெய்வேலியில் புதிய அனல் மின்சார நிலையம் 1961-62 இல் உற்பத்தி தொடங்கும். முதல் கட்டத்தில் 2·5 லட்சம் கிலோவாட் உற்பத்தித் திறனுடையதாக அது இருக்கும். 1.52 லட்சம் டன் ஹூரியா உற்பத்தி செய்யக்கூடிய ரசாயன உரத்தொழிற்சாலையும், 3·5 லட்சம் டன் சுட்ட நிலக்கரிக் கட்டிகள் தயாரிக்கக் கூடிய ஒரு தொழிற்சாலையும் ஏற்படுத்துவதற்கு வகை செய்யப்படுகிறது. நெய்வேலி ஒருங்கிணைந்த பழுப்பு நிலக்கரித் திட்டத்தின் பெரிய தொழில் பிரிவுகளான இந்த வேலைகள் வெற்றிகரமாக நிறைவேறுவதை யொட்டித் தமிழ் நாட்டின் தொழில் வளர்ச்சி கணிசமான முன்னேற்றத்தைக் காணும்.

சென்னை பெரம்பூரில் உள்ள ரயில் பெட்டித் தொழிற்சாலையும் முக்கியமான ஒரு தொழில் அபிவிருத்தி வேலையாகும். இதுவும் மத்திய அரசாங்கத் தொழில் திட்டத்தில் சேர்ந்தது. ரூ. 7·35 கோடி செலவில் அமைந்த இந்தத் தொழிற்சாலையில் ஆண்டு ஒன்றுக்கு 620 பெட்டிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஆண்டுக்கு 300 பெட்டிகளுக்கு ஆசன வசதிகள் முதலியன செய்யக் கூடிய தொழில் பிரிவு புதிதாக ரூ. 3·60 கோடி செலவு மதிப்பில் ஏற்படுத்தப் பட்டு வருகின்றது. ரயில் பெட்டித் தொழிற்சாலையில் சுமார் 7,800 பேர் வேலை செய்கிறார்கள்.

நெய்வேலி சுரங்கப் பகுதியில் மண்ணை அகற்றும் மாபெரும் யந்திரம்



ரயில் பெட்டி உற்பத்தியானது, பல துணைத் தொழில்கள் பெருகவும் வாய்ப்பு அளித்திருக்கின்றது. உருக்கு வார்ப்புகள், ஸ்பிரிங்குகள், ரப்பர் சாமான்கள் முதலிய சுமார் 200 வகைப்பொருள்கள் உள்நாட்டுத் துணைத் தொழில் நிறுவனங்களிடமிருந்து பெறப்படுகின்றன. இதனால் சென்னை நகரின் சுற்றுப் பிரதேசங்களிலும், மற்றும் நாட்டில் பல்வேறு இடங்களிலும் துணைத்தொழில்கள் பெருக ஊக்கம் ஏற்பட்டுள்ளது.

தனியார் துறை

தமிழ் நாட்டில் தனியார் துறையில் சிமிட்டி, துணி ஆலைகள், இஞ்சினிரிங் தொழில்கள் ஆகியவற்றின் வளர்ச்சி குறிப்பிடத்தக்கதாகும். மாநிலத்தில் 1934-க்கும் 1946-க்கும் இடையே மூன்று சிமிட்டித் தொழிற்சாலைகள் ஏற்பட்டன. இந்தத் தொழிற்சாலைகளின் உற்பத்தித் திறன் முன்பு 7·58 லட்சம் டன்களாக இருந்தது. இப்பொழுது உற்பத்தி 8·13 லட்சம் டன்களாக உயர்ந்துள்ளது. ராஜபாளையம் பகுதியில் ஒரு சிமிட்டித் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் மொத்த உற்பத்தித் திறன் ஆண்டுக்கு 1·94 லட்சம் டன்களாகும். இத் தொழிற்சாலையில் அரசாங்கம் ரூ. 10 லட்சம் முதலீடு செய்துள்ளது. மூன்றும் திட்டக் காலத்தில் இரண்டு சிமிட்டித் தொழிற்சாலைகளைப் புதிதாகத் தொடங்கச் சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

துணி உற்பத்தித் தொழிலைப் பொறுத்த வரையில் இந்தியாவில் 131 லட்சம் கதிர்கள் இருக்கின்றன. இவற்றில் 31 லட்சம் கதிர்கள் தமிழ் நாட்டு ஆலைகளில் உள்ளன. 1951இல் மாநிலத்தில் 71 ஆலைகள் இருந்தன. தற்போது 134 ஆலைகள் இருக்கின்றன. துணி ஆலைத் தொழிலினால் 1950 இல் 80,000 பேர்களுக்கு மட்டுமே வேலை கிடைத்தது. இன்று சுமார் 1·2 லட்சம் பேர்களுக்கு வேலை கிடைத்து வருகிறது.

தனியார் துறையின்கீழ் வண்டலூரில் உள்ள ஸ்டாண்டர்டு மோட்டார் கம்பெனி, சென்னை அருகே திருவொற்றியூரில் உள்ள ராயல் என் பீல்டு மோட்டார் சைக்கிள் தொழிற்சாலை, அம்பத்தூரில் உள்ள டி. ஐ. சைக்கிள் கம்பெனி, எண்ணூரில் உள்ள அசோக் லேலண்ட் லிமிடெட் ஆகிய தொழில்கள் நல்ல முறையில் வளர்ச்சியடைந்து வருகின்றன. மேட்டூர் அருகில் மேட்டூர் அலுமினியத் தொழிற்சாலை அமைக்கப்பட்டு வருகிறது. ஈரோட்டுக்கருகில் சேஷசாயி காகிதத் தொழிற்சாலை அமைக்கப்பட்டு வருகிறது; இதில் அரசாங்கம் ரூ. 1 கோடி முதலீடு செய்ய முன்வந்துள்ளது.

திருநெல்வேலி மாவட்டம் சாகுபுரத்தில் தாரங்கதரா ரசாயனத் தொழிற்சாலை ஆண்டு ஒன்றுக்குச் சுமார் 80,000 டன் காஸ்டிக்

சோடா உற்பத்தி செய்து வருகின்றது. காஸ்டிக் சோடா தயாரிப்பில் இது இந்தியாவிலேயே பெரிய தொழிற்சாலையாகும்.

கோவை மாவட்டம் மேட்டுப்பாளையத்துக்கருகில் ரெயான் என்னும் செயற்கைப் பட்டுத் தொழிற்சாலை நிர்மாணிக்கப்பட்டு வேலை தொடங்கி விட்டது. இத் தொழிற்சாலையில் அரசாங்கம் ரூ. 10 லட்சம் முதலீடு செய்துள்ளது.


அம்பத்தூரில் உள்ள டன்லப் ரப்பர் கம்பெனி, மேட்டுப் பாளையம் செயற்கை வைரத் தொழிற்சாலை ஆகியனவும் தனியார் துறையில் குறிப்பிடத்தக்க தொழில் அமைப்புக்களாகும்.

சர்க்கரை ஆலைகள்

ஆந்திர மாநிலப் பிரிவினைக்குப்பின் தமிழ் நாட்டில் நெல்லிக் குப்பம், புகளூர், பாண்டிய ராஜபுரம் ஆகிய இடங்களில் மூன்று சர்க்கரை ஆலைகள் இருந்தன. பின் இரண்டாம் திட்டக் காலத்தில் தஞ்சாவூர் மாவட்டம் வடபாதி மங்கலத்திலும், திருச்சி மாவட்டம் பேட்டைவாய்த்தலையிலும் இரு சர்க்கரை ஆலைகள் அமைக்கப் பட்டன. இவையல்லாமல் உடுமலைப்பேட்டை, ஆம்பூர், படாளம் ஆகியவைகளில் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் நிறுவப்பட் டுள்ளன. கூட்டுறவு நூற்பு ஆலைகள் ஏற்படுத்துவதில் அரசாங்கம் ரூ. 39 லட்சம் முதலீடு செய்துள்ளது.

சிறு தொழில்களை அபிவிருத்தி செய்வதில் அரசாங்கத் துறையிலும், தனியார் துறையிலும் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. கிண்டியிலும், விருதுநகரிலும் தொழிற் பண்ணைகள் அமைக்கப் பட்டன. ஈரோடு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, பேட்டை, மார்த்தாண்டம் ஆகிய இடங்களில் தொழில் பேட்டைகள் அமைக் கப்பட்டுள்ளன. காட்பாடியில் ஒரு தொழில்பேட்டை உருவாகி வரு கிறது. இவற்றின் மூலம் சிறு தொழில்கள் வளர வாய்ப்பு ஏற் பட்டுள்ளது. பயிற்சி—உற்பத்தி நிலையங்கள் 44 ஏற்படுத்தப் பட்டுள்ளன. இந்தத் தொழில் வளர்ச்சி முக்கியமாக இரண்டாவது திட்டத்தில் ஏற்பட்டதாகும்.

சென்ற பத்து ஆண்டுகளில் சாலை வசதி 21,198 மைல்களி லிருந்து 25,878 மைல்களாக அதிகரித்துள்ளது.



பெரிய துறைமுகங்களையும், ரயில்வேக்களையும் அபிவிருத்தி செய்வது மத்தியத் திட்டத்தின் ஒரு பகுதியாகும். உலக பாங்கியிட மிருந்து கடன் உதவியுடன் சென்னைத் துறைமுகத்தை ரூ. 16 கோடி செலவில் அபிவிருத்தி செய்வதற்கான திட்டமும், தாம்பரம்—செங் கற்பட்டு—விழுப்புரம் இடையில் மின்சார ரயில் அமைப்புக்கான திட்டமும் செயலாக்கப்பட்டு வருகின்றன.

மருத்துவ வசதிகள்

முதல் திட்ட ஆரம்பத்தில் மாநிலத்தில் உள்ள மருத்துவ மனை களில் மொத்தம் 8,500 படுக்கைகள் இருந்தன. தற்போது படுக்கை களின் எண்ணிக்கை 15,000 ஆக அதிகரித்துள்ளது. செங்கற் பட்டு, பாளையங்கோட்டை, இராமநாதபுரம், கோயம்புத்தூர், தஞ்சாவூர், வேலூர், கடலூர், சேலம் ஆகியவைகளில் உள்ள மாவட்டத் தலைமை மருத்துவ மனைகளுக்குக் கட்டடங்கள் கட்டும் வேலை ரூ. 53 லட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டது. தஞ்சா வூரில் ரூ. 130 லட்சம் செலவில் புதிதாக ஒரு மருத்துவக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. கிராமப் புறங்களில் 110 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் புதிதாக ஏற்படுத்தப்பட்டன.

கூட்டுறவு

1955-56-ல் கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் குடியானவர் களுக்கு ரூபாய் 6 கோடி வேளாண்மைக் கடன் வசதி அளிக்கப் பட்டது. 1960-61-ல் இது ரூபாய் 25 கோடியாக அதிகரித்திருக் கிறது. மாநிலத்தில் தற்போது எல்லாக் கிராமங்களும் கூட்டுறவுச் சங்க அனுகூலங்களைப் பெற்று வருகின்றன. முழுக் கடன் உதவித் திட்டத்தின் கீழ் 43 வட்டாரங்களிலுள்ள கிராம மக்கள் பயனடை கின்றனர். இவர்கள் தங்களுக்குத் தேவைப்படும் குறைந்த காலக் கடன் வசதிகள் அனைத்தையும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் பெற வகை செய்யப்பட்டிருக்கிறது. இக் குடியானவர்களுக்கு ஜாமீன் இன்றி முன் பணம் கொடுப்பதால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஏற் படக்கூடிய நஷ்டத்திற்கு அரசாங்கம் ஈடு செய்யும். தஞ்சாவூர் மாவட்டத்தில் தீவிரச் சாகுபடித் திட்டம் அமுலிலிருந்து வருகிற 23 வட்டாரங்களும் இதில் அடங்கும்.

தமிழ் நாடு 375 அபிவிருத்தி வட்டாரங்களாகப் பிரிக்கப் பட்டுள்ளது. 363 வட்டாரங்களுக்குப் பஞ்சாயத்து யூனியன்கள் அமைக்கப்பட்டுள்ளன. அடிமட்டத்தில் இந்த ஜனநாயக நிர்வாக முறையானது நாட்டின் அபிவிருத்திக்கு உறுதுணையாக இருக்கும்.

சென்ற பத்து ஆண்டுகளில் பின்னடைந்த வகுப்பினர் நிலையில் அபிவிருத்தி சம்பந்தமாக முனைப்பான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டன. முதல் திட்டம் முதற்கொண்டு ஹரிஜன நலத் திட்டங்களுக்காக ஆண்டு ஒன்றுக்கு ஒரு கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டு வந்தது. அத்துடன் புதிய ஹரிஜன நலத் திட்டங் களுக்காக ஆண்டுதோறும் மேற்கொண்டு சுமார் 2 கோடி ரூபாய் செலவு செய்யப்படுகிறது. சென்ற பத்து ஆண்டுகளில் சுமார் ரூ. 1·71 லட்சம் உபகாரச் சம்பளங்கள் வழங்கப்பட்டன. ரூ.27,000 உணவு மானிய உதவிகள் வழங்கப்பட்டன. ஹரிஜனங் களுக்கான வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் 20,200 வீடுகள் கட்டப்பட்டன.

வீட்டு வசதி

சென்னை நகரில் சேரிச் சீரமைப்புத் திட்டத்தின்கீழ் 478 புதிய வீடுகள் கட்டித் தரப்பட்டுள்ளன; 1,546 மனை இடங்கள் அபி விருத்தி செய்து தரப்பட்டுள்ளன.

தொழிலாளர்களுக்காக அரசாங்க உதவியுடன் வீடு கட்டும் திட்டத்தின்கீழ் 1,377 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன; 239 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன.

குறைந்த வருமானக்காரர்களுக்கு வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் 3,160 வீடுகள் கட்டப்பட்டன. 467 மனை இடங்கள் ஏற்படுத்தித் தரப்பட்டன. இந்திய ஆயுள் இன்சூரன்ஸ் கார்ப்பரேஷன் நிதி உதவியுடன் கூடிய நடுத்தர வருமானக்காரர்களுக்கான வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் 120 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன; 400 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. போலீஸ்காரர்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கும் திட்டத்தின்கீழ் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 50 லட்சம் செலவிடப்பட்டது. இத்திட்டத்தின்கீழ், இரண்டாவது திட்டக் காலத்தில் ரூ. 260 லட்சம் செலவில் சுமார் 4,200 வீடுகள் கட்டப்பட்டன.

வேளாண்மைப் பெருக்கம், மின்சார வசதிகளில் பெரும் முன் னேற்றம், நெய்வேலிப் பழுப்பு நிலக்கரித் திட்டவேலை, தொழில் நுட்பக் கல்வியில் அதிகப்படியான பயிற்சி வசதிகள் முதலியன காரணமாகத் தமிழகத்தின் தொழில் வளத்துக்கும் பொருளாதார மேம்பாட்டுக்கும் பலமான அஸ்திவாரம் அமைக்கப்பட்டுவிட்டது. அரசாங்கத் தொழில் துறை, தனியார்துறை இரண்டிலுமே இந்த முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

தமிழ் நாட்டில் மாவட்டவாரியாக முன்னேற்ற வேலைகளைத் தொகுத்துத் தரும் நூல் வரிசையில் செங்கற்பட்டு மாவட்டத்தின் அபிவிருத்தி வேலைகளை அடுத்துவரும் அத்தியாயங்களில் காணலாம்.

"பாலாறு வளம் சுரந்து நல்க மல்கும்
பாலைவிரி மணங்கமழ்பூஞ் சோலை தோறும்
காலாறு கோலிஇசை பாட நீடும்
களிமயில்நின் றாடும் இயல்தொண்டை நாடு"

செழிக்கும் செங்கற்பட்டு

தொண்டை மண்டலம் தமிழ் நாட்டின் வட பகுதி ஆகும். இம் மண்டலத்தின் பழைய எல்லை: கிழக்கே கடல், மேற்கே பவளமலை, வடக்கே திருவேங்கடம் என்னும் திருப்பதி, தெற்கே தென் பெண்ணை ஆறு.

இம் மண்டலம் முற்காலத்தில் சோழ நாட்டின் ஒரு பகுதியாக இருந்தது. கரிகாற் சோழனுக்குப் பின் வென்வேற் கிள்ளி என்னும் சோழன் மகனான தொண்டைமான் இளந்திரையன் காஞ்சீபுரத்தைத் தலைநகராகக் கொண்டு இந்நாட்டை ஆண்டான் என்றும், அவன் பெயரே இந்நாட்டிற்கு வந்ததென்றும் கூறுவர். பிற்காலத்தே இது பல்லவர்களின் ஆட்சிக்கு உட்பட்டு இருந்தது. அவர்கள் காலத்தும் காஞ்சீபுரமே தலைநகர்.

தொண்டை நன்னாடு சான்றோர் உடைத்து என்பர் பெரியோர். "வையம் பெறினும் பொய் சொல்ல மாட்டார் தொண்டை நாட்டாரே" என்றும் ஒருவர் பாடியுள்ளார்.

தொண்டை நாடு புகழ்மிக்க பல பெரியோர்களைத் தமிழ் நாட்டிற்கு அளித்துள்ளது. பண்டைக் காலத்தில் உலகப் புகழ் பெற்றிருந்த நாளந்தாப் பல்கலைக் கழகத்தின் தலைவர் தர்மபாலர்

காஞ்சியில் பயின்றவர் என்று அறியப்படுகிறது. பாரதம் பாடிய பெருந்தேவனார், பெரிய புராணம் பாடிய சேக்கிழார், திருக்குறளுக்கு அருமை பெருமை வாய்ந்த உரை எழுதிய பரிமேலழகர், இராமாநுஜர், வெண்பாவில் வல்ல புகழேந்தி ஆகிய பெரியோர்கள் தொண்டை நாட்டின் செல்வங்கள் ஆவர்.

"தொன்மை மேன்மையில் நிகழ் பெருந் தொண்டை நன்னா"ட்டின் ஒரு பகுதியாக விளங்குவது செங்கற்பட்டு மாவட்டம். இது தமிழ் நாட்டின் கிழக்குக் கரையில் உள்ளது. இதன் வடக்கில் ஆந்திர மாநிலத்தின் நெல்லூர் மாவட்டமும், தெற்கில் தென் ஆர்க்காடு மாவட்டமும், மேற்கில் வட ஆர்க்காடு, சித்தூர் மாவட்டங்களும், கிழக்கில் வங்காள விரிகுடாவும் எல்லைகளாக உள்ளன. தமிழ் நாட்டின் தலைநகராக விளங்கும் சென்னை மாநகர், மூன்று புறங்களிலும் இம் மாவட்டத்தால் சூழப்பட்டுள்ளது.

இம் மாவட்டத்தில் 115 மைல் நீளத்திற்குக் கடற்கரை யிருக்கிறது. படாஸ்கர் தீர்ப்பின் விளைவாகச் சித்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த திருத்தணி வட்டம் செங்கற்பட்டு மாவட்டத்தோடு சேர்க்கப்பட்டுள்ளது; பொன்னேரி, திருவள்ளூர் வட்டத்திலிருந்து சில பகுதிகள் ஆந்திரப் பிரதேசத்திற்கு மாற்றப்பட்டுள்ளன.

செங்கற்பட்டு நகரம், சென்னை மாநகரிலிருந்து 36 மைல் தொலைவில் உள்ளது. இது ஒரு ரயில் சந்திப்பு. மாவட்டத்தின்



தலைநகரமாகவும் விளங்குகிறது. செங்கழுநீர்ப்பட்டு என்பது மருவிச் செங்கற்பட்டு ஆயிற்று என்பர். ஒரு காலத்தில் இங்குள்ள நீர் நிலைகளில் செங்கழுநீர்ப் பூக்கள் நிறைந்திருக்குமாம். இங்குப் பெரிய ஏரி ஒன்று உள்ளது. ஒரு காலத்தில் விஜய நகர அரசர்களின் தலைநகரமாக இருந்தது. இங்கு விஜய நகர அரசர்கள் கட்டிய கோட்டை இருக்கிறது. இந்நகரத்திற்கு அருகில் புகழேந்திப் புலவர் பிறந்த இடமாகிய பொன்விளைந்த களத்தூர் இருக்கிறது.

மக்கள் தொகை

1961 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி செங்கற்பட்டு மாவட்டத்தின் பரப்பளவு சுமார் 3,188 சதுர மைல்கள் ஆகும். மக்கள் தொகை 21·9 லட்சம். நிர்வாக வசதிக்காக மாவட்டம் மூன்று ரெவின்யூ டிவிஷன்களாகப் பிரிக்கப் பட்டிருக்கிறது. இவற்றில் 8 வட்டங்களும், 4 துணைவட்டங்களும் அடங்கியுள்ளன. விவரம் பின்வருமாறு:—

ரெவின்யூ டிவிஷன்	தலைமையிடம்	வட்டம் அல்லது துணை வட்டம்
திருவள்ளூர்	திருவள்ளூர்	1. பொன்னேரி வட்டம்
		2. திருவள்ளூர் வட்டம்
		3. திருத்தணி வட்டம்
		4. கும்மிடி பூண்டி துணை வட்டம்
		5. பெண்ணலூர்பேட்டை துணை வட்டம்
		6. பள்ளிப்பட்டு துணை வட்டம்
சைதாப்பேட்டை	சைதாப் பேட்டை	1. சைதாப்பேட்டை வட்டம்
		2. ஸ்ரீ பெரும்புதூர் வட்டம்
செங்கற்பட்டு	செங்கற்பட்டு	1. செங்கற்பட்டு வட்டம்
		2. மதுராந்தகம் வட்டம்
		3. காஞ்சீபுரம் வட்டம்
		4. உத்திரமேரூர் துணை வட்டம்

இம் மாவட்டம் பெரும்பாலும் சமவெளி. சில இடங்களில் குன்றுகள் உள்ளன. பறங்கிமலை, திருநீர்மலை, பல்லாவரம் மலை, திருக்கழுக்குன்றம் மலை, திருத்தணி மலை ஆகியவை கோயில் கட்டப்பட்டுள்ள முக்கியமான மலைகள் ஆகும்.



திருக்கழுக்குன்றம்

மைசூர் மாநிலத்தில் உற்பத்தியாகும் பாலாறு, மாவட்டத்தில் காஞ்சீபுரத்திற்கு அருகில் மேற்கே ஓடுகிறது. வட ஆர்க்காடு மாவட்டம் காவேரிப்பாக்கம் ஏரியின் உபரிநீர் கொற்றலையாருகத் திருவள்ளூர், பொன்னேரி வட்டங்களின் வழியாக ஓடுகிறது. இதன் தண்ணீர் பூண்டி நீர்த்தேக்கம், சோழவரம் ஏரி, புழலேரி ஆகியவற்றில் தேக்கி வைக்கப்படுகிறது. இவற்றிலிருந்து சென்னை மாநகருக்குக் குடிநீர் வசதி அளிக்கப்படுகிறது. இன்னொரு முக்கியமான ஆறு ஆரணியாறு ஆகும். மாவட்டத்தில் பொன்னேரி வட்டத்திற்தும், திருவள்ளூர் வட்டத்திற்கும் இடையில் ஓடி, பழவேற்காடு வழியாகக் கடலில் கலக்கிறது. இவற்றைத் தவிர, கூவம், அடையாறு, கிளியாறு, கல்லாறு போன்ற சிறு ஓடைகளும் இருக்கின்றன. இவ் ஆறுகளும் ஓடைகளும் ஆண்டில் பெரும் பகுதி வற்றிக் காணப்படுகின்றன.

பருவ நிலை


செங்கற்பட்டு மாவட்டம் பொதுவாக உஷ்ணப் பிரதேசம் ஆகும். சராசரி உஷ்ணநிலை 82 டிகிரி பாரன்ஹீட். இது ஆண்டில் 58-லிருந்து 110 டிகிரி பாரன் ஹீட்வரை வேறுபடுகிறது. மிக அதிகமாயுள்ள உஷ்ணத்தைக் கடற்காற்று தணிக்கிறது. மாவட்டத்தில் பொதுவாக நல்ல ஆரோக்கியமான சூழ்நிலை நிலவுகிறது. இருந்தபோதிலும், காலரா, அம்மை ஆகிய கொள்ளை நோய்கள் எப்பொழுதாவது பிடிக்கின்றன.

மாவட்டத்தில் பெய்யும் ஆண்டுச் சராசரி மழையளவு 1,187·9 மில்லி மீட்டர் ஆகும். மாவட்டத்தின் பல்வேறு வட்டங்களிலும் பெய்யும் மழையளவு பின் வருமாறு:—

வட்டத்தின் பெயர்	சராசரி மழையளவு அங்குலங்களில்
பொன்னேரி (கும்மிடி பூண்டியும் சேர்ந்து)	47·29
திருவள்ளூர் (பெண்ணலூர் பேட்டையும் சேர்ந்து)	43·45
ஸ்ரீ பெரும்புதூர்	42·59
சைதாப்பேட்டை	50·99
காஞ்சீபுரம் (உத்திரமேரூர் துணை வட்டமும் சேர்ந்து)	43·35
செங்கற்பட்டு	49·09
மதுராந்தகம்	47·29
திருத்தணி (பள்ளிப்பட்டு துணை வட்டமும் சேர்ந்து)	47·00

உள்நாட்டுப் பகுதிகளைவிடக் கடற்கரைப் பகுதிகளில் நல்ல மழை பெய்கிறது. பருவ மழைக்கு முன்பு பெய்யும் மழை அநேகமாக

மாமல்லபுரம் கடற்கரைக் கோயில்





வேடந்தாங்கல் பறவைப் புகலிடம்

மாவட்டம் முழுவதும் சீராகப் பெய்கிறது. தென் மேற்குப் பருவமழை வடக்கைக் காட்டிலும் தெற்கில் அதிகமாகப் பெய்கிறது. வடகிழக்குப் பருவமழை உள்நாட்டுப் பகுதிகளை விடக் கடற்கரையை அடுத்துள்ள வட்டங்களில் மிகஅதிகமாகப் பெய்கிறது. இம் மாவட்டம் பருவமழையை நம்பியிருக்கிறது. ஆகையினால், மழை தவறிப்போகும் காலங்களில் கஷ்டமான நிலை உண்டாகிறது.

காலவாய்

பக்கிங்காம் கால்வாய் மதுராந்தகம், செங்கற்பட்டு, சைதாப் பேட்டை, பொன்னேரி வட்டங்களின் வழியாகச் செல்லுகிறது. சென்னை மாநகருக்கும், கால்வாயின் இருபுறங்களிலும் உள்ள கிராமங்களுக்கும் பொருள்களைப் படகுகளில் ஏற்றிச் செல்லப் போக்குவரத்துக் கால்வாயாக இது உதவுகிறது. இதனால் கடற் கரைப் பகுதிகளில் கிடைக்கும் சவுக்கு, உப்பு போன்ற பொருள் களைக் குறைந்த செலவில் கொண்டு செல்ல முடிகிறது.

செங்கற்பட்டு மாவட்டத்தில் 40 மைல் நீளத்திற்கு பிராட் கேஜ் இருப்புப் பாதைகளும், 90 மைல் நீளத்திற்கு மீட்டர் கேஜ் இருப்புப் பாதைகளும் இருக்கின்றன, ஸ்ரீபெரும்புதூர் தவிர்த்த மற்ற


எல்லா வட்டத் தலைமையிடங்களுக்கும் ரயில் பாதைகள் இருக்கின்றன. சைதாப்பேட்டை வட்டத்தைச் சேர்ந்த தாம்பரத்திலிருந்து சென்னை பீச் வரை மின்சார ரயில் ஓடுகிறது. இந்த வசதியை வண்டலூர் வரை விஸ்தரிக்கும் வேலை நடைபெறுகிறது.

மாவட்டத்தில் வட்டத் தலைமையிடங்களும், துணைவட்டத் தலைமையிடங்களும், வட்டாரத் தலைமையிடங்களும் அஞ்சல் வசதியைப் பெற்றுள்ளன. எனினும், இன்னும் அந்த வசதியை அதிகரிக்க வேண்டியுள்ளது.

காண வேண்டியவை

கலையழகும், இயற்கை யெழிலும் மிகுந்த இடங்களும் இம் மாவட்டத்தில் பல இருக்கின்றன. கடல் மல்லையாகிய மாமல்லபுரம் கி பி. 7 ஆம் நூற்றாண்டில் மகேந்திர பல்லவனால் அழகு மிக்க கலைக்கூடமாக உருவாக்கப் பட்டது. கல்லும் கதைசொல்லும் இக் கவின் மிக்க இடத்திற்கு நம் நாட்டினரும், அயல் நாட்டினரும் அதிக அளவில் வந்து செல்லுகின்றனர். ஆகையினால், நல்ல சாலை வசதி செய்து தரப்பட்டுள்ளது. சென்னை மாநகரிலிருந்து 53 மைல் தொலைவிலும், செங்கற்பட்டிலிருந்து 18 மைல் தொலைவிலும் மாமல்லபுரம் அமைந்துள்ளது. பல்லவ மன்னர்களின் காலத்தில் பெருமை மிக்க கடற்கரைப் பட்டினமாக இது புகழ்படைத்திருந்தது. தென் இந்தியாவின் கலைச்செழிப்புக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக இன்று மாமல்லபுரம் திகழ்கிறது. சுற்றுப்

ஸ்ரீபெரும்புதூர்க் கோயில்





வரதராஜப் பெருமாள் கோயில்—காஞ்சீபுரம்

பயணக்காரர்களின் வசதிக்காக ரூ. 7 லட்சம் செலவில் இங்கு ஒரு சுற்றுலா விடுதி கட்டப்பட்டுள்ளது.

செங்கற்பட்டு மாவட்டத்தில் காண வேண்டிய இடங்களில் காஞ்சிமா நகரும் ஒன்ருகும். இது சென்னை மாநகரிலிருந்து 47 மைல் தொலைவில் தென்மேற்கில் அமைந்துள்ளது. இந்தியாவிலுள்ள புனித நகரங்களுள் ஒன்ருகக் காஞ்சி கருதப்படுகிறது; மிகப் பழமை வாய்ந்த நகரம். பல்லவர், சோழர், விஜயநகர மன்னர் ஆகியோர் காலங்களில் இது தலைநகராக இருந்து வந்துள்ளது. கோயில்களும், விழாக்களும் மலிந்த இத்திருநகர் பட்டு நெசவுக்கும் புகழ் பெற்று விளங்குகிறது.

திருத்தணி

திருத்தணி ஒரு சிறந்த முருகன் திருப்பதியாக விளங்குகிறது. முருகப்பெருமான் சூரனை வென்றபிறகு போர்வினை தணிந்து, வள்ளி தெய்வயானையுடன் வீற்றிருக்கும் தலம் என்னும் பொருளில் தணிகை யென்றும், செருத்தணி யென்றும் பெயர் பெற்றது என்பர். மலையுச்சியில் கோயில் இருக்கிறது.

முருகனைப் பாடிய அருணகிரியார், இங்கு முருகனுடைய ஆடற் சிறப்பைக் கூறுகிருர். திருத்தணி மலைக் குன்றுகளாலும், பள்ளத் தாக்குகளாலும் இயற்கையழகு மிக்கது.


மாவட்டத்தில் மற்ருெரு புனிதமான இடம் திருக்கழுக்குன்றம் ஆகும். செங்கற்பட்டுக்கும் மாமல்லபுரத்திற்கும் இடையில் இவ்வூர் அமைந்துள்ளது. சுமார் 500 அடி உயரமுள்ள திருக்

கழுக்குன்ற மலையில் ஒரு சிவன்கோயில் இருக்கிறது. நாள் தவறாமல் இம்மலைக்கு இரண்டு கழுகுகள் நண்பகல் வேளையில் வந்து செல்லுகின்றன. அவற்றுக்கு இங்கு உணவு படைக்கப் படுகிறது. இந்தக் கழுகுகளால் இத்தலம் புனிதமானதாகக் கருதப்படுகிறது.

இந்தியாவிலுள்ள இரு பறவைப் புகலிடங்களில் ஒன்று செங்கற்பட்டு மாவட்டத்தில் அமைந்துள்ளது. வேடந்தாங்கல் என்னும் இந்த இடம் சென்னை மாநகரிலிருந்து 53 மைல் தொலைவில் உள்ளது. இங்குக் கடப்ப மரங்கள் நிறைந்த சுமார் 74 ஏக்கர் பரப்புள்ள ஏரியில் பல்வேறு தொலை தூரங்களிலிருந்தும் வரும் வித விதமான நீர்ப் பறவைகள் தங்கிக் குஞ்சு பொறிக்கின்றன. சுற்றுப் புறங்களில் பகலெல்லாம் இரை தேடச் சென்றுவிட்டு, மாலையில் கடப்ப மரக் கிளைகளில் ஓய்வெடுக்கக் கூடுகின்றன. செப்டம்பர் முதல் மார்ச் மாதம்வரை பறவைகள் இவ்வாறு ஆண்டுதோறும் வந்து செல்லுகின்றன. ஏரியில் நீர் வற்றியதும் இவை இந்த இடத்தை விட்டு அகன்று செல்லுகின்றன. அதற்குள் குஞ்சுகள் இறக்கை வளரப் பெற்றுப் பறக்கும் பக்குவத்தை அடைகின்றன. இப்பொழுது இங்கு வரும் பறவைகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இதைப் போலவே இப்புகலிடத்தைக் கண்டுகளிக்க வரும் சுற்றுப் பயணக்காரர்களும் அதிகரித்து வருகிறார்கள்.


இவ்வாறு வரலாற்றுச் சிறப்பும், கலைச் செழிப்பும், இயற்கை எழிலும் நிறைந்து விளங்குகிறது செங்கற்பட்டு மாவட்டம்.

முருகன் கோயில்—திருத்தணி





தம்புனல்



"நீரின்று அமையாது உலகு" என்பது வள்ளுவர் வாய்மொழி. உலகம் தழைப்பதற்கு நீரே காரணம். வானத்திலிருந்து மழைத்துளி கீழே விழாவிட்டால், பூமியில் எதுவும் விளைவது அரிது. அதனால், உயிருக்கு வேண்டிய உணவின் பெருக்கத்திற்கு நீர்வளம் மிக இன்றியமையாதது என்பதைத் தெளிவாக உணரலாம். இந்த உண்மையினை,

"உண்டி முதற்றே யுணவின் பிண்டம்
உணவெனப் படுவது நிலத்தொடு நீரே"

என்ற புறநானூற்று வரிகள் நன்கு உணர்த்துகின்றன.

"மாமழை போற்றுதும்!" என்று வாழ்ந்த நம் முன்னோர்க்கு வானம் வரையாது வழங்கி வந்தது. அத்துடன், உலகு புரந்து ஊட்டும் அளவற்ற ஆறுகள் நிலச் செழிப்பை மிகுவித்தன. அந்நாளிலேயே நம் முன்னோர் குளங்களையும், ஏரிகளையும் வெட்டி வைத்தனர். நிலம் குழிவான இடங்களில் எல்லாம் நீரைத் தேக்கித் தம் புகழையும் நிலைநிறுத்தினர். அதற்குக் காரணம் என்ன? நீர்வளம் மிகுதியாக இருக்கின்ற காலத்தில் அதை வறிதே கடலில் கலக்கும்படி விடுவதால், மன்னுயிருக்குப் பயன் ஒன்றும் இல்லை. மாறாக அதனைத் தடுத்துத் தேக்கி வைத்தால், தேவைப் படும்பொழுது நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ளலாம்;

கழனிக்குப் பக்கத்தில் ஏரி, குளம் இருந்தால், அவற்றின் ஓதம் நிலவளத்தை மிகுவிக்கும்; மழை தவறிப் போகும் காலத்தில் நாம் கலங்க வேண்டிய அவசியம் இல்லை. இந்த உண்மைகளை நாம் இன்று போற்றிப் பின்பற்ற வேண்டியது மிக முக்கியம் ஆகும். ஏனெனில், நமக்கு அடிக்கடி பருவமழை பொய்த்துப் போகிறது. அதனால் விளைச்சல் குன்றுகிறது.

இன்று மக்கள் தொகை மிகுதியாக இருக்கின்ற காரணத்தினால், விரிந்த அளவில் வேளாண்மையை மேற்கொள்ள வேண்டி யிருக்கிறது. உணவுப் பெருக்கத்திற்கு இருபோகம், முப்போகம் விளைவிக்க வேண்டியுள்ளது. இதனால், பேரணைகள் பலவற்றை நாம் உருவாக்கியுள்ளோம். அந்நியர் ஆட்சிக் காலத்தில் குறைவான அணைக்கட்டுகளே கட்டப்பட்டன. ஆயின் சுதந்திரம் பெற்ற பின்னர், நாம் பல பெரிய நீர்த் தேக்கங்களையும், எண்ணற்ற சிறு அணைக்கட்டுகளையும் உருவாக்கியுள்ளோம். இவற்றால் பாசனப் பரப்பு அதிகமானதுடன், ஆயிரக் கணக்கானோருக்கு வேலை வாய்ப்பு ஏற்பட்டது; இவற்றைச் சார்ந்த சிறுதொழில்கள் வளர்ச்சி யடைந்தன; உழவரின் வாழ்க்கைத்தரம் உயர்ந்தது.

நீருயர நெல்லுயரும்

நீரைத் தேக்கி, உற்பத்தியை உயர்த்துவதோடு அணைக்கட்டுகளின் பயன் முடிவடைந்துவிடுவது இல்லை. பெரு மழைக் காலங்களில் வெள்ளம் கரை புரண்டு ஊர்களை அழித்துவிடாமலும் அவை பாதுகாக்கின்றன. இதனால், வாய்ப்புள்ள இடங்களில் எல்லாம் அணைகளைக் கட்டிப் பாசன வளத்தை மிகுவிக்கச் சுதந்திர அரசாங்கம் முனைந்து நின்று செயலாற்றியது.

விசேஷ சிறுபாசனத் திட்டம் என்ற திட்டத்தின்கீழ், ரூ. 10 லட்சத்திற்குக் குறைவாகச் செலவாகக் கூடியதாகவும், சீக்கிரத்தில் பயன் தரக்கூடியதாகவும் உள்ள சிறுபாசனத் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இவற்றின்படி குளங்கள் வெட்டல், அணைகள் கட்டல், கால்வாய்கள் தோண்டல், உபயோகத்தில் உள்ள பாசனக் குளங்கள் உட்படப் பல பாசன நீர்நிலைகளையும் மராமத்துச் செய்து மேம்படுத்தல் முதலிய பணிகள் நிறைவேற்றப்படுகின்றன. மாவட்டத்தில் பொதுவாகக் கூடுதலாக விளையும் ஒவ்வொரு டன்னுக்கும் ரூ. 1,500-க்கு மேற்படாத அளவில் இவ் விசேஷ சிறு பாசனத் திட்டங்கள் அமுலாக்கப்பட்டன.

காஞ்சீபுரம் வட்டம் திம்ம சமுத்திரம் கிராமத்திற்கு மேற்கில் சுமார் ¾ மைலில், சென்னை—பெங்களூர் ட்ரங்க் சாலையில் 48-வது மைல்கல்லுக்கு அருகில் உள்ள திம்மசமுத்திரம் ஏரியை ரூபாய் 22,800 செலவு மதிப்பீட்டில் பழுதுபார்க்கும் பணி

மேற்கொள்ளப்பட்டது. இது அரசாங்கத்தினால் எடுத்துக் கொள்ளப்பட்ட இனாம் ஆதாரம் ஆகும்.

மதகுகளைத் திருத்திக் கட்டுதல், கரைகளைப் பலப்படுத்துதல், உடைப்புப் பகுதிகளை அடைத்தல், நீர் வழிவதால் ஏற்படும் சேதத்தைப் பழுதுபார்த்தல் ஆகிய வேலைகள் திம்மசமுத்திரம் ஏரியில் நிறைவேற்றப்பட்டன. இவற்றின் பயனாக, 80 ஏக்கர்களுக்கு இப்பொழுது பாசனம் கிடைத்துள்ளது. இதனால் 55 டன்கள் உணவு உற்பத்தி செய்யப்படுகிறது. ஒரு டன்னுக்கு ரூ. 415 என்ற அளவில் செலவிடப்பட்டுள்ளது.

"ரெட்டேரி" புனரமைப்பு

காஞ்சீபுரத்திலிருந்து 6 மைல் தொலைவில், வட ஆர்க்காடு மாவட்ட எல்லையில் ஆர்ப்பாக்கம் கிராமம் இருக்கிறது. இந்தக் கிராமத்தில், காஞ்சீபுரம்—உத்திரமேரூர் சாலையின் இருமருங்கும் இரண்டு ஏரிகள் உள்ளன. அவை இரண்டு சாலை மதகுகளால் இணைக்கப்பட்டுள்ளன. இவற்றின் பெரும் நீர்ப்பகுதி "பெரிய ஏரி" எனவும், மற்றது "ரெட்டேரி" எனவும் வழங்கப்படுகின்றன.

மதகுகள், ஷட்டர்கள் ஆகிய அமைப்புக்களுடன் முன் கரைப் பகுதியைக் கட்டுதல், ரெட்டேரியின் இடக்கரையில் ஓர் அணைக் கட்டைக் கட்டுதல், அணைக்கட்டின் உயர் மட்டத்தை உயர்த்துதல் ஆகிய பணிகள் ரெட்டேரியில் நிறைவேற்றப்பட்டன.

உத்திரமேரூர்க் குளச் சீரமைப்பு



இத் திட்டத்தின் செலவு ரூ. 45,000. முன்பு விளைச்சல் பாதிக்கப்பட்டு வந்த 317 ஏக்கர்கள் இப்பொழுது பாசன நன்மையைப் பெற்று 160 டன்கள் உணவுத் தானிய உற்பத்தியைக் கொடுக்கின்றன. ஒரு டன் கூடுதல் விளைச்சலுக்கு ரூ. 200 என்ற அளவில் செலவழிக்கப்பட்டுள்ளது.

உத்திரமேரூர் குளக் கால்வாயை 60 அடி அகலமாக்கும் வேலை நிறைவேற்றப்பட்டுள்ளது. ஆறு அடி ஆழத்திற்கு இது வெட்டப்பட்டுள்ளது. ஒரு விநாடிக்கு 1,500 கன அடி தண்ணீர் இக் கால்வாயின் மூலம் செல்ல வகை செய்யப்பட்டுள்ளது. இதனால், உத்திரமேரூர், திருப்புலிவனம் குளங்களுக்கு நீர் வழங்கி, உபரித் தண்ணீரைக் கீழ் மட்டத்தில் உள்ள குளங்களுக்கும் கொடுக்கும்.

உத்திரமேரூர்க் கால்வாய்

இத் திட்டத்திற்குச் செலவு ரூ. 78,000. ஏக்கருக்கு ½ டன் வீதம் 350 டன் அரிசி உற்பத்தி கிடைப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.


சைதாப்பேட்டை வட்டத்தில் அயனம்பாக்கம் ஏரி இருக்கிறது. மழைக்காலத்தில் ஏரியில் உடைப்பு ஏற்பட்டுப் பாசன வசதி பாதிக்கப்பட்டு வந்தது. அதனால் விளைச்சலும் குன்றியது. இந்த இன்னலை நீக்கும் பொருட்டு, கால்வாய் புறப்படும் இடத்திற்குச் சற்றுக் கீழே ஓர் அணைக்கட்டு கட்டப்பட்டுள்ளது. இம் மண் அணையின் நீளம் 390 அடி. வெள்ளக் காலத்தில் இதன் வழியாக விநாடிக்கு 10,900 கன அடி நீர் வெளியேற முடியும்.

இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டதன் மூலம் ஏற்கெனவே பாசனம் பெறும் 731 ஏக்கர்களுக்குப் பாசனம் உறுதி செய்யப்பட்டிருப்பதுடன், புதிதாக 75 ஏக்கர்களுக்கும் பாசன வசதி செய்து தரப்பட்டுள்ளது. கூடுதலாகக் கிடைக்கும் அரிசி உற்பத்தி 118 டன்கள் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இத்திட்டச் செலவு மதிப்பீடு ரூ. 1,21,000.

கூவம் ஆற்றில் வெள்ளக் காலங்களில் அடிக்கடி உடைப்பு ஏற்பட்டு வந்ததால், விளைச்சல் பாதிக்கப்பட்டு வந்தது. ஆகையினால், கூவம் ஆற்றில் அயனம்பாக்கம் அணைக்கட்டுக்கு மேலே மூன்று மைலில் ஓர் அணைக்கட்டு கட்டப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் மூலம் குடியானவர்களின் இன்னல் நீக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே பாசனத்தில் உள்ள 530 ஏக்கர்களுக்குப் பாசன வசதி உறுதி செய்யப்பட்டுள்ளது. அதிகப்படியாக விளையும் உணவுத் தானியம் 100 டன்கள் ஆகும். அணைக்கட்டு, கால்வாய் இவற்றின் மொத்தச் செலவு ரூ. 67,000.

மாடம்பாக்கம் ஏரியின் கரை பலவிடங்களில் பலவீனமாக இருந்தது. அதனால், முழு அளவு நீர்மட்டத்தை 3 அங்குலம் உயர்த்தி, முன்கரைப் பகுதியில் மூழ்கடிக்கப்பட்ட நிலங்களைத் தூர்வாரி மீட்கும் பணி ரூ. 24,300 செலவு மதிப்பீட்டில் நிறை வேற்றப்பட்டுள்ளது. குளக்கரையும் பலப்படுத்தப்பட்டது.



புனரமைக்கப்பட்ட தாமல் ஏரி

இத்திட்ட நிறைவேற்றத்தினால், முன் கரைப் பகுதியில் உள்ள 16 ஏக்கர் நஞ்செய் நிலங்கள் மூழ்கடிக்கப்படுவது தடுக்கப் பட்டது. கூடுதல் உணவு உற்பத்தியின் மதிப்பு 24 டன்கள் ஆகும்.

சாலவாக்கம் கால்வாய்

அடையாறு சிறு படுகையில் உள்ள நந்திவரம் ஹிஸ்ஸா ஏரி யைத் தூர்வாரிப் புனரமைப்புச் செய்யும் திட்டம் ரூ 23,000 செலவு மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டது. ஏரிக்கரை பலப்படுத் தப்பட்டது; தூரெடுக்கப்பட்டது. இந்தச் சீரமைப்புத் திட்டத்தின் மூலம் 120 ஏக்கர்களுக்குப் பாசனம் கிடைப்பதுடன், 20 ஏக்கர் கள் நீரினால் மூழ்கடிக்கப்படாமல் காப்பாற்றப்படும்.

சாலவாக்கம் கால்வாய் பொதுப்பணித் துறையினரின் பரா மரிப்பில் உள்ளது ஆகும். இது சித்தனக்காவூர், தண்டரை, சாலவாக்கம் ஆகிய இடங்களில் உள்ள பாசனக்குளங்களுக்கு நீர் அளிக்கிறது. பல்லாண்டுக் காலமாக இந்தக் கால்வாய் பழுது

பார்க்கப்படாமல் இருந்து வந்ததால், தூர் சேர்ந்து போய்விட்டது. பாலாற்றில் 1878 ஆம் ஆண்டில் வெள்ளம் வந்தபோது, கால் வாய் புறப்படும் இடத்தில் உள்ள மதகு சேதமடைந்தது.

இக்கால்வாய் சுமார் 6 மைல் நீளமுள்ளது. இதன் மூலம் தண்டரையில் 251 ஏக்கர்களும், சித்தனக்காவூரில் 303 ஏக்கர் களும், சாலவாக்கத்தில் 648 ஏக்கர்களும் ஆக மொத்தம் 1,202 ஏக்கர்கள் பாசன வசதியைப் பெறுகின்றன. ஆகையினால், சாலவாக்கம் கால்வாயைச் செப்பனிட்டுச் சீர்திருத்தும் பணி ரூ. 95,000 செலவு மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டது. வேலை நடந்தேறி வருகிறது. இந்தத் திட்ட நிறைவேற்றத்தின் காரண மாக 470 டன் கூடுதல் உணவு உற்பத்தி கிடைக்கும் என மதிப் பிடப்பட்டுள்ளது.

இவற்றைத் தவிர மாவட்டத்தில் பள்ளிப்பட்டு ஆற்றுக் கால்வாயில் ரூ. 20,000 செலவிலும், புதுப்பாளையம் ஊற்றுக் கால்வாயில் ரூ. 14,500 செலவிலும், மணப்பாக்கம் ஆற்றுக் கால்வாயில் ரூ. 9,000 செலவிலும் கல் கட்டடங்கள் கட்டப் பட்டுள்ளன.

மாவட்டத்தில் பாசன வளத்தை மிகுவிக்கக் கடந்த பத்தாண்டு களில் மொத்தம் சுமார் 160 விசேஷ சிறு பாசன வேலைகள் அமுலாக்கப்பட்டுள்ளன.

5

உற்பத்தி உயர்வு

உலகம் இடையறாது இயங்க உணவு மிக முக்கியம் ஆகும். உணவு இல்லாவிட்டால், உயிர் இனங்கள் அனைத்தும் பசியால் வாடி மடிந்து விடும். இதனால், உயிர் வாழ உணவு கொடுப்போரின் தொண்டு மிக உன்னதமானது ஆகும். அதனை அளவிட்டு உரைக்க வந்த மணிமேகலை ஆசிரியர், "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்று புகழ்கிறார். தெய்வப் புலவர் திருவள்ளுவரும்,

"சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை"

என்று அருளியுள்ளார்.


இலக்கியங்களில் காணப்படும் இவை போன்ற மணிமொழிகள், பண்டைக் காலத்தில் இந்நாட்டில் உழவுத் தொழில் எவ்வாறு போற்றப்பட்டு வந்தது என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றன. அக்காலத்தில் நம் நாட்டில் "களிறு மாய் கழனிகள்" மிக்கிருந்தன. "மாடு கட்டிப் போரடித்தால் மாளாது செந்நெல் என்று யானை கட்டிப் போரடித்த" நாட்கள் அவை. அப்பொழுது இந்நாட்டு உழவர் பெருமக்கள் உள்நாட்டு உணவுத் தேவையைத்

தனித்ததோடு, கடல் கடந்த பல அயல் நாடுகளுக்கும் உணவு வகைகளை அனுப்பி அரும்பொருள் ஈட்டி வந்தனர். . நம்முடைய நாட்டிலிருந்து பாபிலோனியாவுக்கு அரிசி ஏற்றுமதியானது என்பதற்கு ஹீப்ரு மொழியில் "அரிசி" என்ற தமிழ்ச் சொல், "அரைசா" என்று எழுதப்பட்டிருப்பதே போதுமான சான்ருகும்.

"நாடன்ப நாடா வளத்தன" என்ற குறள் பிறந்த நாட்டில் இந்நிலை தொடர்ந்து நீடித்ததா? இல்லை. இந்நாட்டை அடிமை கொண்ட ஆங்கிலேயர் சீரான வேளாண்மையைச் சிதைத்தனர். அதனுல் தேவைக்கு ஏற்ற அளவில் இங்கு விளைச்சல் குவியாமல் போயிற்று. அந்நிய நாடுகளிலிருந்து அரிசி இறக்குமதி செய்யும் அவல நிலையும் உண்டாயிற்று.

உற்பத்தி உயருகிறது

உரிமைக்குப் பின்னர் இந்த இழிநிலை மறையலாயிற்று. "உழவினர் கைம்மடங்கின்" உலகம் இல்லை என்பதை உணர்ந்துள்ள சுதந்திர அரசாங்கம், உற்பத்திப் பெருக்கத்திற்கான எல்லா நடவடிக்கைகளையும் எடுத்தது. பாசன வசதி செய்து தருதல், உயர்தர வித்துக்களை வழங்குதல், ரசாயன, கழிவு உரங்கள்



சிறு காவேரிப்பாக்கம் விதைப் பண்ணை

கிடைக்கச் செய்தல், முன்னேற்றக் கருவிகளைப் பயன்படுத்த வகை செய்தல் முதலிய அரும்பெரும் காரியங்களை அரசாங்கம் மேற்கொண்டது. அவற்றின் பயனுக இன்று உற்பத்தியில் உயர்வைக் கண்டு வருகிருேம்.

செங்கற்பட்டு மாவட்டத்தில் வேளாண்மையே தலையாய தொழிலாக இருக்கிறது. சுமார் 85 சதவீதம் மக்கள் உழுதுண்டு வாழ்கிறார்கள். மாவட்டத்தில் ஆண்டுச் சராசரி மழையளவு 1,187·9 மில்லி மீட்டர் ஆகும். ஆகையினால் வேளாண்மையானது, பருவமழை தவறிப்போகும் காலங்களில் சீரான முறையில் நடத்தப்படாமல் விளைச்சல் குன்றுகிறது. மாவட்டத்தில் குளத்துப் பாசனம் முக்கியமானதாக இருக்கிறது. வேளாண்மைப் பம்பு செட்டுகளும் பாசன வளத்திற்குத் துணை செய்கின்றன.

கடந்த பத்தாண்டுகளில் வேளாண்மைச் செழிப்புக்காக மாவட்டத்தில் பல வளர்ச்சித் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. முனைப்பான முறையிலும், முன்னேற்றமான புதிய வழி முறைகளிலும் சாகுபடி செய்ய வேளாண்மைத் துறையினர் முக்கியமான நடவடிக்கைகளை மேற்கொண்டனர். அதன் மூலம் விளைச்சல் அதிகரிக்கப் பாடுபட்டனர். (1) உயர்தர வித்துக்களை உற்பத்தி செய்து விநியோகித்தல்; (2) ரசாயன, தழை உரங்களைப் பயன் படுத்துதல் ; (3) முன்னேற்றச் சாகுபடி முறைகள் ; (4) மண்வளப் பாதுகாப்பு; (5) நில அபிவிருத்தி ஆகியவை இத்துறையினர் மேற்கொண்ட முக்கியமான பணிகள் ஆகும். இவற்றின் மூலம் இம்மாவட்டத்தில் உற்பத்தியின் அளவு உயர்ந்திருக்கிறது.

உணவுத் தானியங்களில் இம்மாவட்டத்தில் முதலிடம் பெறுவது அரிசியாகும். இங்கு 1950-51 இல் உற்பத்தியான அரிசியின் அளவு 1,33,000 டன்; இந்த அளவு 1960-61 இல் 3,39,000 டன்னாக அதிகரித்தது என மதிப்பிடப்பட்டுள்ளது. அதாவது, கடந்த பத்தாண்டுகளில் 1½ மடங்குக்குமேல் அரிசி உற்பத்தி உயர்ந்துள்ளது. 1950-51 இல் நிலக்கடலை உற்பத்தி 14,320 டன்; இந்த அளவு 1960-61 இல் 27,000 டன்னாக அதிகரித்தது. அதாவது, நிலக்கடலை உற்பத்தி கொஞ்சம் குறைய இருமடங்கு உயர்வு கண்டிருக்கிறது.

விதைப் பண்ணைகள்

உயர்தர வித்துக்களை உற்பத்தி செய்து விநியோகிப்பது முதன்மையான காரியம் ஆகும். ஏனெனில் இவை நன்றாக முளைத்து வருகின்றன; பூச்சிகள், நோய்கள் இவற்றால் பாதிக்கப்படாமல் இருக்கின்றன; பலவகைப்பட்ட மண், சீதோஷ்ண நிலை, சுற்றுச் சூழ்நிலை ஆகியவற்றிற்குப் பொருந்துகின்றன. இவற்றிற்கு மேலாக அதிக விளைச்சலைத் தருகின்றன.

ஆகையினால், விதைப்பண்ணைகளை (State Seed Farms) நடத்தும் பொறுப்பை அரசாங்கம் மேற்கொண்டது. இதன் மூலம், அரசாங்க விதைப்பண்ணைகளில் உற்பத்தியாகும் வித்துக்கள்

குடியானவர்களுக்கு அளிக்கப்பட்டு, அவர்கள் மூலமாகக் கிராம விதைப் பண்ணைகளில் அவை பெருக்கப்படுகின்றன. இதனால், தரமான உயர்ந்த இன வித்துக்களே பெருக்கப்படும் நிலை உண்டாகிறது. மாவட்டத்தில் காஞ்சீபுரம் வட்டாரத்தில் சிறு காவேரிப் பாக்கத்திலும், பூண்டி வட்டாரத்தில் கொழுந்தலூர், ஊத்துக் கோட்டை ஆகிய இடங்களிலும் அரசாங்க விதைப்பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளன. திரூரில் அரிசி ஆராய்ச்சி நிலையம் ஒன்று இயங்கி வருகிறது.

மாவட்டத்தில் விநியோகிக்கப்பட்ட உயர்தர நெல் வித்துக்கள் விவரம் பின்வருமாறு:

[முதல் நிலை விதைப் பண்ணைகளும் கிராம விதைப் பண்ணைகளும்]	முதல் ஐந்தாண்டுத் திட்டம்	இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம்
நெல் வித்துக்கள்	1,460 டன்	9,768 டன்

ரசாயன உரம்


முன்னேற்றச் சாகுபடி முறைகள், உரங்கள் முதலானவை செங்கற்பட்டு மாவட்டத்தில் வேளாண்மைத் தொழிலில் கையாளப் பட்டு வருகின்றன. இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்ட கடந்த பத்தாண்டுகளில் 22,630 டன் ரசாயன உரங்கள் விநியோகிக்கப்பட்டன.

அதே நேரத்தில், உள்ளூர் எரு வசதிகளின் அபிவிருத்திக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. தழை உரங்களை அதிக அளவில் உற்பத்தி செய்து பயன்படுத்துவதின் மூலமும், நெல், கரும்பு, பருத்தி, முதலியவற்றின் சாகுபடியின்போது நிலம் இழந்துவிடும் நைட்ரஜன் சத்தை ஈடுசெய்ய இயலும். ஆகையினால், தழை உர ஆதாரங்களை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் கடந்த பத்தாண்டுகளில் 425 டன் தழை உரவித்துக்கள் வழங்கப்பட்டன.

மாவட்டத்தில் கழிவுஉர (Compost) அபிவிருத்தியிலும் அக்கறை காட்டப்பட்டு வந்துள்ளது. குப்பைக் கூளங்கள், கழிவுப் பொருள்கள், வீணாக எறியப்படும் காய்கறிகள், சருகுகள், களைகள், தாள்கள் முதலியவற்றைப் பயன்படுத்தி உரம் தயாரிக்க உழவர்கள் ஊக்குவிக்கப்பட்டார்கள். கடந்த பத்தாண்டுக் காலத்தில் மாவட்டத்தில் 68,626 டன் கழிவு உரம் தயாரிக்கப்பட்டது.

வேளாண்மைத் துறையினரால் முன்னேற்றச் சாகுபடி முறைகளும் பரப்பப்பட்டு வருகின்றன. உழவர்களுக்கு இவற்றை விளக்குவதன் நோக்கம், உற்பத்தி உயர்வு ஏற்படவேண்டும் என்பதே.

உதாரணமாக, ஜப்பானியமுறைச் சாகுபடியின் மூலம் அதிக உற்பத்தி காண்கிறது. ஆகையினால், அதை எல்லாப் பயிர்களுக்கும் பின்பற்றப் பிரசாரம் செய்யப்படுகிறது. ஜப்பானிய முறைச் சாகுபடி



ஜப்பானியமுறைச் சாகுபடி

முனைப்பான முறையில் இரண்டாவது திட்டக் காலத்தில் மேற்கொள்ளப்பட்டது. 2·80 லட்சம் ஏக்கர்கள் இச்சாகுபடி முறையின் கீழ்க் கொண்டுவரப்பட்டன.

ஜப்பானிய முறைச் சாகுபடிக்கு வேண்டிய முக்கியத் தேவைகள் வருமாறு :

1. உயர்தர வித்துக்களை உபயோகித்தல்.
2. அதிக அளவு உப்பு உரங்களை உபயோகித்தல்.
3. வரிசையில் நடுதல்.
4. ஊடு சாகுபடி.

முன்னேற்றச் சாகுபடியில் புதிய கருவிகளைப் பயன்படுத்த வேண்டியதும் முக்கியமாகும். அதிக உணவு உற்பத்திக்கு அவை வழிகோலும். ஆகவே, இயந்திரக் கலப்பைகள், டஸ்டர்கள், தூவிகள் போன்ற முன்னேற்றக் கருவிகள் குறைந்த விலையில் குடியானவர்களுக்கு வழங்கப்படுகின்றன. இவை வட்டாரப் பகுதிகளில் மிகவும் பிரபலம் அடைந்துள்ளன.

முன்னேற்றச் சாகுபடி முறைகளைக் கையாண்டால் மட்டும் போதாது. பூச்சிகள், நோய்கள் இவற்றிலிருந்தும் பயிர்களைக் காப்பாற்றவேண்டும். பூச்சிகளை அழித்துப் பயிர்களைக் காப்பாற்றினால், அதிக அளவு உணவுத் தானியங்கள் வீணாவது தடுக்கப் படும். முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலும் 2·17 லட்சம் ஏக்கர்களில் பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

பயிர் நோய்

அபிவிருத்திக்கான முன்னேற்றச் சாகுபடி முறைகளைப் பரப்ப வேளாண்மைத் துறையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளே மேலே விவரிக்கப்பட்டன. இவற்றைத் தவிர, தோட்டங்கள் அபிவிருத்தி, எண்ணெய் வித்துக்களின் அபிவிருத்தி ஆகியவற்றுக்கும் வேளாண்மைத் துறையினர் திட்டங்களை நிறைவேற்றி வருகின்றனர். உணவு உற்பத்தியை அதிகரிக்கச் செய்வது போலவே, குடியானவர்களின் வருமானத்தை உயர்த்த வர்த்தகப் பயிர்களையும் அதிகரிக்கச் செய்யவேண்டும் என்பதே இத்துறையினரின் நோக்கம்.

மேலும், உணவுப் பயிர்களைப் போலவே வர்த்தகப் பயிர்களும் முக்கியமானவை ஆகும். ஆகையினால் மாவட்டத்தில், எண்ணெய் வித்துக்கள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் சுமார் 20,000 ஏக்கர்களில் பலவித அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

பயிர் நோயை அழிக்க மருந்து தெளிக்கப்படுகிறது



காய்கறிகளின் உற்பத்தியைப் பெருக்குவதற்கும் திட்டக் காலத்தில் முயற்சி எடுத்துக் கொள்ளப்பட்டது. எல்லா வகைகளையும் சேர்ந்த 4 டன் காய்கறி வித்துக்களை வேளாண்மைத் துறை குடியானவர்களுக்கு விநியோகித்தது; அத்துடன், 3 லட்சம் காய்கறிச் செடிகளையும் வழங்கியது.

பழங்கள்


உணவிலுள்ள சத்தே நம் உடல் வளத்தைப் பேணிக் காக்கிறது. ஆகையினால், உணவோடுகூடப் பழங்கள் போன்றவற்றையும் நாம் சேர்த்துக்கொள்ள வேண்டும். பழத் தோட்டங்களின் அபிவிருத்திக்கும் ஐந்தாண்டுத் திட்டத்தில் வகை செய்யப்பட்டது. புதிய தோட்டங்களை உண்டாக்குவதற்கும், பழையனவற்றைப் புதுப்பிப்பதற்கும் நீண்டகால, குறுகிய காலக் கடன்கள் உழவர்களுக்குக் கொடுக்கப்பட்டன. செங்கற்பட்டு மாவட்டத்தில் பலவகைப் பழச் செடிகள் 1,06,000 வழங்கப்பட்டன.

மணற்பாங்கான பகுதிகளிலும், கடற்கரைப் பிரதேசங்களிலும் தென்னை நன்கு பயிராகிறது. தென்னை மரங்களை அதிகரிக்கச் செய்வதற்காகத் திட்டக் காலத்தில் மாவட்டத்தில் 23,000 தென்னம் பிள்ளைகள் விநியோகிக்கப்பட்டன.

மண்வளப் பாதுகாப்பு மிக இன்றியமையாதது ஆகும். ஏனெனில், அது மண் சாரத்தைக் காப்பதுடன், நில சமன் மட்டத்தையும் பாதுகாக்கிறது. மண் வளத்தைப் பாதுகாக்கும் ஒரு சிறப்புத் திட்டம் திருவள்ளூர் வட்டத்தில் நிறைவேற்றப்பட்டு வருகிறது. 4,000 ஏக்கர்களில் மண்வளப் பாதுகாப்பு வேலை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

வேளாண்மைத் துறையின் பொறியியல் பிரிவினர், டிராக்டர்கள், எண்ணெய் எஞ்சின்கள் முதலான நில அபிவிருத்திக்கான வசதிகளைச் செய்து தருகின்றனர். செங்கற்பட்டு மாவட்டத்தில் பாசனத்துறையில் எண்ணெய் எஞ்சின்கள் 1951 முதல் பெரும் பங்கு வகித்து வருகின்றன. கிராமங்களுக்கும் மின்சாரம் அதிக அளவில் விஸ்தரிக்கப்பட்டதை யொட்டி மின்சாரப் பம்பு செட்டுகளும் இன்று பெருமளவில் பாசன வளத்தை மிகுவித்து வருகின்றன.

கடந்த பத்தாண்டுகளில் வேளாண்மைத் துறையினரால் மாவட்டத்தில் 600 எண்ணெய் எஞ்சின்களும், 550 மின்சார மோட்டார்களும் விநியோகிக்கப்பட்டுள்ளன. இவற்றால் சுமார் 15,000 ஏக்கர்கள் பயன் அடைந்தன.



நில அபிவிருத்திக்கு மண்வளப் பாதுகாப்புத் திட்டத்துடன் கூட, டிராக்டர்களை வாடகைக்கு விடும் திட்டமும் மாவட்டத்தில் நிறைவேற்றப் பட்டது. சுமார் 30,000 ஏக்கர்கள் டிராக்டர்களால் உழப் பட்டுச் சாகுபடிக்குக் கொண்டுவரப்பட்டன.

மாவட்டத்தில் பயிராகும் முக்கியப் பயிர் வகைகளைப் பற்றிய விவரம் பின்வருமாறு :—

நெல் முதல் போகம்	2,44,673	ஏக்கர்
,, இரண்டாம் போகம்	1,09,506	,,
,, மூன்றும் போகம்	16,232	,,
ராகி	14,720	,,
சோளம்	4,169	,,
கம்பு	16,417	,,
நிலக்கடலை	34,793	,,

நிலச் சீர்திருத்தங்கள்

"தம்மில் இருந்து தமது பாத்துண்"ணும் பண்பைத் தமிழர் ஓம்பிப் பாதுகாத்து வந்துள்ளனர். பசித்தோர் முகம் பார்த்து நல்லறமும் நட்பும் நன்றென்று வாழ்ந்து வருதல் நல்லோர் மரபு.

உழைப்புக்கு ஏற்ற பெருமை அளிக்க வேண்டும்; உழுதுண்டு வாழ்வோரை ஊக்குவிக்க வேண்டும். இந்த அடிப்படையிலேயே நிலச் சீர்திருத்தங்கள் இயற்றப் படுகின்றன. உற்பத்தியைப் பெருக்கி, மக்கள் வாழ்வை உயர்த்த வேண்டும் என்பதே இவற்றின் லட்சியம். உழவர் பெருமக்கள் வறுமையால் வாடினால், வேளாண்மையும் வாடிச் சாம்பிப் போகும். அதனால், அவர்களது நிலையை உயர்த்தவே நிலச்சீர்திருத்தச் சட்டங்கள் கொண்டு வரப்பட்டன. இவை குடியானவர்களின் வருமானத்தையும், வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்தியுள்ளன.



உயர்ந்த இனக் காங்கயம் காளை

'மாடு' என்ற சொல் பண்டைக் காலத்தில் செல்வத்தைக் குறித்து வந்தது. மாடுகளின் பயனை ஆராய்ந்து பார்த்தால், இதன் பொருத்தம் தெளிவாக விளங்கும் நமக்கும்.

"பாலைப் பொழிந்துதரும், பாப்பா!—அந்தப்
பசுமிக நல்லதடி பாப்பா!"

என்று பாடத்தோன்றும்.

விலங்குச் செல்வங்கள் வளமுற்று விளங்கினால், வேளாண்மையும் சிறப்படைய இயலும். நிலத்திற்கு நீர் இறைக்க வலிமை மிக்க காளைகள் வேண்டும்; ஆகையினால், கிராமப் பொருளாதாரத்தின் உயர்வுக்கு உடல் வன்மை பெற்ற விலங்குச் செல்வங்கள் இன்றியமையாதன என்பது தெற்றெனப் புலனாகிறது.

கால்நடை அபிவிருத்தித் திட்டத்தின் நோக்கம், ஊட்டச் சத்து நிறைந்த பால், ஊன், முட்டை முதலானவை நல்ல தரத்தில் மக்களுக்குக் கிடைக்கச் செய்வதும், விலங்குச் செல்வங்களின் வளத்தைப் பேணிக்காப்பதும் ஆகும். கால் நடைகளிலிருந்து நமக்குக் கிடைக்கும் கம்பளி, தோல், கொம்புகள் முதலியனவற்றை நன்கு பயன் படுத்துவதன் மூலமாகவும் பொருளாதார முன்னேற்


றத்திற்கு வகை செய்ய முடியும். எனவே, நமது திட்டங்களில் வேளாண்மைக்கும், அதனோடு தொடர்புடைய கால்நடை அபிவிருத்திக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருக்கிறது.

செயற்கைக் கருமுறை

நம் நாட்டில் பொதுவாகக் கால் நடைகள் அதிக அளவில் இருந்த போதிலும், அவை வளம் செழித்தவையாக விளங்கவில்லை. இதனால், நாட்டுக் கால்நடைகளை உயர்ந்த இனக் காளைகளுடன் இனப்பெருக்கம் செய்து தரம் உயர்த்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. செங்கற்பட்டு மாவட்டத்தில் சிந்தி, முர்ராபோன்ற உயர்ந்த இனப் பொலிகாளைகளைக்கொண்டு உள் நாட்டுக் கால்நடைகள் தரம் உயர்த்தப்படுகின்றன. பொலி காளைகளின் எண்ணிக்கை குறைவாகவும், அவற்றின் தேவை அதிகமாகவும் இருக்கின்ற காரணத்தினால், செயற்கைக் கருமுறை நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மாவட்டத்தில் செங்கற்பட்டு, திருக்கழுக்குன்றம் ஆகிய இரண்டு இடங்களிலும் செயற்கைக் கருமுறை நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டன. இவற்றில் 5,311 முறைகள் செயற்கை முறைக் கருத்தரிப்பு நடத்தப்பட்டது. 1,266 கன்றுகள் பிறந்தன.

காஞ்சீபுரம் விலங்கு மருத்துவ நிலையம்



மாவட்டத்தில் 10,000 பசுக்கள், எருமைகள் உள்ள ஒரு பகுதியில் முனைப்பான கால் நடை அபிவிருத்திக்குக் கேந்திரக் கிராமம் அமைக்கப்படுகிறது. பிரதான நிலையத்துடன் ஆறு துணை நிலையங்கள் இணைக்கப்படுகின்றன. இப்படிப் பட்ட மூன்று கேந்திரக் கிராம நிலையங்கள் கீழச்சேரி, காஞ்சீபுரம், பூவிருந்த வல்லி ஆகிய இடங்களில் ஆரம்பிக்கப் பட்டிருக்கின்றன.

செயற்கை முறையில் கருத்தரிக்கச் செய்வதுடன், இயற்கை முறையிலும் கருத்தரிக்கச் செய்யப்படுகிறது. மூன்று கேந்திரக் கிராம நிலையங்களிலும் 33 பொலிகாளைகள் இருக்கின்றன. செயற்கை முறையிலும், இயற்கை முறையிலும் 5,025 கன்றுகள் பிறந்தன.

கன்றுகள் வளர்த்தல்

கேந்திரக் கிராமப் பகுதிகளில் தோன்றிய கன்றுகள் பருவம் அடையும் வரை அவற்றுக்குச் சரியான பராமரிப்பு இருக்க வேண்டியது அவசியம். அப்பொழுதுதான் அவை இனப் பெருக்கத்திற்குச் சிறந்தவையாக இருக்கும். ஆகையினால், கன்றுகளை அவற்றின் சொந்தக்காரர்கள் அவை பருவம் அடையும் வரை நல்ல முறையில் வளர்த்துவர ஊக்கம் அளிக்கும் பொருட்டுக் கன்று ஒன்றுக்கு ரூ. 10 விதம் பொருள் உதவி அளிக்கப்படுகிறது.

கால் நடைகளின் தரம் உயர்ந்த முறையில் பாதுகாக்கப்பட மாவட்டத்தில் வளங்குன்றிய 10,000 நாட்டுக் காளைகள் காயடிக் கப்பட்டன.

கேந்திரக் கிராமத் திட்டத்தால் பயனடையாத பகுதிகளில் கால்நடை அபிவிருத்திக்கு வழிவகுக்கத் துணை விஸ்தரிப்பு நிலையங்கள் ஏற்படுத்தப் படுகின்றன. கேந்திரக் கிராமத்தில் தோன்றிய காளைகள் இங்கு இனப்பெருக்கத்திற்குப் பயன் படுகின்றன. 5,000 பசுக்கள், எருமைகள் உள்ள பகுதியில், கால்நடை வளர்ப்பில் அக்கறையுள்ள தனிப்பட்டவர்களுக்கு 50 காளைகள் வழங்கப்படுகின்றன. அவற்றின் பராமரிப்புச் செலவுக் காகக் காளை ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 30 விதம் அளிக்கப் படுகிறது.

செங்கற்பட்டு மாவட்டத்தில் இவ்வகைத் துணை விஸ்தரிப்பு நிலையங்கள் 5 நிறுவப்பட்டுள்ளன. அவை மதுராந்தகம், சுங்குவார் சத்திரம், சாலவாக்கம், அச்சிறுபாக்கம், சூணம்பேடு ஆகிய இடங்களில் இருக்கின்றன. இந்நிலையங்களில் 1,196 கன்றுகள் பிறந்தன.

கால் நடைகளை வழங்கும் திட்டத்தின் கீழ் தனிப்பட்டவர் களுக்கு இலவசமாகக் காளைகள் வழங்கப்படுகின்றன. அவை மூன்றாண்டுகளில் 180 முறை இனப் பெருக்கத்திற்குப் பயன் படுத்தப்பட்ட பின்னர், அவற்றை வளர்த்துவருபவருக்கே அவை சொந்தமாகி விடுகின்றன. இத்திட்டப்படி மாவட்டத்தில் 20 காளைகள் வழங்கப்பட்டன.

மாவட்டத்தில் 'பிரிமியம்' திட்டத்தில், 9 பொலிகாளைகள் சேர்த்துக் கொள்ளப்பட்டன. இவற்றைப் பராமரித்து வரும் குடியானவர்களுக்கு மாதம் ஒன்றுக்குக் காளை ஒன்றுக்கு ரூ. 200 முதல் ரூ. 220 வரை அளிக்கப்படுகிறது. இவற்றைத் தவிர, வட்டார நிதியிலிருந்து பாதி விலைக்கு வழங்கப்பட்ட 16 பொலி காளைகளும் 'பிரிமியம்' திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. மேலும், விலங்கு மருத்துவ மனைகளில் 19 காளைகள் இனப்பெருக்கத் திற்காக உள்ளன.

உத்திரமேரூரில் கூட்டுறவுக் கால்நடை வளர்ப்போர் சங்கம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சங்கத்தில் 5 காளைகள் பராமரிக் கப்பட்டன. இவை 'பிரிமியம்' திட்டத்தில் சேர்க்கப்பட்டன. மாவட்டத்தில் மொத்தம் 8 கால்நடை வளர்ப்போர் சங்கங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

கால் நடைக் காட்சி

கால் நடைகளை நல்ல உடல் வன்மை பெற்றவையாக வளர்ப் பதை ஊக்குவிக்கும் வகையில் கால்நடைக் காட்சிகள் நடத்தப் படுகின்றன. நல்ல முறையில் வளர்க்கப்பட்ட வளமான கால் நடைகளின் சொந்தக்காரர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படுகின்றன.

கால் நடைகளின் உடல் ஆரோக்கியத்தைப் பேணிக் காப்பதிலும் அக்கறை காட்டப்பட்டு வருகிறது. நோய்க் கட்டுப்பாடு செய்தல், மருத்துவ உதவி அளித்தல் போன்ற காரியங்கள் நிறை வேற்றப்படுகின்றன. மாவட்டத்தில் ஒரு விலங்கு மருத்துவ மனையும், 11 துணை மருத்துவமனைகளும், 2 இயங்கும் மருத்துவக் குழுக்களும், 9 முதல் உதவி நிலையங்களும் இருக்கின்றன. இந்த மருத்துவ நிலையங்கள் தவிர, வட்டாரப் பகுதிகளில் 20 முதல் உதவி நிலையங்கள் இயங்கி வருகின்றன. மாவட்டத்தில் 1,50,000 கால் நடைகளுக்கு மருத்துவ உதவி அளிக்கப் பட்டது.

கால் நடைகளைப் பீடிக்கும் நோய்களை ஆராய்ந்து, அவற்றைத் தீர்க்க வழிவகை காணும் நோக்கத்துடன் காஞ்சீபுரம் விலங்கு மருத்துவ மனையில் ஓர் ஆய்வுக் கூடம் அமைக்கப்பட்டுள்ளது.



மாதவரம் பால் பண்ணை

பால் மரத்த பசுக்களை நியாயமான மாதாந்தரக் கட்டண வீதங்களில் வைத்துப் பராமரிக்கும் கால் நடைப் பண்ணை, ஆந்திர மாநிலப் பிரிவினையினால் செங்கற்பட்டு மாவட்டம் அலமதிக்கு மாற்றப்பட்டது.

நம் நாட்டுக் குடியானவர்களின் வருவாயை அதிகரிக்கச் செய்யும் சிறந்த துணைத் தொழிலாகப் பால் பண்ணை விளங்குகிறது. மேலும், பால் ஒரு சிறந்த உணவுப் பொருள்; சத்து நிறைந்தது. ஆகையினால், பால் பெருக்கத்திற்கான நடவடிக்கைகளும் ஐந்தாண்டுத் திட்டங்களில் இடம் பெற்றன.

பால் பெருகுகிறது

பால் பெருக்கத் திட்டங்களில் முக்கியமானது மாதவரம் பால் பண்ணை ஆகும். சென்னை மாநகரில் உள்ள சுமார் 4,000 கறவை மாடுகளை அப்புறப்படுத்தி, அவற்றைச் செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த மாதவரம் பால் பண்ணையில் குடியேற்ற முடிவு செய்யப்பட்டது. அத்துடன், புதிய பால் பதனிடும் இயந்திரங்களோடு கூடிய ஒரு மத்தியப் பால் பண்ணையை ஏற்படுத்துவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

மாதவரம் சென்னையிலிருந்து வடக்கே ஏழு மைல் தொலைவில் உள்ளது. பால் பண்ணையை அமைப்பதற்காக அங்கு 708·23 ஏக்கர் புஞ்செய் நிலம் விலைக்கு வாங்கப்பட்டது. பக்கத்தில் உள்ள சாலையோடு பால் பண்ணையை இணைப்பதற்காக ஆறு பர்லாங்கு நீளத்தில் தார்ச்சாலை போடப்பட்டது. நல்ல நிழல் நிறைந்த


பாதையை உண்டாக்குவதற்காகச் சாலையின் இருமருங்கும் வாகை மரக் கன்றுகள் நடப்பட்டன. பண்ணைக்குள் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு எளிதாகப் போய்வரப் பல உட்புறச் சாலைகள் அமைக்கப்பட்டன.


பண்ணை முழுவதையும் சுற்றி வலிமை மிக்க காங்கிரீட் கம்பங்களும், முட்கம்பியும் கொண்டு வேலி போடப்பட்டது. அத்துடன் முட் செடிகளும் வேலியாகப் பயிரிடப் பட்டன. 16 அடி விட்டமும், 30 அடி ஆழமும் உள்ள கிணறு ஒன்று இறக்கப் பட்டது. பக்கத்தில் ஓர் நீர்த்தொட்டியும் கட்டப்பட்டது. கிணற்றிலிருந்து நீர் இறைக்கப்பட்டு அந்நீர்த் தொட்டியில் சேகரித்து வைக்கப்படுகிறது. பண்ணைக்குள் 39 அடி ஆழமுள்ள ஒரு துளைக் கிணறும் இறக்கப்பட்டது.

மாதவரம் பண்ணை

திட்டத்தின்படி இப்பண்ணைக்கு வேண்டிய கட்டடங்கள் இரண்டு வரிசையில் கட்டப்படும். இரு வரிசைகளுக்கு இடையே ஒரு பூங்காவும் அமைக்கப்படும். இவற்றில் 4,000 மாடுகளும், அவற்றின் சொந்தக்காரர்களும் தங்கலாம். ஒவ்வொரு வரிசையிலும் நான்கு பகுதிகள் உண்டு. ஒவ்வொரு பகுதியிலும் 500 மாடுகள் கட்டலாம். அத்தகைய பகுதி ஒன்றில் பால் கறப்பதற்காக ஐந்து கொட்டகைகள் உண்டு. ஒவ்வொரு கொட்டகையிலும் பால் கறப்பதற்காக 100 மாடுகளை முன்னும் பின்னும் கட்டலாம்.

காட்டுப்பாக்கம் ஆடு வளர்ப்பு ஆராய்ச்சி நிலையம்





காட்டுப்பாக்கம் ஆடுவளர்ப்பு ஆராய்ச்சிப் பண்ணையில் யார்க்ஷயர் பன்றிகள்

கன்றுகள் கொட்டகை, பால் வற்றிப்போன மாடுகளின் கொட்டகை, ஸ்டோர், நிர்வாகக் கட்டடம், கன்று போடும் கொட்டகை முதலான வேறுபல கட்டடங்களும் கட்டித் தரப் பட்டன. 500 மாடுகளுக்கான ஒரு பகுதி கட்டி முடிக்கப் பட்டது. அந்த முதல் பகுதிக் கட்டடத்தில் மாடுகள் சேர்த்துக் கொள்ளப் பட்டன. அடுத்து மற்ற மூன்று பகுதிகளும் கட்டி முடிக்கப்பட்டன. மாடுகள் தங்குவதற்குத் தயாரான நிலையில் அவை இருக்கின்றன. மாதவரத்தில் ஒரு மத்தியப் பால் பண்ணை அமைக்கப்பட்டு வருகிறது. இந்தப் பண்ணைக்கு வேண்டிய சாதனங்கள் அண்மையில் வழங்கப்படும் என்று எதிர் பார்க்கப் படுகிறது. சாதனங்கள் நியூஜிலாந்து நாட்டிலிருந்து உதவியாகக் கிடைக்கும்.

மாதவரம் பால் விநியோகத் திட்டத்தின் கீழ் செங்கற்பட்டு மாவட்டத்தில் 14 சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவை ஏற்படுத்தப்பட்டுள்ள கிராமங்கள் பின்வருமாறு:— 1. மாம் பாக்கம், 2. படாளம், 3. மாமண்டூர், 4. கள்ளபிரான்புரம், 5. புளியம்பாக்கம், 6. சேர்க்காடு, 7. சீயமங்கலம், 8. அவளூர், 9. தம்மானூர், 10. நாய்க்கன் பேட்டை, 11. வில்லிவாக்கம், 12. தாமல், 13. முசரவாக்கம், 14. திருப்புக்குழி.

இச்சங்க அங்கத்தினர்களுக்குக் கறவை மாடுகள் வாங்கக் கடன் அளிக்கப் படுகிறது. தினமும் அவர்களிடமிருந்து பால்

சேகரிக்கப்பட்டு மாதவரம் பால் பண்ணைக்கு அனுப்பப்படுகிறது. பாலின் இன்றியமையாச் சிறப்பை உணர்த்தவும், கால் நடைகளின் வளத்தில் அக்கறை ஏற்படுமாறு செய்யவும் ஆண்டுதோறும் 'பால் பெருக்கு நாள்' கொண்டாடப்படுகிறது.

நெல்லூர் வகை ஆடுகளின் அபிவிருத்திக்காக இரண்டாவது திட்டக் காலத்தில் காட்டுப்பாக்கத்தில் ஓர் ஆட்டுப் பண்ணை நிறுவப்பட்டது. இப்பண்ணை 577 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ளது. இங்கு 296 ஆடுகள் இருக்கின்றன. இப்பண்ணையோடு ஒரு கோழி வளர்ப்பு விஸ்தரிப்பு நிலையம் இணைக்கப்பட்டுள்ளது. கோழி வளர்ப்புக்குச் சிறந்த மாதிரிப் பண்ணையாக இது விளங்குகிறது.

ஆட்டுப் பண்ணை

மாவட்டத்தில் காட்டுப்பாக்கம் ஆட்டுப்பண்ணையில் யார்க் ஷயர் பன்றிகளை வளர்க்கும் வேலையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மாவட்டத்தில் ஆடுகளைக் கவனித்துக் கொள்ளவும், அவற்றுக்குத் தொத்து நோய் பரவாதபடி பார்த்துக் கொள்ளவும் ஒரு விலங்கு மருத்துவ உதவி சர்ஜன் நியமிக்கப்பட்டுள்ளார். ஆடுகளைப் பராமரிக்கும் வகையை இவர் கிராம மக்களுக்கு விளக்குகிறார்.

இரண்டாவது திட்டக் காலத்தில் கோழி வளர்ப்பை விஸ் தரிக்கும் முக்கியமான திட்டம் மேற்கொள்ளப்பட்டது. கோழி

கோழிப் பண்ணை



வளர்ப்பு நிலையங்களின் வளர்ச்சி, கிராமப் பொருளாதார வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்கும். ஆகையினுல், கோழி வளர்ப்பில் ஈடுபட முன்வருபவர்களை ஊக்குவிக்கும் வகையில் அரசாங்கம் பொருளுதவி அளித்து வருகிறது.

மாவட்டத்தில் செங்கற்பட்டிலும், போளிவாக்கத்திலும் கோழி வளர்ப்பு விஸ்தரிப்பு நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டன. கேந்திரக் கிராமத் திட்டத்திலும், வட்டாரத்திலும் அடங்கியுள்ள கிராமங்களில் விநியோகிக்க இந்நிலையங்களிலிருந்து கோழிக் குஞ்சுகள் அளிக்கப்படுகின்றன. முட்டைகளும் குறைந்த விலையில் கொடுக்கப்படுகின்றன.

இந்த நிலையங்களைத் தவிர, விலங்கு மருத்துவ மனைகளோடு இணைக்கப்பட்டுள்ள 1. திருக்கழுக்குன்றம், 2. காஞ்சீபுரம், 3. கலியாம் பூண்டி ஆகிய இடங்களில் கோழி வளர்ப்புச் செயல் முறைக் காட்சி நிலையங்கள் இயங்கி வருகின்றன.

மேலும் மாவட்டத்தில், 292 தனியார் கோழி வளர்ப்பு யூனிட்டுகள் இருக்கின்றன. இவற்றுள் சில வட்டார நிதியிலிருந்து ரூ. 250 வரை பொருளுதவி அளிக்கப்படுகின்றன. இதைத் தவிர, கோழி வளர்ப்பு யூனிட்டுகளுக்கு அரசாங்க மானியமும் கிடைக்கிறது. உள்நாட்டுக் கோழிகளின் தர உயர்வுக்காக, நாட்டுக் குஞ்சுகளுக்குப் பதிலாக அயல் நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட உயர்ந்த இனச் சேவற் குஞ்சுகள் வழங்கப்படுகின்றன.

வான் மழை தரும் வனங்கள்

காடும் காடு சார்ந்த இடமும் முன்னுட்களில் 'முல்லை' எனக் குறிக்கப்பெற்றன. காடுகளின் இன்றியமையாச் சிறப்பைத் தமிழர் தெளிவாக உணர்ந்திருந்தனர். வெயில் நுழைய முடியாதவாறு தழைத்து வளர்ந்த வனங்களும், அடர்ந்து இருண்ட காடுகளும் அக்காலத்தில் நிறைந்திருந்தன. அதனுல் அவர்களது வாழ்க்கையிலும் வளம் பெருகிக் காணப்பட்டது.

காடுகள் மழைவளஞ் சிறக்க உதவுகின்றன; வெள்ளங்களைத் தடுக்கின்றன; வாணிபப் பொருள்களை அளிக்கின்றன; வன விலங்குகளைப் பாதுகாக்கின்றன. சில நூற்றுண்டுகளுக்கு முன்புவரை தமிழ் நாட்டில் அடர்ந்த காடுகள் இருந்து வந்தன. காட்டுப்பாக்கம், மறைக்காடு, திண்டிவனம், ஆர்க்காடு, ஆலங்காடு, வேற்காடு முதலிய ஊர்ப் பெயர்கள் இந்த உண்மையினை நிலை நாட்டுகின்றன.

நாகரிகப் பாங்கும், அந்நிய ஆட்சியின் புறக்கணிப்பும் இக் காடுகள் அழிந்துவரக் காரணமாயின. வனக் குறைவினுல் வளங் குறைவதும் இயல்பாயிற்று. ஆகையினுல், நாம் காடுகளை மிகுந்த

கவனத்துடன் பாதுகாத்து வளர்த்துவர வேண்டியது அவசியம் ஆகும்.

செங்கற்பட்டு மாவட்டத்தில் 137 சதுர மைல் காடுகள் உள்ளன. கடற்கரைப் பகுதிகளில் சவுக்கு பயிராகிறது. அண்மைக் காலங்களில் முந்திரியும் பயிராக்கப்பட்டு வருகிறது. இரண்டாவது திட்டக் காலத்தில் 25,000 ஏக்கர் பரப்பில் முந்திரி மரங்கள் வைக்கப்பட்டுள்ளன. இதற்குச் செலவு ரூ. 7 லட்சம் ஆகும். மாவட்டத்தில் 4,000 ஏக்கர் தரிசு நிலங்களில் ரூ. 73,000 செலவில் பலவகை மரங்கள் வைக்கப்பட்டுள்ளன.



வண்டலூர் யூகலிப்டஸ் தோட்டம்

மண் அரிப்பு ஏற்பட்ட நிலங்களில் மரங்கள் வைத்துப் பயிராக்கப்பட்டன. 1,700 ஏக்கர்களில் இந்தப் பணிக்காகவும், நிலங்களை அளவீடு செய்வதற்காகவும் ரூ. 60,000 செலவிடப்பட்டது. 250 ஏக்கர்களில் யூகலிப்டஸ் மரங்கள் வைக்கப்பட்டன. மேலும், 9,000 ஏக்கர்கள் மேய்ச்சல் இடமாக அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன. இதற்குச் செலவு ரூ. 2·25 லட்சம்.

துள்ளும் மீன்கள்


நாட்டு வளத்தைப் பாடவந்த இலக்கியப் புலவர் அனைவரும், பண்டை நாளில் மீன் வளத்தையும் புகழ்ந்து பாடியிருக்கிறார்கள். ஒரு நாட்டின் செழிப்புக்கு மீன் மிகுந்திருப்பதும் ஒரு காரணம் ஆகும்.

முத்தமிழ் நாட்டை ஆண்ட முடியுடை மூவேந்தரில் பாண்டியரின் கொடி மீனக் கொடியாகும். இதிலிருந்து, மீன் வளத்திற்கு நமது முன்னோர் அளித்துவந்த சிறப்பை நாம் உணர முடியும்.

ஆகையினால், கிராமப் பொருளாதார வளத்திற்கு மீன் அள அபிவிருத்தி முக்கியமானதாக விளங்குகிறது. மீன் வளர்ப்பின்

மூலம் துணை வருமானம் கிடைக்கிறது. அத்துடன் கிராமத்தில் உணவுப் பிரச்சினையைப் போக்கவும் அது ஓரளவு உதவக்கூடும்.

அடையாறு கழிமுக நீரோடையைப் பயன்படுத்தி மாவட்டத்தில் மாதிரி மீன் பண்ணை ஒன்றை அமைக்கும் திட்டம் இரண்டாவது திட்டக் காலத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டது. கடற்கரைக் கழிமுகங்களிலும், உப்பங்கழிகளிலும் மீன் அள அபிவிருத்திக்கு உள்ள சாத்தியக் கூறுகளை விளக்கிக் காட்டுவதே இத்திட்டத்தின் நோக்கம்.



இந்தத் திட்டத்தின்படி, அடையாறு நீரோடை ஒரு பண்ணைக்குள் திருப்பிவிடப்பட்டு அப்பண்ணையில் மீன் வளர்ப்புக் குட்டைகள், மீன் குஞ்சு பொரிக்கும் குட்டைகள், மதகுகள் முதலியவை அமைக்கப்பட்டுள்ளன. அலுவலகம், ஆய்வுக்கூடம் இவற்றிற்கு வேண்டிய கட்டடங்களும், ஸ்டோர் அறையும் கட்டி முடிக்கப்பட்டன. ஆய்வுக் கூடத்தில் ஆராய்ச்சி வேலை தொடங்கிவிட்டது. இத்திட்டத்தின் ஒதுக்கீடு ரூ 3 லட்சம்.

சேமிப்பு அறை

விற்பனையாவதற்கு முன்பு மீனைக் கெடாமல் பாதுகாக்க வேண்டியுள்ளது. இதன் பொருட்டுக் குளிர்ப்பதனச் சேமிப்பு அறைகள் கட்டப்படுகின்றன. செங்கற்பட்டு மாவட்டத்தில் எண்ணூரில் ரூ.26,000 செலவு மதிப்பீட்டில் ஒரு குளிர்ப்பதனச் சேமிப்பு அறை நிறுவப்பட்டு வருகிறது.

மீன்பிடி துறைகளிலிருந்து விற்பனை நிலையங்களுக்கும், பயன்படும் இடங்களுக்கும் மீனை எடுத்துச் செல்ல விரைவான போக்குவரத்து வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. பழவேற்காடு—சென்னை, மாமல்லபுரம்—சென்னை ஆகிய இரு பாதைகளிலும் விரைவு வாகனங்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன.

கிராமங்களில் புதுவாழ்வு



"மாநிலம் பயனுற வாழ்வதற்கே" நமது திட்டங்கள் செயல் படுத்தப்பட்டு வருகின்றன. அவற்றின் வெற்றி மக்களின் வெற்றி. ஆகையினுல், திட்டங்களால் நாட்டு மக்கள் அனைவருக்கும் நல் வாழ்வு கிட்டவேண்டும். அப்படி யில்லாமல், சமுதாயத்தில் ஒரு சிலருக்கு மட்டும் வாய்ப்பும் வசதியும் அளித்து, 'மற்றவரைப் புறக்கணித்தால் அது உண்மையான முன்னேற்றம் ஆகாது. அதனுல் சமுதாய வாழ்க்கை சீரழிந்தே போகும்.


நாடு என்பது என்ன? மாடமாளிகைகளும், கூடகோபுரங்களும் நிறைந்த பெரிய பெரிய பட்டணங்கள் மட்டும்தானு? இல்லவே யில்லை. வயலும் வரப்படுத்த வாய்க்காலும் நிறைந்த சிற்றூர்கள், மலைகள், ஆறுகள், அனைத்துக்கும் மேலாக நாட்டின் பல பாகங் களிலும் வாழும் மக்கள் ஆகிய அனைவரும் சேர்ந்தே ஒரு நாடா கின்றனர். எனவே, நாட்டு முன்னேற்றம் என்பது அந்நாட்டு மக்களின் முன்னேற்றமே ஆகும்.

இன்று தமிழ் நாட்டில் சுமார் 18,000 கிராமங்கள் இருக்கின்றன. இவற்றைப் புறக்கணித்து நாடு வளர்ச்சியடைய முடியாது. நகரங்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களையும், உழைப்பையும் கொடுத்து உதவுபவை கிராமங்களே. ஆகையினால் கிராமங்கள் முன்னேற்றம் பெற்று விளங்கினால்தான், நகரங்களும் நலமாக இருக்க முடியும். இதனை உணர்ந்தே, "இந்தியா கிராமங்களில் வாழ்கிறது" என்று பொருளாதார வல்லுநர்கள் கூறுகின்றனர். காந்தியடிகளும் நம் நாட்டின் இருதயம் இருக்கும் இடமாகக் கிராமங்களை மதித்து, அவற்றின் உயர்வுக்காக வாழ்நாளெல்லாம் அயராது பாடுபட்டார்.

கிராமங்களின் நல்வாழ்வு சமுதாய வாழ்க்கையின் அடிப்படையில்தான் அமைய முடியும். இந்த நிலைமை நமது நாட்டில் பண்டைக் காலத்தில் நீடித்திருந்தது. கிராமத்தின் பொதுக் காரியங்களை மக்களே ஒன்றுகூடிக் கவனித்துக் கொண்டார்கள். வைகையில் நீர் பெருக்கெடுத்துக் கரைபுரண்டபோது, வீட்டுக்கு ஓர் ஆள் வந்து கரையமைக்குமாறு பாண்டிய மன்னன் பணித்ததாகத் திருவிளையாடற் புராணம் கூறுகிறது. பொதுக் காரியத்தை நிறைவேற்றுவதில் அனைவருக்கும் பொறுப்பு உண்டு என்பதையே இந்நிகழ்ச்சி நினைவூட்டுகிறது.

கடமை நெறி


பொன் முடியார் என்ற புலவர் பெருமாட்டி பாடிய புறப்பாட்டு ஒன்றில், மகனைப் பெற்று வளர்த்தல் தனது கடமையாகவும், அவனைச் சான்றோன் ஆக்குதல் தந்தையின் கடமையாகவும், வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லனின் கடமையாகவும், நன்னடை நல்கல் வேந்தனின் கடமையாகவும், போர்க்களத்தில் யானையைக் கொன்று வீழ்த்தல் அக்காளையின் கடமையாகவும் கூறப்பட்டுள்ளன. கிராம வாழ்க்கை சீராகச் செயல் படுவதற்கு ஒவ்வொருவரின் திறமை, தகுதிக்கு ஏற்றவாறு கடமைகள் வகுக்கப்பட்டிருந்தன.



மக்கள் அனைவருக்கும் வாய்ப்புக்கள் அளித்து, அவர்களைச் சிந்திக்கச்செய்து கிராமங்களின் மறுமலர்ச்சிக்கு வழிகோலவே சமுதாயநல வளர்ச்சித் திட்டங்கள் வகுக்கப்பட்டன. கிராம மக்களின் செயல் திறம், அறிவு, ஆற்றல், தொண்டுள்ளம்,

முன்னேற்ற ஆர்வம் முதலியவற்றை முறையாகப் பயன்படுத்தி அவர்களது வாழ்வு உயர வழிகாட்டிக் கைகொடுத்து உதவுவதே இத்திட்டங்களின் நோக்கம். இவை ஆரம்பத்தில் மக்கள் உதவி பெறும் அரசாங்கத் திட்டங்களாக இருந்து, இப்பொழுது அரசாங்க உதவி பெறும் மக்கள் திட்டங்களாக மாறியிருக்கின்றன.

ஒரு புதுச் சோதனையில் நாம் வெற்றி பெற்று அதன் பலனை அவனிக்கு உணர்த்த இருக்கின்றோம். "எல்லாரும் அமரநிலை எய்தும் நன்முறையை" இது உலகுக்கு விளக்கிக் காட்டுகிறது.



திறந்தவெளி அரங்கம்—கலியாம் பூண்டி

சமுதாய நல வளர்ச்சித் திட்டத்தில் பல அபிவிருத்தித் திட்டங்கள் அடங்குகின்றன: வேளாண்மை, கால்நடை பராமரிப்பு, உடல் நலமும் கிராமச் சுகாதாரமும், கல்வி, சமூகக் கல்வி, போக்கு வரத்து, கிராமக் கலைகள், கைத்தொழில்கள், கதர், குடியிருப்பு, மாதர்நலம் முதலியன அடங்குகின்றன. சுருங்கக் கூறினால், சமுதாய நல வளர்ச்சித் திட்டம் கிராம வாழ்க்கையின் எல்லா அம்சங்களிலும் மறுமலர்ச்சியைத் தோற்றுவிக்கிறது; வேளாண்மைக்குச் சிறப்பான இடத்தை அளிக்கிறது.

செங்கற்பட்டு மாவட்டம் மொத்தம் 27 சமுதாய நல வளர்ச்சி வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. உத்திரமேரூர் வட்டாரத்தைச் சேர்ந்த கலியாம் பூண்டி, 1959 ஆம் ஆண்டுக்கான சமுதாய நல வளர்ச்சிப் பரிசைப் பெற்றுள்ளது.

கலியாம் பூண்டி, உத்திரமேரூரிலிருந்து ஐந்து மைல் தொலைவில் உள்ளது. சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் அமுலாக்கப்படுவதற்கு முன்பு இங்குக் கல்வி, போக்குவரத்து, சுகாதார வசதிகள் போதுமான அளவில் இல்லை. ஆயின் இப்பொழுது ஓர் உயர் நிலைப்பள்ளி, விலங்கு மருத்துவமனை, படிப்பகம், சமுதாய நிலையம், தண்ணீர்த்தொட்டி, மகப்பேறு நிலையம் ஆகியவை இருக்கின்றன. கிராமத்தில் மின்சார வசதி அளிக்கப்பட்டிருக்கிறது. பஸ் போக்குவரத்து உண்டாக்கித் தரப்பட்டுள்ளது. கிராம மக்கள் திட்டங்களில் மிகுந்த ஒத்துழைப்புடன் பங்கெடுத்துக் கொண்டு, கிராமம் நல்ல முறையில் முன்னேற உதவியிருக்கிறார்கள்.

மக்களால், மக்களின் நன்மைக்காக நடத்தப்படும் மக்களது ஆட்சியே, குடியாட்சி எனப்படுகிறது. உலக அரங்கில் பரிசோதனைக்கு உட்பட்ட எல்லா ஆட்சி முறைகளிலும் இதுவே சாலச் சிறந்ததாகத் திகழ்கிறது. "மன்னன் உயிர்த்தே மலர்தலை யுலகம்" என்ற கருத்து மாறி, இன்று, "எல்லாரும் இந்நாட்டு மன்னர்" என்ற லட்சியம் நிலைபெற்று விட்டது.

மாண்புறும் மக்களாட்சி

ஊராட்சியிலும் அபிவிருத்தி வேலைகளிலும் மக்களுக்குக் கூடுதல் உரிமைகளும் பொறுப்புக்களும் வழங்கும் முயற்சியை ஒட்டி இன்று பஞ்சாயத்துகள் அமைக்கப்பட்டு வருகின்றன. அதிகாரம் ஒரே இடத்தில் குவிந்து போவதால், நிர்வாகம் மிகச் சக்தியுடனும் சுறுசுறுப்புடனும் செயல்பட முடிவதில்லை. அதைப் பரவலான முறையில் விநியோகஞ் செய்தால், நாட்டின் எல்லாப் பாகங்களும் முன்னேறுவதுடன், திட்டங்களின் நிறைவேற்றத்தில் மக்கள் பங்கும் மாண்பு பெற்று விளங்கும்.

தங்கள் பகுதி எவ்வாறு முன்னேற வேண்டும், அதற்கான வாய்ப்பும் வசதியும் யாவை, அவற்றை எவ்வாறு சிறந்த முறையில் பயன்படுத்திக்கொள்வது போன்ற விஷயங்களை அப்பகுதி மக்களைக் காட்டிலும் மற்றவர்கள் திறம்பட உணர்ந்து கொண்டிருக்க இயலாது. ஆகையினால், ஒரு பகுதியின் முன்னேற்றத்திற்கு அங்கு வாழும் மக்களே முன்னின்று முனைந்து பணியாற்றினால் நல்ல பயன் ஏற்படுவது உறுதி.

பண்டைக் காலத்தில் தமிழ்நாட்டுக் கிராமங்கள் தம் வலுவிலேயே நிலைத்துநின்றன. அந்த அந்தக் கிராமத்துக்குத் தேவையான பொருள்கள் அவ்வப் பகுதியிலேயே உற்பத்தி செய்யப்பட்டன. ஒவ்வொரு கிராமமும் தன்னிறைவு பெற்று விளங்கியது. "நாடென்ப நாடா வளத்தன" என்று வள்ளுவர் நாட்டுக்குக் கூறியுள்ள இலக்கணம், கிராமத்திற்கும் பொருந்தி யிருந்தது.

முக்கியமாகச் சோழ மன்னர்களின் காலத்தில் கிராமங்கள் சிறு குடியரசுகளாகவே இயங்கி வந்தன. இதற்கு உத்திரமேரூர்க் கல்வெட்டு சிறந்த சான்ருக விளங்குகிறது. அக்காலத்தில் கிராமக் காரியங்களைக் கவனிக்கக் கிராமப் பிரதிநிதிகள் "குடவோலை" முறையால் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அவர்கள் அக்கிராமத்தின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டார்கள். அவர்களுக்கு வேண்டிய அதிகார வரம்பும் அரசனுல் அளிக்கப்பட்டிருந்தது.

ஆயின், அந்நியர் ஆட்சிக் காலத்தில் நிர்வாக உரிமைகள் மக்களிடமிருந்து பறிக்கப்பட்டு ஒரே இடத்தில் குவிக்கப்பட்டன. எந்த ஒரு காரியத்திற்கும் அரசாங்க உத்தரவு வேண்டும்; மக்களின் பிரதிநிதிகளால் தம் விருப்பப்படி வளர்ச்சிப் பணிகளைச் செய்ய முடியாது என்ற நிலை ஏற்பட்டது. சுதந்திரத்திற்குப் பின்னர்தான் இந்நிலை படிப்படியே மாற்றப்பட்டு அதிகாரம் மக்களின் கைக்குவர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இவற்றின் கனிந்த ஒரு நிலையாகவே இன்று பஞ்சாயத்துகள் விளங்குகின்றன. இவை பஞ்சாயத்து அங்கத்தினர்களுக்குக் கடமைகளை மட்டும் கொடுக்கவில்லை; அவற்றை நிறைவேற்று வதற்கு வேண்டிய அதிகாரங்களையும், பொருள் வசதியையும் அளித்துள்ளன. ஆகையினுல், நம் நாட்டில் குடியாட்சி முறை அடித்தளத்திலிருந்து எழுப்பப்பட இவை வழிகாட்டுகின்றன. இவற்றின் வெற்றியைப் பொறுத்தே இந்நாட்டில் மக்களாட்சியின் வெற்றி அடங்கி யிருக்கிறது.

பஞ்சாயத்துகளின் பொறுப்பு

சமுதாயநல வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றும் பொறுப்பும் இனிப் பஞ்சாயத்துகளைச் சார்ந்தது ஆகும். சுருங்கக் கூறுவதானுல், யாரையும் நம்பி எதனையும் சார்ந்திராமல், கிராம மக்கள் தங்கள் சுய பலத்துடனும், சுய சிந்தனையுடனும், சுதந்திரத்துடன் முன்னேற அதிகாரமளித்து வழி நடத்துவதுதான் பஞ்சாயத்து ஆட்சி. நமது மாநிலத் தல நிர்வாகத்தில் புரட்சிகரமான ஓர் உன்னத நிலையை 1958 ஆம் ஆண்டு பஞ்சாயத்துச் சட்டம் தோற்றுவித்துள்ளது.

செங்கற்பட்டு மாவட்டத்தில் 27 சமுதாயநல வளர்ச்சி வட்டாரங்களிலும் பஞ்சாயத்து யூனியன்கள் அமைக்கப்பட்டுள்ளன. மாவட்ட அபிவிருத்தி கௌன்சிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

கூட்டுறவின் சாதனைகள்


"ஒன்று பட்டால் உண்டு வாழ்வே" என்பது எக்காலத்திற்கும், எந்நாட்டிற்கும் பொருந்தும் பழமொழியாகும். ஊர் ஒன்றி வாழ்வதால் ஒருவருக்கும் கேடு நேரிடாது. மாறாக, அனைவருக்கும் அளவற்ற நன்மைகள் உண்டாகும். ஒருவரை மற்றவர் புரிந்து கொள்வதற்கும், ஒற்றுமையோடு உழைத்து அனைவரும் வாழ்க்கையில் உயர்வதற்கும் கூட்டுறவு இயக்கம் வழிகாட்டுகிறது.

நம் நாட்டில் வேளாண்மை சிறப்பாக முன்னேறாததற்கு ஒரு முக்கியக் காரணம், நிலங்கள் இங்குச் சிறு சிறு துண்டுகளாகப் பிரிக்கப்பட்டு, அவற்றில் நிதி வசதியற்ற குடியானவர்கள் சாகுபடி செய்ய வேண்டியிருப்பது ஆகும். முன்பெல்லாம் பண்ணைச் செலவுகளுக்கு உழவர்கள் லேவாதேவிக்காரர்களிடம் அதிக வட்டிக்குக் கடன் வாங்க வேண்டியிருந்தது. இதனால் குடியானவர்களின் வாழ்க்கையில் வளம் சிறக்கவில்லை; உற்பத்தியும் உயரவில்லை.

இந்நிலைமையைத் தவிர்க்கக் கூட்டுறவு இயக்கம் அந்நியர் ஆட்சிக் காலத்திலேயே ஆரம்பிக்கப்பட்டது. ஆயின் அது போதுமான அளவு பரவாமல் நின்று விட்டது. நாட்டு விடுதலைக்குப் பின்னர், வேளாண்மை வளர்ச்சியில் அக்கறை கொண்ட மாநில அரசாங்கம், இத்துறையில் அதிகக் கவனம் செலுத்தத் தொடங்கியது. ஐந்தாண்டுத் திட்டங்களில் கூட்டுறவு முக்கிய

இடத்தைப் பெற்றது. இன்று நம் மாநிலத்திலுள்ள ஒவ்வொரு கிராமமும் கூட்டுறவு இயக்க வசதியைப் பெற்றிருக்கிறது.

வேளாண்மை, தொழிலியல் பொருளாதார வளர்ச்சியில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு முக்கியப் பங்கு உண்டு எனத் திட்டக் கமிஷன் நிர்ணயித்திருக்கிறது. ஆகையினால், இரண்டாவது திட்டக் காலத்தில் செங்கற்பட்டு மாவட்டத்தில் விரிவான அளவில் கூட்டுறவு இயக்கம் வளர்ச்சி பெற்றது.




கூட்டுறவு விநியோக, விற்பனைச் சங்கம்—திருவள்ளூர்

வேளாண்மைக் காரியங்களுக்காகவும், குடியானவர்கள் தங்கள் சமூக, பொருளாதார நிலைகளில் அபிவிருத்தி காண்பதற்காகவும் கிராமக் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் கடன் வசதி அளிக்கப் படுகிறது. செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள எல்லாக் கிராமங் களும் கூட்டுறவுத் திட்டத்தின் கீழ்க் கொண்டுவரப்பட்டுள்ளன.

கிராமக் கடன் சங்கங்களின் எண்ணிக்கை, அங்கத்தினர்களின் எண்ணிக்கை, சங்கங்கள் பணியாற்றும் பரப்பு ஆகியவை அதிகரித்து வந்திருக்கின்றன.

		1951	1961
1.	கிராமக் கடன் சங்கங்கள்	576	826
2.	வேளாண்மைப் பாங்குகள்	—	33
3.	கடன் வழங்கு சங்கங்கள்	—	18
4.	உப சங்கங்கள்	—	57
5.	கூட்டுறவால் பயன் அடையும் கிராமங்கள்	1,062	2,054
6.	அங்கத்தினர்கள்	43,792	2,05,453



கூட்டுறவு வேளாண்மைப் பாங்கு—தாமல்

இரண்டாவது திட்டம் தொடங்கும்வரை, சிறு கிராமக் கடன் சங்கங்கள் மட்டுமே குறைந்த தவணைக் கடன், நடுத்தரத் தவணைக் கடன் ஆகியவற்றைக் குடியானவர்களுக்கு அளித்தன. இரண்டாவது திட்டக் காலத்தில் பெரிய அளவு சங்கங்களும் (வேளாண்மைப் பாங்குகள்), கடன் வழங்கு சங்கங்களும் ஏற்படுத்தப்பட்டன. சிக்கன முறையிலும், திறன் மிக்க வழியிலும் கடன் வசதிகளை அதிகரிக்கச் செய்வதற்காக இவை ஏற்படுத்தப் பட்டன. இரண்டு ஐந்தாண்டுத் திட்டக் காலங்களிலும் குடியானவர்களுக்கு ரூ. 721·63 லட்சம் அளவுக்குக் கடனைக் கொடுக்கப்பட்டுள்ளது.

	குடியானவர்களுக்குக் கொடுக்கப்பட்ட கடன் (ரூபாய் லட்சத்தில்)
முதல் திட்டக் காலத்தில்	43·86
இரண்டாவது திட்டக் காலத்தில்	677·77
மொத்தம்	721·63

குடியானவர்கள் தங்கள் பொருளைத் தகுந்த சந்தர்ப்பத்தில் நல்ல விலைக்கு விற்க வசதியில்லாமல் நஷ்டமடைகின்றனர். இந்த நிலைமை மாறி அவர்கள் உற்பத்திப் பொருள்களின் மூலம் நல்ல பலன் அடையச் செய்வதற்காகக் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் அமைக்கப்பட்டன. மாவட்டத்தில் மதுராந்தகம், காஞ்சீபுரம், ஸ்ரீபெரும்புதூர், செங்கற்பட்டு, பொன்னேரி, சைதாப்பேட்டை,

திருவள்ளூர், திருத்தணி ஆகிய இடங்களில் 8 கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் இருக்கின்றன.


கூட்டுறவுச் சங்கங்கள் கிடங்குகளைக் கட்ட அரசாங்கம் பொருளுதவி அளிக்கிறது. குடியானவர்கள் தங்கள் உற்பத்திப் பொருள்களுக்கு நல்ல விலை யேற்படும்வரை பொறுத்திருந்து பார்க்க இந்தக் கிடங்குகள் உதவும்; அங்கத்தினர்கள் அவற்றில் தங்கள் உற்பத்திப் பொருள்களைச் சேர்த்து வைக்கலாம்.

மாவட்டத்தில் அரசாங்கப் பொருளுதவியுடன் மொத்தம் 23 கிடங்குகள் கட்டப்பட்டுள்ளன. இவற்றில் 4 கிடங்குகள் விற்பனைச் சங்கங்களையும், 8 கிடங்குகள் வேளாண்மைப் பாங்குகளையும், ஒரு கிடங்கு கிராமப் பாங்குகளையும், 10 கிடங்குகள் கிராமக் கடன் சங்கங்களையும் சேர்ந்தவை.

கூட்டுறவுப் பண்ணை

கூட்டுறவு இயக்கத்தில் கூட்டுறவுப் பண்ணைக்கு ஒரு சிறப்பிடம் அமைந்திருக்கிறது. நிலங்கள் லாபமற்ற நிலையில் துண்டு துண்டுகளாகச் சிதறியிருக்கும் நிலைமைக்குப் பரிகாரம் காணக் கூட்டுறவுப் பண்ணை ஒரு சிறந்த வழியாகும். புதிய முன்னேற்ற முறைகளில் கூட்டுறவின் அடிப்படையில் சாகுபடி செய்வதன் மூலம் நல்ல பலன் கிடைக்கும்.

கூட்டுறவு வேளாண்மைக் கிடங்கு—பெருநகர்



மாவட்டத்தில் 3 கூட்டுறவு இணைப்புப் பண்ணைகளும் (Co-operative Joint Farming Societies), 6 நிலக் குடியேற்றக் கூட்டுறவுச் சங்கங்களும் உள்ளன.

பால் பண்ணையின் வளர்ச்சிக்காகவும் மாவட்டத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மாவட்டத்தில் கடந்த பத்தாண்டுக் காலத்தில் 38 பால் விநியோகக் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன; பால் உற்பத்தி, கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படும் கடன் தொகை ஆகியவை அதிகரித்துள்ளன.


	1951	1961
பால் விநியோக சங்கங்கள்	87	125
தினசரி பால் கறவை (பட்டினம் படிகளில்)	636	2,678
கறவை மாடுகள் வாங்க அங்கத்தினர்களுக்கு அளிக்கப்பட்ட கடன் ரூ.	92,540	3,76,325

வீடு கட்டும் சங்கங்கள்

மாவட்டத்தில் தொழிலாளர்கள், குறைந்த, நடுத்தர வருமானக்காரர்கள் முதலியோருக்கு வீடுகள் கட்டித்தரும் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவை அரசாங்கத்திடமிருந்து நீண்ட தவணைக் கடன்கள் வாங்கி, சங்க அங்கத்தினர்கள் வீடுகட்ட உதவுகின்றன.

	1951	1961
வீடுகட்டும் சங்கங்கள்	17	30
கட்டப்பட்ட வீடுகள்	111	620
வழங்கப்பட்ட கடன் (ரூபாய் லட்சத்தில்)	5·29	21·69

வளரும் தொழில்கள்



"உண்பது நாழி உடுப்பவை இரண்டே" என்றிருந்த காலம் மாறிவிட்டது. இன்று மனிதனின் தேவைகள் அளவிறந்து பெருகி விட்டன. உணவில் பற்பல வகை; உடுப்பில் பற்பல வகை என்று வாழ்க்கையின் தேவைகள் பெருகி வருகின்றன.

இந்நிலையில், வேளாண்மைப் பொருளாதாரத்தை மட்டும் நம்பி ஒரு நாடு முன்னேறிவிட முடியாது. இன்று உலக அரங்கில் முதலிடம் பெற்று, மண்ணையும் விண்ணையும் அளந்து விஞ்ஞானத் துறையில் மிகப் புகழ்பெற்று விளங்கும் நாடுகள் அனைத்தும், புதிய புதிய தொழில்களை வளர்த்து அவற்றின் மூலம் முன்னேறியவையே ஆகும். உற்பத்திப் பெருக்கத்திற்கும், வாழ்க்கைத்தர உயர்வுக்கும் அடிப்படைக் காரணமாகத் தொழில் வளர்ச்சி அமைந்துள்ளது.

ஆகையினால், தொழில்களைப் புறக்கணித்து வெறும் வேளாண்மையை மட்டும் நம்பி நாம் உயர்ந்துவிட முடியாது. உலகத்தோடு ஒட்டி ஒழுகினால்தான், நாமும் முன்னேற்றம் பெற்றுள்ள

நாடுகளைப்போல் உயர்வடைய முடியும். இந்தக் கருத்து தமது இதய ஒலியாக இருந்த காரணத்தினால்தான் பாரதியார்,

"ஆயுதம் செய்வோம், நல்ல காகிதம் செய்வோம்;
ஆலைகள் வைப்போம், கல்விச் சாலைகள் வைப்போம்;
ஓயுதல் செய்யோம், தலை சாயுதல் செய்யோம்;
உண்மைகள் சொல்வோம், பல வண்மைகள் செய்வோம்"

என்று பாடியிருக்கிறார்.

இந்த அடிப்படையிலேயே, தொழில் வளர்ச்சிக்காக அரசாங்கம் அரும்பாடு பட்டு வருகிறது. அரசாங்கத் துறையில் தொழில்களை அமைப்பதோடு, தனியாரின் முயற்சிகளுக்கு ஊக்கமும் உதவியும் அளித்து வருகிறது. சிறு அளவுத் தொழில்களில் எண்ணற்றோர் ஈடுபட்டுத் தாமும் உயர்ந்து நாட்டையும் உயர்த்த அவர்களுக்குக் குறைந்த கட்டண விகிதங்களில் இட வசதியும், கருவிச் சாதன வசதியும் செய்து தருகிறது. இவ்வாறே கிராமத் தொழில்களின் வளர்ச்சியிலும் பெருங்கவனம் செலுத்தி வந்துள்ளது.

மோட்டார்கள்

செங்கற்பட்டு மாவட்டத்தைப்பற்றி நினைக்கும்பொழுது நம் மனக்கண் முன்னால் சைக்கிள் சக்கரங்கள் சுழல்கின்றன; மோட்டார் அடித்தளங்கள் அழகாகப் பவனி வருகின்றன. கலைச் சிறப்புக்'த உறைவிடமாக விளங்கும் இம்மாவட்டம் இன்று தொழில் துறையிலும் செழித்து முன்னேறி வருகிறது.

மாவட்டத்தில் வண்டலூரில் 12 ஏக்கர் பரப்பில், "ஸ்டாண்டர்டு மோட்டார்" தொழிற்சாலை அமைந்துள்ளது. மேலும் தொழிற்சாலையை விஸ்தரிப்பதற்'கு 47 ஏக்கர் திறந்தவெளி இருக்கிறது. இத்தொழிற்சாலை 1952-ல் இயங்கத் தொடங்கியது. இதன் முதலீடு ஒரு கோடி ரூபாய்; தொழில் முதலீடு இரண்டரைக் கோடி ரூபாய் ஆகும்.

ஆண்டு ஒன்றுக்கு 3,000 சிறு கார்களை உற்பத்தி செய்வதற்காக இந்தத் தொழிற்சாலைக்கு லைசென்சு வழங்கப்பட்டது. இந்த நிலையம் தற்பொழுது தன் முழு உற்பத்தியையும் தொடங்கிவிட்டது. ஆண்டுக்கு 6,000 சிறு கார்களையும், ஒரு டன் நிறையுள்ள 1,500 லாரிகளையும் உற்பத்தி செய்ய இத்தொழிற்சாலை அனுமதிக்கு விண்ணப்பம் செய்துள்ளது. 1963-ம் ஆண்டுக்குள் அது இந்த உற்பத்தித் திறனை அடைந்துவிடக் கூடும்.

இப்பொழுது, "ஸ்டாண்டர்டு மோட்டார்" தொழிற்சாலையில் 1,200 பேர் வேலை செய்கிறார்கள். தொழிலாளர்களுக்குப் பல

நன்மைகள் செய்து தரப்பட்டிருக்கின்றன. இவ் ஆண்டு இறுதியில் 250 இல்லங்களைக் கொண்ட குடியிருப்பு கட்டும் வேலை மேற்கொள்ளப்படும்.

இப்பொழுது இத்தொழிற்சாலையில் நம் நாட்டில் செய்யப்படும் கார் பாகங்களும் பயன்படுத்தப்படுகின்றன. 1963-ம் ஆண்டில் 20 சதவீதப் பாகங்களை மட்டுமே இறக்குமதி செய்து, 80 சதவீத உள் நாட்டுப் பாகங்களைப் பயன்படுத்த முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.


ஓர் ஆண்டிற்கு, "லேலண்டு காமெட்" என்று அழைக்கப்படுகிற மேல்பகுதியற்ற மோட்டார் அடித்தளங்கள் 5,400-ம், பளு தாங்கக்கூடிய கனரக மோட்டார் அடித்தளங்கள் 1,200-ம் உற்பத்தி செய்வதற்கு, எண்ணூரில் உள்ள "அஷோக் லேலண்டு" என்ற தொழிற்சாலைக்கு லைசென்சு அளிக்கப்பட்டுள்ளது இப்பொழுது இத் தொழிற்சாலையில் ஆண்டுக்கு 2,400 "காமெட்" மோட்டார் அடித்தளங்களும், 60 பளு தாங்கும் மோட்டார் அடித் தளங்களும் செய்யப்படுகின்றன.



சைக்கிள்கள்

"ராயல் என்பீல்டு" என்ற தொழிற்சாலைக்கு ஆண்டு ஒன்றுக்கு 5,000 மோட்டார் சைக்கிள்களையும், 1,800 மூன்று சக்கர வண்டிகளையும் உற்பத்திசெய்ய லைசென்சு அளிக்கப்பட்டது. இத்தொழிற்சாலை 1955—56 ஆம் ஆண்டிலிருந்து உற்பத்தி செய்யத் தொடங்கி விட்டது. 1961 இறுதிக்குள் இன்னும் அதிகப்படியான மோட்டார் சைக்கிள் செய்யப்படலாம். இவற்றையெல்லாம் தவிர, ஆண்டிற்கு 6,000 ஸ்கூட்டர்களையும், ஸ்கூட்டர், இலேசான மோட்டார் சைக்கிள்கள் ஆகியவற்றிற்கான 9,600 எஞ்சின்களையும் உற்பத்தி செய்வதற்காக இத்தொழிற்சாலைக்கு லைசென்சு அளிக்கப்பட்டுள்ளது.

அம்பத்தூரில் அமைக்கப்பட்டுள்ள, "டி. ஐ. சைக்கிள்ஸ் ஆப் இந்தியா" என்ற சைக்கிள் தொழிற்சாலை, ஒரு முக்கியமான வளர்ச்சி ஆகும். இது இந்தியாவில் உள்ள மிகப்பெரும் சைக்கிள் தொழிற்சாலைகளுள் ஒன்ருகும். தற்பொழுது இத்தொழிற்சாலையில் ஆண்டு ஒன்றுக்குச் சுமார் 3 லட்சம் சைக்கிள்கள் உற்பத்தி



அம்பத்தூர் சைக்கிள் தொழிற்சாலை

செய்யப்படுகின்றன. இவற்றைத் தவிர இத்தொழிற்சாலை, ஆண்டுக்கு 1½ லட்சம் சைக்கிள் பாக யூனிட்டுகளையும், 7½ லட்சம் ப்ரீவீல்களையும் (Freewheels) உற்பத்தி செய்து வருகிறது.

மாவட்டத்தில் 7,500 டன்களிலிருந்து 11,500 டன்கள்வரை சூப்பர் பாஸ்பேட் உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலை ஒன்றை நிறுவுவதற்காக இந்திய அரசாங்கத்திற்கு விண்ணப்பம் செய்யப் பட்டு, அவ்விண்ணப்பத்தை மாநில அரசாங்கம் சிபாரிசு செய்துள்ளது.

சிறு அளவுத் தொழில்களின் கீழுள்ள முக்கியமான திட்டங் களில், சிறு தொழிலதிபர்களுக்குக் கடன் அளிக்கும் திட்டமும் ஒன்றாகும். மாவட்டத்தில் 1959—60 ஆம் ஆண்டில் 226 விண்ணப்பங்கள் உதவி கோரி அனுப்பப்பட்டன; அவற்றுக்கு ரூ. 54,300 கடனாக அளிக்கப்பட்டது. 1960—61 ஆம் ஆண்டில் 228 விண்ணப்பங்கள் உதவி கோரி அனுப்பப்பட்டன; ரூ. 69,300 கடனாக அளிக்கப்பட்டது.

இவ்வாறே கனரகத் தொழில்களுக்கு உதவியளிக்கும் திட்டத் தின் கீழும் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டது. கனரகத் தொழில்களுக்கு அரசாங்க உதவி கோரி இம் மாவட்டத்திலிருந்து 8 விண்ணப்பங்கள் 1959—60 இல் சிபாரிசு செய்து அனுப்பப் பட்டன; ரூ. 58,500 தொழில், வர்த்தகத்துறை நெறியாளரால் அனுமதிக்கப்பட்டது. 1960—61 இல் 6 விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டன; ரூ. 3,95,000 தொழில், வர்த்தகத் துறை நெறியாளரால் அனுமதிக்கப்பட்டது.

மதுராந்தகம் வட்டம் படாளம் கிராமத்தில் மதுராந்தகம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை அமைந்துள்ளது. சுமார் 102 ஏக்கர் பரப்பில் இந்த ஆலை நிறுவப்பட்டுள்ளது. நாள் ஒன்றுக்கு 800 டன் முதல் 1,000 டன் வரை கரும்பைச் சாறு பிழியக்கூடிய திறனுள்ளது இந்த ஆலை.


சர்க்கரை ஆலை

மதுராந்தகம் கூட்டுறவுச் சர்க்கரைத் தொழிற்சாலை அங்கத்தினர்கள் சுமார் ரூ. 23 லட்சம் பங்கு முதல் செலுத்தியுள்ளனர்; மாநில அரசாங்கம் ரூ. 20 லட்சம் பங்கு முதல் அளித்துள்ளது. ஆலை உற்பத்தியைத் தொடங்கியுள்ளது.

எளிய இயந்திர சாதனங்களைக்கொண்டு இந்தியப் பாணியிலும், ஐரோப்பியப் பாணியிலும் பாத அணிகள் செய்வதில் நல்ல பயிற்சியளிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் பல்லாவரத்தில் ஒரு நிலையம் நிறுவப்பட்டுள்ளது. இது 1958 இல் இயங்கத் தொடங்கியுள்ளது. பாத அணிகளைச் சிறந்த முறையில் செய்வதற்காகத் தொழிலாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.

அந்தமான் தீவிலிருந்து வரும் மரங்களிலிருந்து தீக்குச்சிகளையும், மருந்து தடவிய தீப்பெட்டியின் அட்டைகளையும் உற்பத்தி செய்வதற்காகத் திருவொற்றியூரில் ஒரு தொழிற்சாலை நிறுவப்பட்டுள்ளது. இங்கு உற்பத்தியான பொருள்கள் அரசாங்கத்

மதுராந்தகம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை



தீப்பெட்டித் தொழிற்சாலைகளுக்கும் தனியார் தொழிற்சாலைகளுக்கும் அனுப்பப்படுகின்றன. இத்தொழிற்சாலை 1959 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திலிருந்து வேலை செய்யத் தொடங்கிற்று. ரூ. 1·46 லட்சம் மதிப்புள்ள தீக்குச்சிகளையும், தீப்பெட்டி மர அட்டைகளையும் உற்பத்தி செய்துள்ளது.

அழகுத் தோல் பொருள்களை உற்பத்தி செய்வதற்காகப் பல்லாவரத்தில் ஒரு பயிற்சி நிலையம் தொடங்கப்பட்டது. தோல் பொருள்களை உற்பத்தி செய்வதில் தொழிலாளருக்குச் சிறப்பான புதிய முறைகளில் பயிற்சியளிப்பதே இந்நிலையத்தின் நோக்கம். விளையாட்டுப் பொம்மைகள் உட்பட பலவகை அழகுத் தோல் பொருள்களை உற்பத்தி செய்வதில் 11 பேருக்கு முனைப்பான பயிற்சி அளிக்கப்பட்டது. பின்னர் இந்நிலையம் கிண்டித் தொழிற் பண்ணைக்கு மாற்றப்பட்டது. அழகுத் தோல் பொருள்களை உற்பத்தி செய்வதில் 23 பேர்களுக்கு இந்நிலையம் பயிற்சி அளித்துள்ளது.

அச்சு உருவங்களைச் செய்வதிலும், பழங்காலச் சிற்பங்களையும், நினைவுச் சின்னங்களையும் சுதை உருவங்களாக வடிப்பதிலும் கலைஞர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக, சிற்பக் கலையின் நிலைக்களனாக விளங்கும் மாமல்லபுரத்தில் ஒரு பயிற்சி நிலையம் நிறுவப்பட்டுள்ளது. இக்கலையில 9 கலைஞர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.


மிகப் பழங் காலந்தொட்டுப் புகழ்மிக்க கலையாக விளங்கி வரும் சிற்பக்கலையில் சில கலைஞர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக மாமல்லபுரத்தில் 1957 இல் ஒரு பயிற்சி நிலையம் தொடங்கப்பட்டது. 11 பேர் நான்காண்டுப் பயிற்சி பெற்றுள்ளனர்.

சுருட்டு செய்யும் தொழிலாளர்களுக்கு நன்மையளிக்கும் வகையில் 1956 இறுதியில் காஞ்சீபுரத்தில் ஒரு கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்பட்டது. இதில் 33 அங்கத்தினர் சேர்ந்தனர். ஒவ்வொரு அங்கத்தினருக்கும் ரூ. 100 வீதம் 8 அங்கத்தினருக்குப் பங்கு முதல் கடன்தொகையாக வழங்கப்பட்டது. சங்கத்திற்குத் தொழில் முதல் கடன்தொகையாக ரூ. 7,000-ம், உதவித் தொகையாக ரூ. 1000-ம் அளிக்கப்பட்டது. அமைப்புச் செலவு முதலியவற்றுக்குத் தொழில், வர்த்தக நெறியாளர் ரூ. 1,800 அனுமதித்துள்ளார்.

சங்கம் 1957 ஏப்ரல் முதல், மாதம் ஒன்றுக்கு 8,000 சுருட்டுகள் வீதம் உற்பத்தி செய்யத் தொடங்கியது.

கயிறு செய்யும் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் ஒன்று 1957 ஆம் ஆண்டு சதுரங்கப்பட்டினத்தில் தொடங்கப்பட்டது. இதுவரை இச்சங்கத்திற்கு ரூ. 26,250 கடனாகவும், ரூ. 8,726 மானியமாகவும் அளிக்கப்பட்டுள்ளது.

பாத்திர உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் ஒன்று 27 அங்கத்தினர்களுடன் காஞ்சீபுரத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இவர்கள் செலுத்தியுள்ள பங்கு முதல் ரூ. 1,725. சங்கத்திற்குத் தொழில் முதல் கடன் தொகையாக ரூ. 11,000 அளிக்கப்பட்டுள்ளது. மேலும், அமைப்புச் செலவுகளுக்காக ரூ. 46,000 கடனுகவும், ரூ 2,000 மானியமாகவும் சங்கத்திற்கு அளிக்கப்பட்டுள்ளது.



காஞ்சீபுரம் பாத்திர உற்பத்தியாளர் சங்கம்

பித்தளைப் பாத்திரம்

சங்கம் 1960 ஜனவரி முதல் இயங்கத் தொடங்கியுள்ளது. இது 9,476 ராத்தல் நிறையுள்ள பித்தளைப் பாத்திரங்களை உற்பத்தி செய்துள்ளது; ரூ. 16,562 அளவுக்குப் பாத்திரங்களை விற்பனை செய்துள்ளது.

தச்சு, கொல்லு வேலை யூனிட் ஒன்று ஸ்ரீபெரும்புதூரில் இயங்க ஆரம்பித்திருக்கிறது. உள்ளூரில் இருக்கும் அரசாங்க அலுவலகங்களுக்கும், பஞ்சாயத்து அலுவலகங்களுக்கும் இந்த யூனிட் ஆசன வசதிகளைச் செய்து தரும்.

பூவிருந்தவல்லியில் தச்சு வேலை யூனிட் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வாடகைக் கட்டடத்தில் இந்த யூனிட் அமைந்துள்ளது. பஞ்சாயத்து அலுவலகங்களுக்கும், உள்ளூரில் உள்ள அரசாங்க அலுவலகங்களுக்கும் ஆசன வசதிகள் செய்துதரும் பணியில் யூனிட் ஈடுபட்டு வருகிறது.

ஊத்துக்கோட்டை யூனியனில் தச்சுவேலைப் பயிற்சி நிலையம் ஒன்று உள்ளது. இது பெரியபாளையத்தில் வாடகைக் கட்டடத்தில் அமைந்துள்ளது. ஊத்துக்கோட்டை வட்டார வளர்ச்சி அதிகாரியின் மூலம், நிலையத்துக்குத் தேவையான கருவிகளும், இயந்திரங்களும் வாங்கப்பட்டுள்ளன. பயிற்சியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.



ஆவடி ஆயுதப் போலீஸ் முகாமில் ஊசி மருந்துக் குப்பிகள் செய்தல்

ஸ்ரீபெரும்புதூரில் மறை ஆணிகளும், திருகு வில்லைகளும் தயாரிக்கும் தொழில் கூட்டுறவுச் சங்கம் ஒன்று 21 அங்கத்தினர்களுடன் 1953 இல் பதிவு செய்யப்பட்டது. சங்கத்திற்குத் தொழில் முதல் கடனாக ரூ 1,74,000 அளிக்கப்பட்டது. 1961 இல் தொழிற்சாலை வேலை செய்ய ஆரம்பித்தது.

தச்சுவேலை

கடம்பத்தூர் வளர்ச்சி வட்டாரத்தில் தொழில் வினைஞர் கூட்டுறவுச் சங்கம் ஒன்று 82 அங்கத்தினர்களுடன் 1958 இல் தொடங்கப்பட்டது. இச்சங்கத்திற்கு ரூ. 8,000 தொழில் முதல் கடனாகவும், ரூ. 14,750 மானியமாகவும் அளிக்கப்பட்டது. அத்துடன் ரூ. 6,000 கடனாக அனுமதிக்கப்பட்டது.

சங்கம் 1959—60 இல் ரூ. 3,057 மதிப்புள்ள தச்சுவேலைப் பொருள்களை உற்பத்தி செய்தது. நடை முதலாண்டில் சங்கத்தின் வியாபாரம் அபிவிருத்தி அடையும்.


காஞ்சீபுரம் வட்டாரம் செவிலிமேடு கிராமத்தில் தச்சு, கொல்லுவேலை நிலையம் ஒன்றை நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ஆவடியில் ஆயுதப் போலீஸ் முகாமில் ஊசி மருந்தடைப்புக் கண்ணாடிக் குப்பிகள் செய்யும் கூட்டுறவுச் சங்கம் ஒன்று 20 அங்கத்தினர்களுடன் 1960 செப்டம்பர் முதல் வேலை செய்யத் தொடங்கியுள்ளது. அங்கத்தினர்கள் செலுத்தியுள்ள பங்கு முதல் ரூ. 100 ஆகும். மேலும், ஒரு அங்கத்தினருக்கு ரூ. 100 வீதம் பங்கு முதல் கடன் தொகை 20 அங்கத்தினர்களுக்கு அளிக்கப் பட்டுள்ளது. சங்க ரிசர்வ் நிதிக்கு, தொழில் வர்த்தகத்துறை நெறி யாளரால் ரூ. 1,000 அனுமதிக்கப்பட்டுள்ளது.

பாய் நெசவு

குடுமியாண்டித் தோப்பு பாய் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் 1960 ஆகஸ்டில் பதிவு செய்யப்பட்டது. சங்கம் 1960 அக்டோபரில் வேலை தொடங்கியது. 30 பாய் நெசவாளர் அங்கத்தினர்களாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். முழு அளவு பொருளாதார உதவி அளிக்கப்படாததால் சங்கம் இன்னும் வியா பாரத்தைத் தொடங்கவில்லை. பாய் நெசவு, காகிதப் பொம்மை

ஸ்ரீ பெரும்புதூர் மறை ஆணிகள், திருகு வில்லைகள் தொழிற்சாலை



தயாரிப்பதற்குக் கடம்பத்தூரில் ஒரு கூட்டுறவுச் சங்கத்தை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.



பூவிருந்தவல்லி தச்சுப்பட்டறை

பனையோலைப் பொருள்களைத் தயாரிக்கும் கூட்டுறவுச் சங்கம் ஒன்று பழவேற்காட்டில் 1960 ஜூனில் தொடங்கப்பட்டது. சங்கத்திற்கு ரூ. 2,180 மானியம் அளிக்கப்பட்டுள்ளது. சங்கம் நல்ல முறையில் நடந்துவருகிறது.

ஒதிக்காட்டில் செங்கல் தயாரிக்கும் கூட்டுறவுச் சங்கம் ஒன்று 1960 அக்டோபரில் பதிவுசெய்யப் பட்டது. சங்கத்திற்கு ரூ. 10,000 மானியம் அனுமதிக்கப்பட்டுள்ளது. சங்கம் விரைவில் வேலை தொடங்க நடவடிக்கை எடுக்கப் படும். வேடபாளையம் செங்கல் தயாரிப்போர் கூட்டுறவுச் சங்கம் அண்மையில் பதிவு செய்யப்பட்டுள்ளது. வள்ளிபுரம் செங்கல் தயாரிப்போர் கூட்டுறவுச் சங்கம் 1957 மார்ச்சில் பதிவு செய்யப் பட்டு நல்ல முறையில் நடந்து வருகிறது.

ஆவடியில் ஆயுதப் போலீஸ் படையினர் நல் வாழ்வுக்காக அங்கிகள் தயாரிக்கும் மகளிர் கூட்டுறவுச் சங்கம் 1961 பிப்ரவரியில் பதிவு செய்யப்பட்டு 20 அங்கத்தினர்களுடன் வேலை செய்யத் தொடங்கியுள்ளது. ஒரு அங்கத்தினருக்கு ரூ. 200 வீதம் பங்குமுதல் கடன் அனுமதிக்கப்பட்டது.

தையல், பூ வேலை

மகளிருக்குத் தையல், பூ வேலைகளில் பயிற்சி அளிக்கும் நோக்கத்தோடு மீஞ்சூரில் ஒரு யூனிட் அமைக்கப்பட்டுள்ளது. இங்குப் பயிற்சி பெற 12 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். 1960 ஜூலை முதல் யூனிட் நல்ல முறையில் இயங்கி வருகிறது.

உத்திரமேரூர் வட்டாரம் கலியாம் பூண்டி கிராமத்தில் ஒரு தையல் யூனிட் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பூண்டி வட்டாரத்தில் தையல், பூ வேலை நிலையம் ஒன்றை நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது.

திருவள்ளூர் வட்டாரம் ஈக்காட்டில் தையல் யூனிட் ஒன்றை நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கான இடம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

மகளிருக்குத் தையல், பூ வேலைகளில் பயிற்சி அளிக்கும் நோக்கத்தோடு காஞ்சீபுரம் ஆர்ப்பாக்கம் கிராமத்தில் தையல், பூ வேலை நிலையம் ஒன்றை நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது.

கைத்தறி நெசவாளர்களுக்குத் தொழிலில் பல இன்னல்கள் இருக்கின்றன. கடன் வசதியற்ற நிலைமை, ஆலைத் துணிகளோடு கைத்தறித் துணிகள் போட்டியிட முடியாத நிலைமை முதலிய பல காரணங்களினால் நெசவாளர்களின் நிலை மிகத்தாழ்ந்து இருந்தது. இந்நிலையிலிருந்து அவர்களை உயர்த்தி நல்வாழ்வு அளிக்கவும், கைத்தறித் துணிகளைத் தரப்படுத்தவும் நெசவாளர்களைக் கூட்டுறவுச் சங்கத்தின் கீழ்க் கொண்டுவரும் திட்டம் அமுலாக்கப்பட்டது.

கைத்தறித் தொழில் வளர்ச்சி

செங்கற்பட்டு மாவட்டத்தில் 1951 இல் 24 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இருந்தன. இவற்றில் சேர்ந்திருந்த தறிகளின் எண்ணிக்கை 3,339. இச்சங்கங்கள் 74 கிராமங்களுக்குப் பயனளித்தன. கூட்டுறவுச் சங்க அங்கத்தினர்கள் ஆண்டு தோறும் ரூ. 18,93,436 மதிப்புள்ள கைத்தறித் துணிகளை உற்பத்தி செய்து, ரூ. 21,81,522-க்கு விற்பனை செய்தார்கள். கடந்த பத்தாண்டுகளில் ஏற்பட்ட வளர்ச்சியின் காரணமாக, இன்று இம்மாவட்டத்தில் 53 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. இவற்றில் சேர்ந்துள்ள தறிகளின் எண்ணிக்கை 7,764. இச்சங்கங்கள் 126 கிராமங்களுக்குப் பயனளிக்கின்றன. கூட்டுறவுச் சங்க அங்கத்தினர்கள் ஆண்டுதோறும் ரூ. 36,02,676 மதிப்புள்ள கைத்தறித் துணிகளை உற்பத்தி செய்து, ரூ. 38,30,108-க்கு விற்பனை செய்யும் சக்தியைப் பெற்றுள்ளார்கள்.

ஏழ்மை நிலையில் உள்ள நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் சேர்ந்து வாழ்வில் வளங்காண உதவும் பொருட்டு அவர்களுக்குக் கடனாகப் பங்கு முதலும், தொழில் முதலும் கொடுத்துதவ அரசாங்கம் முன் வந்தது. கடந்த பத்தாண்டுகளில் 4,843 நெசவாளர்களுக்கு ரூ. 1,02,604 பங்கு முதல் கடன் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

கைத்தறித் துணியின் தரத்தையுயர்த்தி, அதன் உற்பத்திச் செலவைக் குறைப்பதற்காக நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடனும் உதவித் தொகையும் வழங்கப்பட்டன. பொதுத்

தரமுள்ள பாவுநூல் பிரிக்கும் குழல்கள், ஊடுநூல் போடும் கருவிகள், காலால் இயக்கப்படும் தறிகள், பாவு இயந்திரங்கள், ஜாக்குவார்டு என்பவரால் கண்டுபிடிக்கப்பட்ட தறிகள் போன்ற சீர் செய்யப்பட்ட கருவிகளை வாங்குவதற்காக இக்கடனும் உதவித்தொகையும் வழங்கப்படுகின்றன. செங்கற்பட்டு மாவட்டத்தில் கடந்த பத்தாண்டுகளில் ரூ. 43,422 அளவுக்குக் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உதவியளிக்கப்பட்டது.

இப்பொழுது மாவட்டத்தில் 3 கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், 3 பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் சிறு சாயச்சாலைகள் இருக்கின்றன.

பயிற்சி

கூட்டுறவுச் சங்கங்களைத் திறம்பட நடத்திச் செல்வதில் வழிவகை காட்டும் முறையில், நிர்வாகி, கணக்கர் அல்லது குமாஸ்தா இவர்களுக்கு மூன்று மாதகாலப் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சிக் காலத்தில் ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ. 45 உதவித் தொகையாக அளிக்கப்படுகிறது. கைத்தறித் துணிகளில் புது ரகங்களைப் புகுத்த ஊக்கம் அளிக்கும் வகையில் கூட்டுறவுச் சங்க அங்கத்தினர்களுக்கும் மூன்று மாத காலப் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சிக் காலத்தில் ஒவ்வொருவருக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ. 40 உதவித்தொகையாக அளிக்கப்படுகிறது.

தறிகள் இல்லாத நெசவாளர்கள், தொழிற்சாலைகளிலிருந்து நீக்கப்பட்டவர்கள் ஆகியவர்களின் நன்மைக்காக மாவட்டத்தில் இரண்டாவது திட்டக் காலத்தில் நெசவாளர் தொழில் கூட்டுறவுச் சங்கம் ஒன்று 50 தறிகளுடன் தொடங்கப் பட்டது.

உறுப்பினர்களின் பங்கு முதல், தறிகளுக்கான தொழில் முதல், தறிகள், துணைச் சாதனங்கள், மேஜை, நாற்காலிகள் ஆகியவற்றை வாங்குதல் போன்றவைகளுக்காக இந்தக் கூட்டுறவுச் சங்கத்திற்கு ரூ. 39,250 அரசாங்கத்தால் கடன் தொகையாக அனுமதிக்கப் பட்டது. கூட்டுறவுச் சங்க வாடகை, சாயச் சாலை, அலுவலாளர் சம்பளம் ஆகியவற்றுக்காக இச்சங்கத்திற்கு இதுவரை ரூ. 6,053 உதவித்தொகை அனுமதிக்கப்பட்டுள்ளது.

நூல் நெசவில் ஈடுபட்டுள்ள நெசவாளர்களுக்கு உதவுவது போலவே, பட்டு நெசவாளர்களுக்கும் அரசாங்கம் கூட்டுறவுச் சங்க உதவியினை அளித்து வருகிறது. கைத்தறிச் சங்கங்களுக்கு விவரிக்கப்பட்ட உதவிகள், பட்டுச் சங்கங்களுக்கும் அளிக்கப் படுகின்றன. கூட்டுறவுச் சங்க ஆரம்ப கட்டத்தில் மூன்றாண்டு

களுக்கு வாடகை, மேஜை, நாற்காலி முதலியவற்றை வாங்குதல், மேற்பார்வை அலுவலாளர் சேவை ஆகியவற்றை அரசாங்கமே ஏற்றுக்கொள்கிறது.

கடந்த பத்தாண்டுகளில் பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூ. 82,439 உதவித் தொகையாக அளிக்கப்பட்டுள்ளது. சீர் செய்யப்பட்ட கருவிகளை வாங்குவதற்காக ரூ. 15,910 அனுமதிக்கப் பட்டது. இங்குள்ள மூன்று பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் சிறு சாயச்சாலைகள் அமைந்திருப்பது முன்னரே குறிப்பிடப்பட்டுள்ளது.



காமாட்சியம்மன் பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்

நெசவாளர்களில் பெரும்பாலோர் மோசமான இடங்களில் வாழ்கிறுர்கள். ஆகவே, அவர்களுக்கு நல்ல குடியிருப்பு இடங்கள் அமைத்து வசதி செய்து தரவும் திட்டமிடப்பட்டது. மாவட்டத்தில் காஞ்சீபுரம் காமாட்சியம்மன் பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்க அங்கத்தினர்களுக்கு 70 குடியிருப்பு இல்லங்கள் அமைத்துக் கொடுக்கும் திட்டம் அமுலாக்கப் பட்டுள்ளது. இதன் பொருட்டு அரசாங்கம் ரூ. 2,11,349 நீண்ட காலக் கடனுகவும், ரூ. 84,000 பொருளுதவியாகவும் அனுமதித்துள்ளது. மேலும், ஒரு கூட்டுறவுத் துணைப் பதிவாளர், ஒரு பொதுப்பணித் துறை மேற்பார்வையாளர் ஆகியோரின் சேவை இலவசமாகக் கிடைக்க அனுமதிக்கப்பட்டுள்ளது. எழுபது இல்லங்களும் கட்டப்பட்டு வருகின்றன.

காஞ்சீபுரத்தில் பட்டுத் துணிகளின் விற்பனைக்கு ஒரு கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்பட்டுள்ளது. கூட்டுறவுச் சங்கத்தில் சேராத நெசவாளர்களுக்கு நன்மை யளிப்பதற்காக இவ்விற்பனைச் சங்கம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. சிறு முதலாளிகள் இதில் அங்கத்தினர்களாக இருக்கின்றனர். இவர்கள் கொண்டு வந்து தரும் சரக்குகளின் விலையில் 65 சதவீதம் இவர்களுக்கு முதலில் கடனாகக் கொடுக்கப்படுகிறது. பின்னர் துணிகள் விற்பனை செய்யப் பட்டதும், மீதி 15 சதவீதம் தரப்படுகிறது. சங்க நிர்வாகச் செலவுகளுக்காக விற்பனையில் 3 சதவீதக் கழிவுத் தொகை அங்கத்தினர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்படுகிறது.

பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் சேலைகள், தாவணிகள், ரவிக்கைத் துண்டுகள், சொக்காய்த் துணிகள் முதலானவை கலைத்திறனும் கவினும் நிறைந்த முறையில் தயாரிக்கப்படுகின்றன. இவை உள்ளூரில் விலைபோவதுடன், இந்தியா நெடுகிலும், இலங்கையிலும் விரும்பி வாங்கப்படுகின்றன.

விற்பனையில் தள்ளுபடி

கைத்தறித் துணிகளின் உற்பத்தி பெருகிவிட்டால் மட்டும் போதாது. அவை நல்ல முறையில் விற்பனையாவதற்கும் வழிவகை காணவேண்டும். இதற்காக அரசாங்கம் தள்ளுபடித் தொகை அளித்து வருகிறது. இதன் மூலம் இன்று கைத்தறித் துணிகளின் விற்பனை அதிகரித்துள்ளது.

சாதாரணமாகக் கைத்தறித் துணி விற்பனையில் ரூபாய்க்கு 5 காசுகள் விதம் தள்ளுபடித் தொகை ஆண்டு முழுவதும் அளிக்கப்படுகிறது. பொங்கல், தீபாவளி, கைத்தறி வாரம் போன்ற சிறப்புமிக்க சந்தர்ப்பங்களில் ரூபாய்க்கு 10 காசுகள் தள்ளுபடித் தொகையாக அளிக்கப்படுகிறது. செங்கற்பட்டு மாவட்டத்தில் ரூ. 4 34,510 தள்ளுபடித் தொகையாகக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் இதுவரை எட்டு அகில இந்தியக் கைத்தறி வார விழாக்கள் கொண்டாடப் பட்டிருக்கின்றன. கைத்தறித் துணிகளைப் பொதுமக்களிடம் பிரபலப் படுத்தும் நோக்கத்தில் நகரங்களிலும் கிராமங்களிலும் பொருட்காட்சிகள் நடத்தப்பட்டிருக்கின்றன. பொதுக்கூட்டங்கள், ஊர்வலங்கள் நடத்தப் படுகின்றன. கைத்தறவார விழா, பொருட்காட்சி ஆகியவற்றுக்காகும் செலவுக்கு அரசாங்கம் உதவித்தொகை அளிக்கிறது. கூட்டுறவுச் சங்கங்கள் விளம்பரத்திற்கும், துண்டு வெளியீடு, காகிதப் பை, தள்ளுவண்டி, அதற்கான பணியாளர் வசதி முதலிய

வற்றுக்கும் செய்யும் செலவுக்கு அரசாங்கம் மானியமும், உதவித் தொகையும் கொடுக்கிறது. இங்கு ஒரு தள்ளுவண்டிக்கான உதவித்தொகையாக அரசாங்கம் ரூ. 2,659 அனுமதித்துள்ளது.

பின்வரும் புள்ளிவிவரம் செங்கற்பட்டு மாவட்டத்தில் கைத் தறித் தொழில் வளர்ச்சியைத் தெளிவாகக் காட்டுகிறது:—

ஆண்டு	சங்கங்கள்	பயன்பெற்ற கிராமங்கள்	ஆண்டு விற்பனை விதம்	சாயச்சாலை கள்
1951	24	74	ரூ. 21,81,522	——
1961	53	126	ரூ. 33,30,108	6

கதரின் வளர்ச்சி

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டப் பின்பாதியில் அம்பர் ராட்டைத் திட்டம் இம்மாவட்டத்தில் முதன்முதலாகப் பூவிருந்த வல்லியில் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் வளர்ச்சியும், முன்னேற்றமும் திருப்திகரமான முறையில் இருக்கின்றன. நான்கு அம்பர் பயிற்சிப் பள்ளிக்கூடங்களில் இதுவரை 1,700-க்கு அதிக மான பேர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. 1,400 அம்பர் ராட்டைகள் இதுவரை பயிற்சி பெற்ற அம்பர் நூற்பாளர்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன.

கைராட்டைகளும், தீவிர விஸ்தரிப்புக் கதர்த் திட்டங்களின் கீழ் 800-க்குச் சற்று அதிகமாக விநியோகிக்கப்பட்டுச் செங்கற்பட்டு மாவட்டத்தின் கிராமப்புறங்கள் பலவற்றில் இயங்கி வருகின்றன.

இது தவிர இம்மாவட்டத்திலுள்ள உத்திரமேரூர், பெருநகர், ஒரக்காட்டுப்பேட்டை, ராள்ளப்பாடி, திருமழிசை முதலிய ஊர் களில் உள்ள நெசவாளர்களுக்குக் கதர் நூல் நெசவில் பிரத்தியேகப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. பயிற்சி பெற்ற 200 கதர் நெச வாளர்களில் 133 பேர் கதர் நெசவாளர்களாகப் பதிவு செய்து கொண்டுள்ளனர்.

கதர் உற்பத்திக்காக இம்மாவட்டத்தில் ஐந்து உபகிளைகள் பணியாற்றுகின்றன. சுமார் 45 ஆயிரம் கெஜம் கதர் உற்பத்தி செய்யப்படுகிறது. மேலும், இம்மாவட்டத்தைச் சேர்ந்த காஞ்சீ புரத்தில் கதர்ப்பட்டு நெசவு கேந்திரம் ஒன்று திறம்படச் செய லாற்றிப் பல கதர்ப்பட்டு ரகங்களை உற்பத்தி செய்து வருகிறது.

இம்மாவட்டத்தில் இரண்டரை லட்சம் ரூபாய்களுக்கும் சற்று அதிகமாகவே கதர் விற்பனை ஆகியுள்ளது. இம்மாவட்டத்தின் அதிகாரத்திற்குட்பட்டதே சென்னை நகர கதர் அலுவலகமும்.

சென்னை நகரிலுள்ள 6 கதர் விற்பனை நிலையங்கள் மாத்திரம் ஆண்டொன்றுக்குக் கிட்டத்தட்ட ஆறு லட்ச ரூபாய் பெறுமான கதர் ஜவுளியை விற்பனை செய்கின்றன.

வேலையில்லாத் திண்டாட்டம், போதிய வேலையின்மை இவற்றைப் போக்கி வேலை வசதி அளிப்பதற்கும், மக்கள் தங்களுக்குத் தேவையான துணிகளைத் தாங்களே உற்பத்தி செய்து கொள்ள உதவி அளிப்பதற்கும் கதர்த் திட்டம் கிராம அபிவிருத்தியில் முக்கியமான ஒரு திட்டமாக எடுத்துக்கொள்ளப்பட்டது. இந்தக் கிராமத் தொழிலின் முக்கியத்துவத்தை உணர்ந்து 1956-ல் ஒரு தனித்துறை அமைக்கப்பட்டது. வருங்காலத்தில் இத்தொழில் இம்மாவட்டத்தில் பிரதானமான ஒரு கிராமத் தொழிலாக மலர நல்ல வாய்ப்பு உள்ளது.



சென்னை போன்ற மாநகரங்களில் இரவில் கண்ணுக்கினிய காட்சியினைக் காண்கிறோம். நகரப் பகுதிகளுக்கே உரிய செயற்கையும் விஞ்ஞானப் புதுமையும் கலந்த அழகு ததும்பி வழிகிறது. இரவைப் பகலாக்கும் பால்வண்ண ஒளிவிளக்குகள், ஊர்ச் செய்தி உலகச் செய்தி அனைத்தும் தந்து கலை நிகழ்ச்சிகளுக்கும் குறை வைக்காத வானொலிப் பெட்டிகள், நாகரிகக் கலை நிலையங்களாக விளங்கும் திரைப்படக் கொட்டகைகள், மின்சாரத்தினால் இயங்கும் ஊர்திகள், இயந்திரங்கள், ஆலைகள் முதலானவை நகர வாழ்க்கையின் உயிர்த் துடிப்புக்களாக இயங்கிக் கொண்டிருக்கின்றன.

இவற்றிற்கு எல்லாம் மூலகாரணமாக விளங்கும் மின்சாரத்தின் அருமை நமக்கு உடனே புலனாகிவிடுவது இல்லை. திடீரென்று இரண்டொரு விநாடிகளுக்கு மின்சாரத் தடை ஏற்பட்ட உடனே தான் நமக்கு நகர வாழ்க்கையே அந்தகாரத்தில் மூழ்கிப் போனது போன்ற திகைப்பு உண்டாகிறது. மின்சாரம் இல்லாவிட்டால், எவ்வாறு வாழ்க்கையின் ஓட்டமே திகைத்து நின்று விடுகிறது என்பதை உணருகிறோம்.

இன்று நாகரிகத்தின் அளவு கோலாகவும், அதன் உயிர் மூச்சாகவும் மின்சாரம் விளங்குகிறது. தொழில் புரட்சி ஏற்பட்டதைத் தொடர்ந்து மின்சாரத்தின் உபயோகம் மிகப்பெரிய அளவிலே வளர்ந்து வந்துள்ளது. நகரங்களுக்கு மட்டும் அல்லாமல், கிராமங்களுக்கும் இன்று மின்சாரம் இன்றியமையாது வேண்டப்படுகிறது. தெருவில் மண்டிக் கிடக்கும் இருளை விரட்டவும், சிறு தொழில் இயந்திரங்களை ஓட்டவும், வேளாண்மைப் பம்பு செட்டுகளை இயக்கவும் என்று பலவகைக் காரியங்களுக்காகக் கிராமப் பகுதிகளில் மின்சாரம் தேவைப்படுகிறது.

கிராமங்களுக்கு மின்சாரம்

அதனால் அரசாங்கம், மின்சாரப் பெருக்கத்திற்குத் திட்டங்களில் முதலிடம் அளித்துள்ளது. கிராமங்களுக்கு மின்சாரம் அளிப்பதில் தமிழ்நாடே முன்னணியில் இருந்து வருகிறது. நகரங்களிலுள்ள வசதிகள் கிராம மக்களுக்கும் கிடைக்குமாறு செய்யப்பட்டு வருகின்றன.



காஞ்சீபுரம் மின்சார நிலையம்

செங்கற்பட்டு மாவட்டத்திற்கு வேலூர் மின்சார விநியோகத்தின் மூலமாகவும், சென்னை மின்சார விநியோகத்தின் மூலமாகவும் மின்சார வசதி அளிக்கப்படுகிறது.

வேலூர் மின்சார விநியோகத்தின் கீழ் 1,214 கிராமங்கள் இருக்கின்றன. இவற்றில் 632 கிராமங்களுக்கு மின்சார வசதி அளிக்கப்

பட்டுள்ளது. 1961—62 ஆம் ஆண்டில் மேலும் 120 கிராமங்களுக்கு மின்சார வசதி அளிக்கப்படும். 1961 ஏப்ரல், மே மாதங்களில் 16 கிராமங்கள் மின்சார வசதி பெற்றன. வேலூர் மின்சார விநியோகத்தில் 6,970 வேளாண்மைப் பம்பு செட்டுகள் இருக்கின்றன. 1961—62 ஆம் ஆண்டில் மேலும் 1,500 பம்பு செட்டுகளுக்கு மின்சாரம் அளிக்கப்படும். 1961 ஏப்ரல், மே மாதங்களில் 206 பம்பு செட்டுகள் மின்சார வசதி பெற்றன. வேளாண்மைப் பம்பு செட்டுகளால் இப்பகுதியில் 30,000 ஏக்கர் நிலங்கள் பாசன வளத்தைப் பெற்றுள்ளன. இதனுல் உற்பத்தி உயர்ந்துள்ளது.

கிராமங்களுக்கு மின்சாரத்தை விஸ்தரிக்கும் 69 அனுமதிக்கப்பட்ட திட்டங்கள் அமுலில் உள்ளன. இவற்றை நிறைவேற்ற ரூ. 41·52 லட்சம் செலவாகும். மேலும், ரூ. 64·55 லட்சம் செலவாகக்கூடிய, 85 அனுமதிக்கப்பட்ட திட்டங்களும் அமுலாக்கப்பட இருக்கின்றன. இவற்றைத் தவிர, ரூ. 20·94 லட்சம் செலவாகக்கூடிய 17 திட்டங்கள் அனுமதிக்காகக் காத்திருக்கின்றன. 1961 ஏப்ரல், மே மாதங்களில் ரூ. 6·91 லட்சம் செலவாகக்கூடிய 7 உத்தேசத் திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

காஞ்சீபுரம் வட்டத்தில் 309 கிராமங்கள் இருக்கின்றன. இவற்றில் 187 கிராமங்களுக்கு மின்சார வசதி அளிக்கப்பட்டுள்ளது.

பம்பு செட்டுகள்

இப்பகுதியில் உள்ள மின்சாரப் பம்பு செட்டுகளின் எண்ணிக்கை 3,145 ஆகும். இவை 14,000 ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்கின்றன. மேலும் புதிய கிராமங்களுக்கும், பம்பு செட்டுகளுக்கும் மின்சார வசதி அளிப்பதற்காக ரூ. 12·54 லட்சம் செலவாகக் கூடிய 20 திட்டங்கள் அமுலாக்கப்பட்டு வருகின்றன. இவற்றைத் தவிர, ரூ. 11·96 லட்சம் செலவாகக்கூடிய 24 அனுமதிக்கப்பட்ட திட்டங்களும் அமுலாக்கப்பட இருக்கின்றன. மேலும், ரூ. 19,000 செலவாகக்கூடிய விஸ்தரிப்புத் திட்டம் ஒன்று அனுமதிக்காகக் காத்திருக்கிறது.

மாவட்டத்தில் காஞ்சீபுரம், வாலாஜாபாத், செங்கற்பட்டு, மதுராந்தகம், பெருநகர் ஆகிய இடங்களில் துணை மின்சார நிலையங்கள் இருக்கின்றன. தாமலில் ஒரு துணை நிலையம் அமைக்கப்பட்டு வருகிறது. இன்னெரு துணை நிலையத்தை நெல்வாயில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.



கல்வி விளக்கு

உலகை உணர்த்தவும், வாழ்வை உயர்த்தவும் உதவுவது கல்வி. அதனுல்தான் நம் முன்னேர் கல்வியைக் கண்ணெனப் போற்றி வந்தனர். மாந்தர் பெற்றுள்ள செல்வங்கள் யாவற்றிலும் தலையாய சிறப்புப் பெற்றதாகத் திகழ்வது கல்வியே. நீரால் நெருப்பால் அழிக்க ஒண்ணுதது; கள்வரால் கவர முடியாதது; கொடுக்கக் குறையாதது கல்வி. இதன் பெருமையைத் தெளிந்து உணர்ந்த திருவள்ளுவர்,

"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை"

என்று புகழ்ந்து பாடியுள்ளார்.

தனி மனிதனின் அறிவாற்றலுக்கு மட்டுமின்றிச் சமுதாயத்தின் உயர்வுக்கும் கல்வி வளர்ச்சி இன்றியமையாதது ஆகும். இன்று மனித இனம் விஞ்ஞானம், மருத்துவம், தொழில், இலக்கியம், கலை

முதலான எல்லாத் துறைகளிலும் எய்தியுள்ள முன்னேற்றத்திற்கு மூல காரணமாக விளங்குவது கல்வியே.

இதனால் கல்வி வளர்ச்சிக்காகப் பாடுபடுவது அரசாங்கத்தின் தலையாய கடமைகளுள் ஒன்றாகும். இதனைச் சுதந்திர அரசாங்கம் நன்கு உணர்ந்து தக்க முறையில் முன்னேற்ற நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. கல்லூரிகளையும் பள்ளிகளையும் புதிது புதிதாக ஏற்படுத்துதல், ஏழை எளிய மாணவர்களுக்குக் கல்விச் சலுகை அளித்தல், தொழில் நுணுக்க, அடிப்படைக் கல்வியினை வளர்த்தல், இலவசப் பகலுணவு அளித்தல் முதலான அரும்பணிகளை ஆற்றி வருகிறது. அவை நல்ல முறையில் இன்று பலன் தந்து வருகின்றன. கல்வி மறுமலர்ச்சியில் மக்களும் பங்கெடுத்துக்கொண்டு பணி யாற்றுதல் ஒரு மகத்தான சாதனையாகும். கல்வித் துறையில் நாம் அடைந்து வரும் முன்னேற்றம், "கல்வி சிறந்த தமிழ் நாடு" என்பதனை நிலைநாட்டி வருகிறது.

வளரும் கல்வி

தொடக்கநிலைக் கல்வி தகுந்த முறையில் வளராவிட்டால் கல்வித் துறையில் எந்த முன்னேற்றமும் சாத்தியமில்லாமல் போய் விடும். ஆகவே, செங்கற்பட்டு மாவட்டத்தில் கடந்த பத்தாண்டு களில் தொடக்கநிலைக் கல்வி மிகுந்த அளவில் விஸ்தரிக்கப் பட்டது.

	1951	1961
தொடக்கப் பள்ளிகள்	1,120	1,566
மாணவர்	74,300	1,54,514
உயர் தொடக்கப் பள்ளிகள்	74	237


மேலே காட்டிய புள்ளி விவரங்களிலிருந்து கடந்த பத்தாண்டு களில் தொடக்கப் பள்ளிகளின் எண்ணிக்கை பெருகிவந்திருப்பது நன்கு புலனாகும். இவ்வாறே பள்ளிகளுக்குச் செல்லும் குழந்தை களின் எண்ணிக்கையும் அதிக அளவில் உயர்ந்து வந்துள்ளது. உயர் தொடக்கப் பள்ளிகளும் அதிகரித்து வந்துள்ளன. 1951-ல் இருந்த உயர் தொடக்கப் பள்ளிகளைப் போல் இப்பொழுது மூன்று மடங்குக்கும் அதிகமான பள்ளிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

கல்வி கற்கக் குழந்தைகள் நெடுந்தொலைவு நடந்து செல்லும் நிலை இருக்கக் கூடாது என்பதில் கல்வித்துறை கண்ணுங் கருத்து மாக இருந்து வருகிறது. மாவட்டத்தில் மக்கள் தொகை 300-க்கு அதிகமாகவுள்ள கிராமங்களில் ஒரு மைல் தொலைவிலேயே பள்ளி வசதி செய்துதரப்பட்டுள்ளது. இன்னுஞ் சிறிய அளவில் உள்ள கிராமங்களுக்கும் இத்தகைய பள்ளிக்கூட வசதியைச் செய்துதர

வேண்டும் என்பதே அரசாங்கத்தின் லட்சியம். மாவட்டத்தில் இரண்டாவது திட்டக் காலத்தில் 1,471 அதிகப்படியான வகுப்புக்கள் திறக்கப்பட்டுள்ளன.

வழக்கமாகச் சொல்லித் தரப்பட்டு வரும் கல்வி முறை ஏட்டுக் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கிறது; ஆனால் அடிப்படைக் கல்வி முறையோ, அனுபவக் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கிறது. பிந்திய முறையின் நன்மைகள் இப்பொழுது மெல்ல உணரப்பட்டு வருகின்றன. இப்பொழுது மாவட்டத்தில் 291 தொடக்கப் பள்ளிகள் அடிப்படைப் பள்ளிகளாக மாற்றப்பட்டுள்ளன.

பள்ளிகளைப் பெருக்குவதுடன் நின்றுவிடாமல், கல்வியின் தரம் தாழ்ந்து போகாமல் பார்த்துக் கொள்வதிலும் அரசாங்கம் கவனமாக இருந்து வருகிறது. பள்ளிகளுக்குத் தேவையான சாதனங்களை அளிப்பதில் இரண்டாவது திட்டக் காலத்தில் முனைப்பான நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டது. அடிப்படைப்




துள்ளி ஓடும் பள்ளிச் சிறார்

பள்ளிகளுக்கு வேண்டிய கைத்தொழில் கருவிகள் வழங்கப்பட்டன. கச்சாப் பொருள்களை வாங்கிக்கொள்ள மானியம் அனுமதிக்கப்பட்டது.

அடிப்படைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் ஆண்டுக்கு மூன்று முறை ஆறு நாட்கள் கருத்தரங்கு கூடி, தங்களுக்கு

ஏற்படும் பிரச்சினைகளை விவாதித்துத் தீர்வுகாண வசதிசெய்துதரப் பட்டது. அடிப்படைப் பள்ளியல்லாத மற்றப் பள்ளி ஆசிரியர் களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. அவர்களது பள்ளிகளிலும் அடிப்படைக் கல்வியின் லட்சிய நோக்கம் நிறைவேற்றப்பட இந்தத் திட்டம் செயலாக்கப்பட்டது. உயர் தொடக்கப் பள்ளி களில் நூல் நிலையங்களை நடத்த மானியம் அளிக்கப்பட்டது. இரண்டாவது திட்டக் காலத்தில் ஒருங்கிணைந்த பாடத் திட்டம் மேற்கொள்ளப்பட்டது.



மாவட்டக் கழக உயர்நிலைப் பள்ளி—கடம்பத்தூர்

கூடுதலாகப் பள்ளிகள் திறக்கப்பட்டதால், ஆசிரியர்களும் அதிக அளவில் தேவைப்பட்டனர். அதற்காகப் புதிய அடிப் படைப் பயிற்சிப் பள்ளிகளைத் திறந்து அரசாங்கம் உதவியது. மாவட்டத்தில் இப்பொழுது ஆசிரியர்களுக்கான 4 அடிப்படைப் பயிற்சிப் பள்ளிகளும், ஆசிரியைகளுக்கான 3 அடிப்படைப் பயிற்சிப் பள்ளிகளும் இருக்கின்றன.

உயர்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கையும் கடந்த பத்தாண்டு களில் அதிக அளவில் உயர்ந்து வந்துள்ளது. 1951-ல் மாவட்டத் தில் 41 உயர்நிலைப் பள்ளிகள் இருந்தன; இன்று 79 உயர்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன.

	1951	1961
உயர்நிலைப் பள்ளிகள்	41	79
மாணவர்கள்	16,030	30,717

தொழில்களில் மாணவர்களுக்குப் பற்று ஏற்படச் செய்வதற்காக உயர் நிலைப் பள்ளிகளில் தொழிற் பயிற்சி வகுப்புக்கள் தொடங்கப் பட்டுள்ளன. இதனால் ஒரு மாணவன் தொழிலில் ஈடுபடுவதற்கு முன்னாலேயே அதற்கான பயிற்சியைத் தெளிவான முறையில் அடைகிறான்; அத்துடன் தன் வாழ்க்கைக்கான ஊதியத்தைத் தானே தேடிக்கொள்வதற்கும் தன்னைத் தயார் செய்து கொள்ளு கிறான். மாவட்டத்தில் இப்பொழுது 13 உயர் நிலைப் பள்ளிகளில் தொழிற் பயிற்சி வகுப்புக்கள் நடத்தப்படுகின்றன.

உயர்நிலைப் பள்ளிகளில் பாட போதனையின் தர உயர்வுக்காக விஞ்ஞானம் மற்றும் மூல பாடங்களைக் கற்பிக்கும் வசதிகள் அபி விருத்தி செய்துதரப்பட்டன. மாவட்டத்தில் இத்திட்டத்தின் மூலம் 16 உயர் நிலைப் பள்ளிகள் பயன் அடைந்தன.

நூல் நிலையம்

மாணவர்களின் பொது அறிவு வளர்வதற்கு நூல் நிலையங்கள் மிகவும் அவசியம் ஆகும். நூல் நிலைய வளர்ச்சிக்காக அரசாங்கம் பொருளுதவி அளித்தது. மாவட்டத்தில் 36 உயர் நிலைப் பள்ளி களில் நூல் நிலையங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டன.

மாணவர்களிடையே தன்னம்பிக்கையும் திறமையும் ஏற்படச் செய்வதற்காக உயர் நிலைப் பள்ளிகளில் கைவேலைப் பாடத்திட்ட மும் மேற்கொள்ளப்பட்டது. மாவட்டத்தில் 8 உயர் நிலைப் பள்ளி களில் கைவேலைப் பாடங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டன.

	உயர்நிலைப் பள்ளிகள்	
	1951	1961
தொழிற் பயிற்சி வகுப்புக்கள்	—	13
மூலபாட அபிவிருத்தி	—	16
நூல் நிலைய அபிவிருத்தி	—	36
கைவேலை வகுப்புக்கள்	—	8

கல்வி வளர்ச்சியில் மக்களுக்கு ஆர்வத்தையும், ஊக்கத்தை யும் ஏற்படுத்தி அவர்களது ஒத்துழைப்பைப் பெற்று அரசாங்கம் வெற்றியுடன் நிறைவேற்றிவரும் வேறு இரு திட்டங்களும் இருக் கின்றன. அவை: (1) பள்ளிச் சீரமைப்புத் திட்டம்; (2) இலவச நண்பகல் உணவுத் திட்டம். நமது வளர்ச்சித் திட்டங்கள் அனைத்தும் மக்களின் திட்டங்களே. அவ்வாறு இருக்கும் பொழுது, இவ்விரு திட்டங்களுக்கும் மக்களின் மனமுவந்த ஆதரவு கிடைத்து வருவதில் வியப்பொன்றும் இல்லை.

பள்ளிச் சீரமைப்புத் திட்டத்தின் கீழ், கல்வியின் நலன் கருதிப் பள்ளிக்கூட இடங்கள், கட்டடங்கள், ஆய்வுக்கூடக் கருவிகள்

முதலான உதவிகளைத் தாராள மனத்துடன் தந்து உதவுமாறு பிரதேச மக்கள் ஊக்கப்படுத்தப்படுகிருர்கள். பள்ளிச் சீரமைப்பு மகாநாட்டை முதலாவது தொடங்கி நடத்திய மாவட்டமாகச் செங்கற்பட்டு திகழ்கிறது.

மாவட்டத்தில் உள்ள எல்லாப் பள்ளிகளுமே இன்று இத் திட்டத்தின் பலனைப் பெற்றுள்ளன. ரூ. 46,51,000 மதிப்புள்ள 15,722 திட்டங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. சில பெரிய கட்டடங்கள் தவிர்த்த மற்றத் திட்டங்கள் அனைத்தும் முடிவடைந்து விட்டன.

மக்களிடமிருந்து மனமுவந்த நன்கொடைகளைப் பெற்று ஏழை மாணவர்களுக்கு இலவச உணவு அளிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன், இலவச நண்பகல் உணவுத் திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. 1956-ம் ஆண்டில் மாவட்டத்தில் 37 பள்ளிகளில் நண்பகல் உணவுத் திட்டம் செயல்பட்டு வந்தது. இதற்கு அரசாங்க உதவி ஒன்றும் இல்லை.

நண்பகல் உணவு


ஆயின் இப்பொழுது அரசாங்க உதவியுடன் மாவட்டத்தில் 1,601 பள்ளிகளில் 66,520 குழந்தைகள் இலவசப் பகலுணவு பெற்று வருகின்றனர். நாள் ஒன்றுக்குக் குழந்தை ஒன்றுக்கு 4 காசுகள் வீதம் பொதுமக்களிடமிருந்து நன்கொடையாகப் பெறப் பட்டால், அரசாங்கம் 6 காசுகள் வீதம் உதவியளிக்கிறது.

குழந்தைகளுக்கு இலவச நிகர் ஆடை அளிக்கும் திட்டமும் மற்ருெரு முக்கியமான சாதனையாகும். ஆடையில்லாக் குறையால் பல குழந்தைகள் பள்ளிக்கூடங்களுக்கு வரமுடியாமல் போகிறது. ஆகையினுல், ஏழைக் குழந்தைகளுக்கு நிகர் ஆடை வழங்கும் திட்டமும் மாவட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. மாவட்டத்தில் 42,920 குழந்தைகளுக்கு ரூ. 2,33,905 மதிப்புள்ள நிகர் ஆடைகள் வழங்கப்பட்டுள்ளன.

மாவட்டத்தில் நகராட்சிப் பகுதிகள் அனைத்திலும் கட்டாயக் கல்வித் திட்டம் அமுலில் உள்ளது. பள்ளிகளில் இலவச நண்பகல் உணவு அளித்தல், நிகர் ஆடை அளித்தல், பாடப் புத்தகங்கள், எழுது பலகைகள் வழங்குதல் முதலியவை அதிக அளவில் மாணவர்கள் பள்ளிக்குவர வகை செய்கின்றன. கல்வி மறுமலர்ச்சியில் நல்ல விழிப்பு ஏற்பட்டுள்ளது. இப்பொழுது மாவட்டத்தில் பாதிப் பகுதியில் 6 வயதுக் குழந்தைகளுக்கான கட்டாயக் கல்வி அமுலில் உள்ளது. பஞ்சாயத்து யூனியன்கள் அமைக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து மாவட்டம் முழுவதிலும் கட்டாயக் கல்வி ஏற்படுவதில் அதிகச் சிரமம் இராது என்று நம்பப்படுகிறது.

பார்வை யிழந்த மாணவர்களின் நலனுக்காகப் பூவிருந்தவல்லி யில் ஒரு பள்ளியை அரசாங்கம் நடத்தி வருகிறது. தொழுநோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் நலனுக்காகத் திருமணியில் ஒரு பள்ளி நிறுவப்பட்டுள்ளது.

நமது மாநிலத்தில் உள்ள முதியோர்களுக்குக் கல்வி யளித்து அவர்களை முன்னேற்றுவிக்கவும் அரசாங்கம் முயன்று வருகிறது. முதியோர் கல்வியில் பயிற்சி யளிக்க மாநிலத்தில் உள்ள இரண்டு பள்ளிகளில் ஒரு பள்ளி மாவட்டத்தில் திருக்கழுக்குன்றத்தில் 1960—61 தொடக்கம் வரை நடைபெற்று வந்தது. மாவட்டத் தில் தற்பொழுது 104 முதியோர் பள்ளிகள் இருக்கின்றன.



மதுரமங்கலம் உயர் நிலைப் பள்ளி

செங்கற்பட்டு மாவட்டத்தில் கல்வித்துறை வளர்ச்சியைக் காட்டும் சில புள்ளி விவரங்கள் பின் வருமாறு :—

	1951	1961
கலைக் கல்லூரிகள்	2	3
கட்டாயக் கல்வி கேந்திரங்கள்	66	492
பயிற்சிப் பள்ளிகள்	3	7
முதியோர் பள்ளிகள்	...	104
பயிலும் முதியோர்	...	2,049
நூல் நிலையங்கள்	...	34
பாலிடெக்னிக்குகள்	...	2

கல்வி நிலையங்களைப் புதுப்பிப்பதற்கும், விஸ்தரிப்பதற்கும் மாவட்டத்தில் பல திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. திரூர் அடிப்படைப் பயிற்சிப் பள்ளியில் நிர்வாகப்பகுதி ஒன்று ரூ. 17,000 செலவில் கட்டப்பட்டது. ரூ. 5,000 செலவில் தற்காலிகமாக ஒரு கொட்டகை அமைத்துக் கொடுக்கப்பட்டது. பூவிருந்தவல்லி பார்வையிழந்தோர் பள்ளியில் சுற்றுச்சுவர், உணவு அருந்தும் இடங்கள், ஆசிரியர் குடியிருப்பு அபிவிருத்தி, குடிநீர் வசதி முதலியவை செய்து தரப்பட்டுள்ளன.

குன்றத்தூர் அரசாங்க உயர்நிலைப் பள்ளியிலும், காஞ்சீபுரம் அரசாங்க மகளிர் அடிப்படைப் பயிற்சிப் பள்ளியிலும் கட்டட அபிவிருத்தி வேலை மேற்கொள்ளப்பட்டது.

செய்தித் துறையின் பணி

கல்வி வளர்ச்சி அறிவுப் பசிக்கு வழிகோலுகிறது. நமது தாய் நாட்டைப் பற்றியும், நாட்டின் முன்னேற்றத்திற்கு அடித்தளமாக விளங்கும் திட்டங்களைப் பற்றியும், அவற்றின் மூலம் நமது சமுதாயம் எத்தகைய பொருளாதாரப் பயணத்தை மேற்கொண்டிருக்கிறது என்பதைப் பற்றியும் அறிந்து கொள்ளும் ஆவல் உண்டாகிறது. இந்த வழியில் மக்களுக்குத் தொண்டாற்றும் சேவையைச் செய்தித் துறை செய்கிறது.

செங்கற்பட்டு மாவட்டத்தில் ஐந்தாண்டுத் திட்ட விளம்பரப் பணி 1956 முதல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கூட்டங்கள், ஹரிகதா காலட்சேபங்கள், வில்லுப் பாட்டுக்கள், நாடகங்கள், படக்காட்சிகள் போன்றவற்றின் மூலம் திட்டப் பிரசாரம் செய்யப்படுகிறது. 1958 முதல் மாவட்டம் முழுவதிலும் தேசீயச் சேமிப்புத் திட்டத்திற்கு ஆதரவு திரட்டப்பட்டு வருகிறது. பொருட்காட்சிகள் நடத்துதல், நூல்களை விநியோகித்தல் ஆகியவற்றின் மூலமும் திட்டங்களைப் பற்றிப் பொதுமக்களுக்கு விளக்கிச் சொல்லப்படுகிறது. மாவட்டத்தில் திட்டப் பிரசார அதிகாரியொருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.



" பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்"

மக்களாகப் பிறந்தோர் அனைவரும் ஓர் இனத்தவரே. அவர்களுக்குள் பாகுபாடு இல்லை. ஆனால் அவரவர் செய்யும் தொழிலால் மட்டுமே சிறப்பு வேறுபடும் என்பது திருவள்ளுவர் கருத்து.

அந்நியரை எதிர்த்து நாட்டு விடுதலைக்காகப் போராடிக் கொண்டிருந்த நேரத்தில், நமது மூடப் பழக்க வழக்கங்கள், சமுதாயக் கொடுமைகள் முதலியவற்றையும் எதிர்த்துக் கடுமையாகப் போராடினார் அண்ணல் காந்தியடிகள். "தீண்டாமை நமது சமுதாயத்திற்கே ஒரு களங்கமாக இருக்கிறது. அது நீங்கினால் தான் நாம் உலகில் தலை நிமிர்ந்து முன்னேற முடியும்" என்று சமுதாய மறுமலர்ச்சிச் சிற்பிகளும் நமக்கு வழிகாட்டினார்கள்.

பழமையான பிற்போக்கு எண்ணங்கள், தாழ்வு மனப்பான்மை, பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் முதலியவை, "எல்லாரும் ஓர் குலம் எல்லாரும் ஓர் இனம்" என்ற உணர்வை வளர்க்காது

போயின. ஆகையினால், தாழ்த்தப்பட்ட மக்கள் உயர்வடைய அவர்களுக்குப் பொருளாதார வளர்ச்சி ஏற்படுமாறு செய்வதில் அரசாங்கம் பெருங்கவனம் செலுத்தியது. அம்மக்களுக்குக் கல்விச் சலுகை யளித்தல், வேளாண்மைக் காரியங்களுக்கு உழவு மாடுகள், கருவிகள் வழங்கல், வீடுகட்டிக் கொடுத்தல் போன்ற பல வசதிகளைச் செய்து தந்தது. இவற்றால் இன்று இம்மக்கள் சமுதாயத்தில் சம உரிமைபெற்று வாழ்கிறார்கள்.

அரசாங்கத் திட்டங்களால் ஷெட்யூல்டு வகுப்பினர், ஷெட்யூல்டு மலைஜாதியினர், குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பழங்குடியினர், மற்றப் பின்தங்கிய வகுப்பினர் முதலான மக்கள் பெருநன்மை அடைந்தனர்.

ஹரிஜன, மற்றும் பின்தங்கிய வகுப்புக் குழந்தைகளுக்காக அரசாங்கம் பள்ளிகளை நடத்துகிறது. கல்வி மறுமலர்ச்சியின் மூலமே சமுதாயச் சீர்திருத்தம் ஏற்படமுடியும். ஏழ்மைநிலை கல்விக்கு ஓர் இடையூருக இருக்கக்கூடாது. இதனால், சமூகத்தில் பிற்பட்ட மக்களின் கல்வி வளர்ச்சியில் அரசாங்கம் சிறப்பான கவனம் செலுத்தியது.

கல்வி கற்கப் பொருளுதவி

செங்கற்பட்டு மாவட்டத்தில் ஷெட்யூல்டு வகுப்பினருக்காக 117 பள்ளிகள் நடத்தப்படுகின்றன. இவற்றின் பராமரிப்புக்காக முதல் திட்டக் காலத்தில் 16,00,438 ரூபாயும், இரண்டாவது திட்டக் காலத்தில் 16,69,403 ரூபாயும் செலவழிக்கப்பட்டுள்ளது.

ஹரிஜனநலப் பள்ளிகளில் எல்லா ஹரிஜனக் குழந்தைகளுக்கும், மற்ற வகுப்புக் குழந்தைகளுக்கும் இலவச நண்பகல் உணவு அளிக்கப்படுகிறது. வறுமையால் வாடாமல் ஏழைக் குழந்தைகள் படித்து முன்னேற வேண்டும் என்பதற்காகவே இத்திட்டம் நிறைவேற்றப்படுகிறது. மாவட்டத்தில் முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 11,76,239 ரூபாயும், இரண்டாவது திட்டக் காலத்தில் 16,17,636 ரூபாயும் செலவிடப்பட்டுள்ளது.

மேலும், ஷெட்யூல்டு வகுப்பு மாணவர்களுக்கு உபகாரச் சம்பளங்கள் வழங்கப்படுகின்றன; விடுதிகளில் தங்கி உணவு கொள்வதற்குப் பொருள் உதவி தரப்படுகிறது. முதல் திட்டக் காலத்தில் உபகாரச் சம்பளமாக ஷெட்யூல்டு வகுப்பு மாணவர்களுக்கு 76,037 ரூபாயும், இரண்டாவது திட்டக் காலத்தில் ஷெட்யூல்டு வகுப்பு, மற்றப் பின்தங்கிய வகுப்பு மாணவர்களுக்கு 4,84,866 ரூபாயும் வழங்கப்பட்டன. முதல் திட்டக் காலத்தில்

மொத்தம் 4 விடுதிகளும், இரண்டாவது திட்டக் காலத்தில் 14 விடுதிகளும் நடத்தப்பட்டன. இவற்றிற்காகக் கடந்த பத்தாண்டு களில் ரூ. 5,20,030 செலவழிக்கப்பட்டுள்ளது. இவற்றைத் தவிர, தனியார் நடத்தும் விடுதிகளுக்கும் பொருள் உதவி அளிக்கப் பட்டது. கடந்த பத்தாண்டுகளில் ரூ. 12,12,555 பொருள் உதவி அளிக்கப்பட்டுள்ளது.

ஹரிஜன நலத் துறையினர் நிறைவேற்றும் இன்னொரு முக்கிய மான திட்டம் குடியிருப்பு வசதித் திட்டம் ஆகும். சுத்தமும் சுகாதாரத் தூய்மையும் உள்ள குடியிருப்பு இல்லங்களை அமைத்துக் கொடுப்பதில் அரசாங்கம் அக்கறை செலுத்தி வருகிறது. வீட்டு மனைகளை வாங்கியும், வீடு கட்டியும் ஹரிஜன மக்களுக்கு உதவு கிறது.

குடியிருக்க வீடுகள்


முதல் திட்டக் காலத்தில் குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பழங்குடி மக்களுக்காக ரூ. 10,657 செலவில் 60 குடியிருப்பு வீடுகள் கட்டித் தரப்பட்டன. இரண்டாவது திட்டக் காலத்தில் ஷெட்யூல்டு வகுப்பினருக்காக 1,093 வீடுகளும், ஷெட்யூல்டு மலை ஜாதியினருக்காக 61 வீடுகளும், குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பழங்குடி மக்களுக்காக 74 வீடுகளும் கட்டப்பட்டன. இவற்றின் செலவுத் தொகை ரூ. 6,81,700 ஆகும்.

முதல் திட்டக் காலத்தில் ஷெட்யூல்டு வகுப்பினருக்காக ரூ. 67,427 செலவில் 1,174 வீட்டு மனைகள் வாங்கப்பட்டன. இரண்டாவது திட்டக் காலத்தில் ரூ. 1,12,086 செலவில் 1,317 வீட்டு மனைகள் வாங்கப்பட்டன; 462 வீட்டு மனைகள் ஒதுக்கித் தரப்பட்டன.

ஹரிஜன மக்கள் வேளாண்மையில் சிறப்படைந்து வாழ்க் கையில் உயர அவர்களுக்கு அரசாங்கம் கைகொடுத்து உதவியது. முதல் திட்டக் காலத்தில் குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பழங்குடி மக்களுக்கு ரூ. 7,500 செலவில் 20 ஜோடி காளைகளும், வித்துக்களும் வழங்கப்பட்டன. இரண்டாவது திட்டக் காலத்தில் ஷெட்யூல்டு வகுப்பினருக்கும், ஷெட்யூல்டு மலை ஜாதியினருக்கும், குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பழங்குடி மக்களுக்கும் மொத்தம் ரூ. 5,36,212 செலவில் காளைகளும் வித்துக்களும் வழங்கப்பட்டன.

மேலும், முதல் திட்டக் காலத்தில் முன்னுள் குற்றப் பட்டியலி லிருந்து நீக்கப்பட்ட பழங்குடி மக்களுக்கு ரூ. 4,000 செலவில் 20 கறவை மாடுகளும், இரண்டாவது திட்டக் காலத்தில் ரூ. 25,000 செலவில் 100 கறவை மாடுகளும் அளிக்கப்பட்டன.

பாசன வளம் பெருகவும், தூய்மையான குடிநீர் கிடைக்கவும் ஹரிஜன மக்களுக்கு ஐந்தாண்டுத் திட்டங்களில் வகைசெய்யப் பட்டுள்ளது. முதல் திட்டக் காலத்தில் ஷெட்யூல்டு வகுப்பின ருக்காக ரூ. 16,746 செலவில் 19 குடி நீர்க் கிணறுகளும், இரண் டாவது திட்டக் காலத்தில் ஷெட்யூல்டு வகுப்பினர், ஷெட்யூல்டு மலே ஜாதியினர், குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பழங்குடி மக்கள் ஆகியோரின் நன்மைக்காக ரூ. 29,042 செலவில் 11 குடி நீர்க் கிணறுகளும், ஷெட்யூல்டு வகுப்பினருக்காக ரூ. 1,50,000 செலவில் 109 பாசனக் கிணறுகளும் இறக்கப்பட்டன.



ஹரிஜனக் குடியிருப்பு—மாமண்டூர்

ஹரிஜன மக்களின் சமுதாய, மருத்துவத் தேவைகளே உணர்ந்து ஆவன செய்வதற்காக ரூ. 15,000 செலவில் மாவட் டத்தில் ஒரு சமூக நிலையம் ஏற்படுத்தப் பட்டுள்ளது.

ஹரிஜன மக்களின் தொழில் திறன் வளர்ந்து வளம் பெருக வேண்டும் என்பதற்காக இரண்டாவது திட்டக் காலத்தில் ஷெட்யூல்டு வகுப்பினருக்கும், முன்னுள் குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பழங்குடி மக்களுக்கும் ரூ. 14,914 செலவில் கருவிகள் வழங்கப்பட்டன; ஷெட்யூல்டு மலேஜாதியினருக்கு ரூ. 286 செலவில் 15 தேனீப் பெட்டிகள் வழங்கப்பட்டன.

“மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்” என்று முழங்கினர் பாரதியார். சமுதாயத்தில் பெண்கள் முன்னேற்றம் அடையாவிட்டால், நாட்டு முன்னேற்றமும் நல்ல முறையில் அமையாது. இதனால், பெண்கள் நல வளர்ச்சியிலும் சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

மணிமங்கலத்தில் பொம்மைகள் செய்யும் நிலையம் ஒன்று 1958 மே மாதத்தில் தொடங்கப்பட்டது. களிமண், பிளாஸ்டிக் இவற்றைப் பயன்படுத்திப் பொம்மை செய்வதில் 15 வில்லியப் பெண்களுக்குப் பயிற்சி யளிக்கப்பட்டது. இவர்கள் பயிற்சிபெற்று முடிந்ததும் நிலையம் பட்டுநூல் சத்திரத்திற்கு மாற்றப்பட்டு விட்டது. பட்டுநூல் சத்திரத்தில் உற்பத்தி நிலையம் ஒன்றை நிறுவி இந்த 15 பெண்களுக்கும் வேலையளிக்க ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

தூய்மையான வாழ்க்கைக்கு

பாய் முடையும் நிலையம் ஒன்று 1960 மே மாதத்தில் ஸ்ரீபெரும்புதூரில் திறக்கப்பட்டது. பாய் நெசவில் 15 மகளிருக்குப் பயிற்சி யளிக்கப்பட்டது. அவர்கள் ஒவ்வொருவருக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ. 15 உதவித் தொகையாக அளிக்கப்பட்டது. இந்தத் தொழில் நிலையம் தொடங்கப்பட்டதிலிருந்து இங்குத் தயாராகும் பாய்களுக்கு நல்ல வரவேற்பு இருக்கிறது. இங்குப் பயிற்சிக்காகச் சேர்த்துக் கொள்ளப்பட்ட மகளிர் அனைவரும் பயிற்சியை முடித்து விட்டனர். இவர்களுக்காகக் கூட்டுறவுச் சங்கம் ஒன்றை ஆரம்பிக்க ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. இப்பொழுது வேறு 15 மகளிர் பயிற்சி பெற்று வருகின்றனர்.

புறத்தூய்மை இல்லாவிட்டால், உடம்பில் நோய் வருகிறது; அகத்தூய்மை இல்லாவிட்டால் உள்ளத்தில் நோய் வருகிறது. உடம்பில் நோய் கண்டவருக்கு மருந்துச் சிகிச்சை எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு முக்கியம் வாய்ந்தது, உள்ளத்தில் நோய் கண்டவருக்கு நல்வழிச் சிகிச்சை அளிப்பதும். இந்தப் பணியை நிறைவேற்றும் உஷார் விடுதிகளும், பிறகாப்பு இல்லங்களும் மாதர் சமூகத்திற்குச் சிறந்த தொண்டாற்றி வருகின்றன.

உஷார் இல்லங்கள் *சீர்திருத்தும் நிலையங்கள்.* தெருவில் போவோரை விபசாரத்திற்கு அழைத்த குற்றத்திற்கும், விபசாரம் செய்த குற்றத்திற்கும் தண்டிக்கப்பட்ட 30 வயதுக்குட்பட்ட பெண்கள் இங்குப் பாதுகாப்பாக வைக்கப்பட்டுத் திருத்தப் பயிற்சியும், *சீர்திருத்தப்* பயிற்சியும் அளிக்கப்படுகிறார்கள். காஞ்சீபுரத்தில் உஷார் விடுதி ஒன்று திறக்கப்பட்டது.

இரண்டாவது திட்டக் காலத்தில் ஆண், பெண், சிறுவர், சிறுமியர் ஆகியோருக்காக 6 தங்குமனைகள் 1958 இல் திறக்கப்பட்டன. இவற்றில் ஒன்று காஞ்சீபுரத்தில் சிறுமிகளுக்காகத் தொடங்கப்பட்டது. பின்னர் அது உஷார் விடுதியாக மாற்றப்பட்டது. செங்கற்பட்டில் சிறுவர்களுக்காக ஏற்பட்ட மற்ருெரு மனை நல்ல முறையில் தொடர்ந்து நடந்து வருகிறது.

சீர்திருத்த நிலையங்களிலிருந்தும், மற்ற நிலையங்களிலிருந்தும் வெளிவருவோருக்குச் சிறிது காலம் தங்குவதற்கு வசதியும், உதவியும் அளிப்பதற்காகப் பிற்காப்பு விடுதிகள் ஏற்படுத்தப்படுகின்றன. 1957—58 இல் செங்கற்பட்டு, காஞ்சீபுரம் ஆகிய இடங்களில் இரண்டு பிற்காப்பு விடுதிகள் தொடங்கப்பட்டன. காஞ்சீபுரம் விடுதி உஷார் விடுதியாக மாற்றப்பட்டது.

செங்கற்பட்டிலுள்ள விடுதியில் வாழ்ந்தோர் புதுவாழ்வு பெற்றனர். சிலருக்கு வேலை கிடைத்தது. சிலர் தங்கள் பெற்ருேரிடம் ஒப்படைக்கப்பட்டனர். தச்சு வேலையில் பயிற்சி பெற விரும்பியவர்கள் சென்னையிலுள்ள பிற்காப்பு இல்லத்திற்கு மாற்றப்பட்டனர். இந்நிலையத்தில் நீண்ட காலம் தங்கலாம். இரண்டாவது திட்டக் காலத்தில் சுமார் 223 பேர் இந்த விடுதியில் தங்கிச் சென்றனர்.


தொண்டு இல்லம்

அநாதைப் பெண்கள், கைம்பெண்டிர், ஏழ்மை நிலையில் உள்ள மகளிர் ஆகியோர் தங்கள் குடும்பத்திற்கும் சமுதாயத்திற்கும் சுமையாக இல்லாமல், தாங்களே தங்கள் வாழ்க்கைக்குத் தேவையான ஊதியத்தைத் தேடிக்கொள்ள உதவும் வகையில், தாம்பரத்தில் தொண்டு இல்லம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இங்குப் பெண்களுக்குக் கல்வி அறிவும், தொழிற் பயிற்சியும் அளிக்கப்படுகின்றன.

இல்லம் நன்கு வளர்ச்சியடைந்துவிட்ட காரணத்தினுல், தனிப்பட்ட சொந்தக் கட்டடத்தில் அதனை அமைக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. தாம்பரத்தில் ரூ. 1·25 லட்சம் செலவில் ஒரு வீடு விலைக்கு வாங்கப்பட்டது. குளிக்கும் அறைகள், தண்ணீருக்காகத் தனியறைகள், தண்ணீர்த் தொட்டிகள், பம்பு செட்டு அமைப்பு, மின்சார வசதி அமைத்தல் போன்ற பல வசதிகள் செய்து தரப்பட்டன. இல்லத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவோரின் எண்ணிக்கை அதிகமாகிவிட்டதாலும், பல்வேறு பணிகளைத் தொடங்கி விட்டதாலும் அவர்கள் தங்கி வாழ விடுதிகள் கட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இரண்டாவது திட்டக்காலத்தில் இந்தத் தேவை நிறைவேற்றப்பட்டது.

இல்லத்தில் தங்கியிருந்தவர்களுக்குப் புதுவாழ்வு அளிப்பதற்காக ஒரு தொழிற் பகுதி 1957 இல் திறக்கப்பட்டது. இத்தொழிற் பகுதியில் (1) அரிசி குத்துதல், (2) தையற்கலை, (3) தேனீ வளர்த்தல் ஆகிய மூன்று பிரிவுகள் உள்ளன. கைக்குத்தல் அரிசிப் பகுதி 15 பெண்களுக்கு ஆளுக்கு நாள் ஒன்றுக்கு ஒரு ரூபாய் வீதம் கிடைக்கும்படி வேலை தருகிறது. இவ்வாறு கையால் குத்தப் பட்ட பச்சை அரிசியும், புழுங்கல் அரிசியும் இல்லத்திற்குப் பயன் பட்டதுபோக, அரசாங்கக் காச நோய் விடுதி போன்ற விடுதி களுக்கு விற்கப்படுகின்றன. இதுவரை சுமார் ரூ. 46,000 அளவுக்கு அரிசி விற்று முதலாயிற்று.

தையல் பகுதியில் 15 பெண்களுக்குத் தையல், துணி வெட்டல் போன்றவற்றில் பயிற்சி அளிக்கப்பட்டது. பின்னர் அவர்கள் வேலைக்கும் எடுத்துக்கொள்ளப் பட்டனர். அவர்களுக்கு மாதம் ரூ. 25 உதவிச் சம்பளமாக வழங்கப்பட்டது. ரூ. 6,551 மதிப்புள்ள துணிமணிகள் இங்கு உற்பத்தி ஆயின.



நசரத்பேட்டையில் போலீஸாரின் உதவியுடன் கட்டப்பட்டுள்ள சர்தார் பட்டேல் மகப்பேறு நிலையம்

தேனீ வளர்ப்புப் பகுதியில், இல்லத்தில் வாழும் பெண்கள் தேனீ வளர்ப்பிலும், தேன் எடுப்பதிலும் பயிற்சி பெற்றனர். இப் பகுதி மேலும் நன்ருகச் சீர்பெற்று நடைபெற ஒரு தேனீ மேஸ்திரி நியமிக்கப்பட்டார். அதிகப்படியான சாதனங்கள் வாங்கி வைக்கப் பட்டன. 87¾ பவுண்டு தேன் எடுக்கப்பட்டது. இங்கு எடுக்கப் பட்ட தேன் இரண்டாவது திட்டக் காலத்தில் இல்லத்திற்கு ரூ. 130 தேடிக் கொடுத்துள்ளது.

தொண்டு இல்லத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்த பெண்களின் எண்ணிக்கை 150; குழந்தைகளின் எண்ணிக்கை 75. இரண்டாவது திட்டக் காலத்தில் இந்த எண்ணிக்கைகள் முறையே 200 ஆகவும், 100 ஆகவும் உயர்த்தப்பட்டன.

சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டிச் சமூகத்தின் கட்டுக்கோப்புக்குப் பாடுபடும் போலீஸார், சமுதாயநல வளர்ச்சியிலும் அக்கறை காட்டி வருகின்றனர். மக்களின் நல்வாழ்வுக்காகத் தாங்களும் பொதுத் தொண்டில் ஈடுபட்டுப் பணியாற்றுகின்றனர்.

மாதர் சங்கம்

செங்கற்பட்டு மாவட்டத்தில் ஆயுத ரிசர்வ் போலீஸார் செம்பரம்பாக்கம், குரோம்பேட்டை, ஆலந்தூர் ரயில் நிலையம் ஆகிய இடங்களில் சாலைகளை அமைத்துள்ளனர். மேடவாக்கம் கிராமத்தில் குழந்தைகள் பூங்கா ஒன்றையும், ஆலந்தூர் மாதர் சங்கக் கட்டடத்தையும் அவர்கள் கட்டியுள்ளார்கள். இரண்டாவது திட்டக் காலத்தில் கீழ்க்கண்ட வேலையினங்களும் மேற்கொள்ளப்பட்டன.

1. பருத்திப்பட்டு சாலையைச் சுமார் 4 பர்லாங்கு நீளத்திற்குத் திருத்தி அமைத்தல்.

2. மேட்டுப்பாளையம் சாலையை 1½ மைல் நீளத்திற்குத் திருத்தி அமைத்தல்.

3. வீரராகவபுரத்தில் 20 வீடுகளைக் கொண்ட ஹரிஜனக் குடியிருப்பு ஒன்றைக் கட்டுதல்.

4. மேல்பாக்கம் குளத்திலும், கால்வாயிலும் தூர் எடுத்தல்.

5. வீரராகவபுரம் சாலையை 4 பர்லாங்கு நீளத்திற்குத் திருத்தி அமைத்தல்.

6. திருவேற்காட்டில் 4 பர்லாங்கு நீளத்திற்குச் சாலை போடுதல்.

7. பூவிருந்தவல்லி நசரத்பேட்டையில் பள்ளிக்கூடக் கட்டடத்தில் விஸ்தரிப்புப் பிரிவு ஒன்றைக் கட்டுதல்.

8. பூவிருந்தவல்லி அருகில் மேல்பட்டு ஏரியில் தூர் எடுத்தல்.

9. பூவிருந்தவல்லியில் வட்டார வளர்ச்சித் திட்டத்தின்படி விலங்கு மருத்துவ மனை ஒன்றைக் கட்டுதல்.

10. சென்னை பாலமந்திரில் குழந்தைகள் விளையாடும் மைதானத்தை அமைத்தல்.

ஆலந்தூர் ஆயுத ரிசர்வ் போலீஸார் குடியிருப்பில் அங்கிகள் தயாரிக்கும் நிலையமும், மாதர் சங்கமும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மாதர் சங்கத்தில் 50 அங்கத்தினர்கள் பகுதி நேர

வேலையில் ஈடுபட்டுள்ளனர். இங்குத் தயாராகும் அங்கிகள் பொது மார்க்கெட்டுகள், விற்பனைச் சங்கங்கள், பொருட்காட்சிகள் போன்ற இடங்களில் பொது மக்களுக்கு விற்கப்படுகின்றன.

இங்குள்ள அங்கத்தினர் ஒவ்வொருவருக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ. 15 முதல் ரூ. 20 வரை ஊதியம் கிடைக்கிறது. இந்த ஆண்டு, போலீஸாருக்குத் தேவையான 11,600 சிவப்புத் தொப்பிகளைத் தைத்துக் கொடுக்கும் பணி நிறைவேற்றப்பட்டுள்ளது. இதன் மூலம் ஒவ்வொருவருக்கும் 40 ரூபாய்க்கு அதிகமாக வருமானம் கிடைத்தது. ஆயுத ரிசர்வ் போலீஸாரால் கட்டப்பட்ட மாதர் சங்கக் கட்டடம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.


மாவட்டத்தில் 80 சதவீதப் போலீஸாருக்குக் குடியிருப்பு இல்லங்கள் அமைத்துக் கொடுக்கும் திட்டம், கடந்த இரண்டு திட்டக் காலங்களிலும் எடுத்துக் கொள்ளப்பட்டு இப்பொழுது வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன.



மருத்துவ உடல்நல வசதிகளை அதிகரிப்பதன் மூலம் நாட்டை வலிவும் பொலிவும் மிக்கதாகச் செய்ய இயலும். இதனால்தான் நம்முடைய முன்னோர், "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்று வாழ்ந்து வந்தனர். உடலை உறுதி செய்தால், மனவளம் பெருகும்; நாட்டின் நலமும் உயரும்.

வைத்திய வசதிகள் அதிகரித்துவிட்டால் மட்டும் போதாது; அவை பரவலான முறையில், உள்நாட்டில் நெடுந்தொலைவில் உள்ள கிராம மக்களுக்கும் கிடைக்குமாறு செய்யவேண்டும். இந்த இரு கடமைகளையும் சுதந்திர அரசாங்கம் சிறப்பாக நிறைவேற்றி வருகிறது. நமது நாட்டு மக்களின் உடல் வளம் வேகமான முறையில் அபிவிருத்தி செய்யப்படவேண்டும். இதற்கான திட்டங்களை மருத்துவத்துறை நிறைவேற்றி வருகிறது.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மாவட்டத் தலைமை மருத்துவ மனையில் பேறுகால உதவியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. இதற்காக ரூ. 11,000 செலவானது.



மாவட்டத் தலைமை மருத்துவ மனை—செங்கற்பட்டு

செங்கற்பட்டில் மாவட்டத் தலைமை மருத்துவ மனைக்குப் புதிய கட்டடம் அமைக்கப் பட்டது.

காஞ்சீபுரம் அரசாங்க மருத்துவ மனையில் காச நோய் மருத்துவ நிலையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அத்துடன், எக்ஸ்-ரே சாதனம், ஆய்வுக்கூடக் கருவிகள் ஆகியவற்றையும் மத்திய அரசாங்கம் காஞ்சீபுரம் மருத்துவ மனைக்குக் கொடுத்து உதவியுள்ளது.

தொழு நோய்


திருவள்ளூரில் ரூ. 3,20,000 செலவு மதிப்பீட்டில் அரசாங்க மருத்துவ மனை ஒன்றை அமைக்கும் திட்டம் எடுத்துக் கொள்ளப் பட்டுள்ளது. இதற்கான கட்டட வேலை நடைபெற்று வருகிறது. அது விரைவில் முடிவடையும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

பொன்னேரியில் ரூ. 2,23,000 செலவு மதிப்பீட்டில் அரசாங்க மருத்துவ நிலையம் ஒன்றை அமைக்கும் திட்டம் எடுத்துக்கொள்ளப் பட்டுள்ளது. இதில் 32 படுக்கை வசதிகள் இருக்கும். கட்டட வேலை நடைபெற்று வருகிறது. இது இன்னும் 10 மாதங்களில் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அகில இந்திய அடிப்படையில் இந்திய அரசாங்கம் ஏற்படுத்தியுள்ள தொழு நோய் முன்னோடித் திட்டத்தைப் பின்பற்றித் தொழு நோயால் வருந்துவோருக்குச் சிகிச்சை யளிப்பதற்கு நல்ல

வசதிகள் செய்துதரும் பொருட்டு, மாவட்டத்தில் திருவள்ளூரில் ரூ. 1·80 லட்சம் செலவு மதிப்பீட்டில் ஒரு நிலையம் நிறுவப்பட்டுள்ளது. தொழு நோயாளரின் இல்லங்களுக்குச் சென்று முனைப்பான முறையில் சிகிச்சை யளிக்க வசதி செய்து தரும் பொருட்டு இந்நிலையத்திற்கு ஒரு ஜீப்பும், 6 சைக்கிள்களும் அளிக்கப்பட்டுள்ளன. இரண்டாவது திட்டக் காலத்தில் ரூ. 50,000 செலவழிக்கப்பட்டுள்ளது.

மேக நோய் சிகிச்சைக்கு வேண்டிய வசதிகளை அளிப்பதற்காக, ஒரு மருத்துவ அதிகாரி, ஒரு சமூகத் தொண்டர், ஒரு தொழில் நுட்ப வல்லுநர் ஆகியோரின் மேற்பார்வையில் குறைந்தது 10 படுக்கை வசதிகளுடன் மருத்துவ நிலையம் ஏற்படுத்தும் திட்டத்



காச நோய் மருத்துவ நிலையம்—காஞ்சீபுரம்

தின்படி, செங்கற்பட்டில் உள்ள மாவட்டத் தலைமை மருத்துவ மனையில் ஒரு மேக நோய் மருத்துவ நிலையம் தொடங்கப்பட்டுள்ளது. இரண்டாவது திட்டக் காலத்தில் ரூ. 19,000 செலவழிக்கப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் ஆவடி, மதுராமங்கலம், திருக்கழுக்குன்றம், உத்திரமேரூர், எண்டத்தூர் (ஜமீன்) முதலான இடங்களில் ஆரம்பச் சுகாதார நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. ஒவ்வொரு நிலையத்திலும் ஒரு மருத்துவ அதிகாரியும், ஒரு சுகாதாரப் பார்வையாளரும், ஒரு சுகாதார இன்ஸ்பெக்டரும், நான்கு பேறுகால உதவி

யாளரும், ஒரு மருந்து கலக்குவோரும் இருக்கின்றனர். இவர்களின் வசதிக்காக ஒரு ஜீப் மோட்டார் வழங்கப்பட்டுள்ளது. பேறுகால உதவியாளர்களுள் ஒருவர் தலைமையிடத்திலும், மற்ற மூவரும் மூன்று வெவ்வேறு இடங்களிலும் இருப்பர். அருகிலுள்ள கிராமங்களுக்கு அவர்களது சேவை உடனடியாகக் கிடைக்க இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பேரம்பாக்கம் ஆரம்பச் சுகாதார நிலையத்திற்காக ரூ. 21,250 செலவு மதிப்பீட்டில் மருந்து கலக்குவோர், சுகாதார இன்ஸ்பெக்டர் முதலியவர்களுக்குக் குடியிருப்புக்கள் அமைக்கும் பணி நடந்தேறி வருகிறது. அது விரைவில் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திருவள்ளூர் வட்டம் வள்ளியூர் ஆரம்பச் சுகாதார நிலையத்திற்காக ரூ. 21,800 செலவு மதிப்பீட்டில் மருந்து கலக்குவோர், சுகாதார இன்ஸ்பெக்டர் முதலியவர்களுக்குக் குடியிருப்புக்கள் அமைக்கும் பணி நடந்தேறி வருகிறது.

ஆரம்பச் சுகாதார நிலையம்

ஆவடி ஆரம்பச் சுகாதார நிலையத்திற்காக, ரூ. 70,350 செலவு மதிப்பீட்டில் மருத்துவ அதிகாரி, சுகாதார இன்ஸ்பெக்டர், சுகாதாரப் பார்வையாளர், மருந்து கலக்குவோர், பேறுகால உதவியாளர் முதலியோருக்குக் குடியிருப்புக்களும், மருத்துவ நிலையக் கட்டடமும் அமைக்கும் பணி நடந்தேறி வருகிறது. அது விரைவில் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.


மதுரமங்கலம் ஆரம்பச் சுகாதார நிலையத்திற்காக ரூ. 75,800 செலவு மதிப்பீட்டில் மருத்துவ அதிகாரி, சுகாதார இன்ஸ்பெக்டர், சுகாதாரப் பார்வையாளர், மருந்து கலக்குவோர், பேறுகால உதவியாளர் முதலியோருக்குக் குடியிருப்புக்களும், மருத்துவ நிலையக் கட்டடமும் அமைக்கும் பணி முடிக்கப்பட்டுள்ளது. இப்பொழுது ஆரம்பச் சுகாதார நிலையம் புதிய கட்டடத்தில் இயங்கி வருகிறது.

எண்டத்தூர் (ஜமீன்) ஆரம்பச் சுகாதார நிலையத்திற்காக ரூ. 71,350 செலவு மதிப்பீட்டில் மருத்துவ அதிகாரி, சுகாதார இன்ஸ்பெக்டர், சுகாதாரப் பார்வையாளர், மருந்து கலக்குவோர், பேறுகால உதவியாளர் முதலியோருக்குக் குடியிருப்புக்களும் மருத்துவ நிலையமும் அமைக்கும் பணி நிறைவேற்றப்பட்டு வருகிறது. அது விரைவில் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

செங்கற்பட்டில் உள்ள மாவட்டத் தலைமை மருத்துவ மனையில் பல்நோய் மருத்துவ நிலையம் ஒன்று, இரண்டாவது திட்ட இறுதி

ஆண்டில் தொடங்கப்பட்டுள்ளது. இதற்கென ஒரு மருத்துவ அதிகாரி, ஒரு நர்ஸ் முதலானோர் நியமிக்கப்பட்டுள்ளனர். ரூ. 7,000 செலவிடப்பட்டுள்ளது.

மாவட்டக் கழக நிர்வாகத்தில் இருந்த மதுராந்தகம், ஸ்ரீபெரும்புதூர் மருத்துவ மனைகள் அரசாங்க நிர்வாகத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இம்மருத்துவ மனைகளைச் செம்மையான முறையில் பராமரித்து வரவேண்டும் என்பதே, இதற்குரிய காரணம் ஆகும். அபிவிருத்திப் பணிகளுக்காக இரண்டாவது திட்டக் காலத்தில் ரூ. 65,000 செலவிடப்பட்டுள்ளது.



நர்சுகள் குடியிருப்பு—காஞ்சீபுரம்

மருத்துவ மனைக்கு அருகில் நர்சுகள் குடியிருப்பு அமைக்கும் திட்டம் ஒன்று, காஞ்சீபுரம் அரசாங்க மருத்துவ மனையில் நிறைவேற்றப்பட்டுள்ளது. ரூ. 62,000 செலவு மதிப்பீட்டில் 13 நர்சுகளுக்கும், 2 தலைமை நர்சுகளுக்கும் குடியிருப்பு இல்லங்கள் அமைத்துக் கொடுக்கப் பட்டுள்ளன.

நெடுந்தொலைவில் உள்நாட்டில் உள்ள கிராமங்களில் மருத்துவ அதிகாரிகள் பணியாற்றுவதை ஊக்குவிக்கும் வகையில் அவர்களுக்குக் குடியிருப்புக்கள் அமைத்துக் கொடுக்கும் பணியை அரசாங்கம் நிறைவேற்றி வருகிறது. மாவட்டத்தில் வள்ளிபுரம் கிராமத்தில் ரூ. 26,500 செலவு மதிப்பீட்டில் மருத்துவ அதிகாரிக்குக் குடியிருப்பு இல்லம் அமைத்துக்கொடுக்க உத்தேசிக்கப் பட்டுள்ளது.

மருத்துவத் துறையினர் நிறைவேற்றும் மற்ெருரு முக்கியமான திட்டம், குடும்பக் கட்டுப்பாடு திட்டம் ஆகும். நம்முடைய நாட்டில் அதிகரிக்கும் உற்பத்தி உயர்வைக் காட்டிலும், மிக வேகமான முறையில் மக்கள் தொகை பெருகி வருகிறது. இந் நிலையில், நாட்டின் வளமும் பலமும் நிலைநிறுத்தப்பட வேண்டு மானல், அதற்குக் குடும்பக் கட்டுப்பாடு மிக அவசியம் ஆகும்.

குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தைப் பரப்புவதில் மாநில அரசாங்கமும், மத்திய அரசாங்கமும் தீர்க்க சிந்தனையுடன் செய லாற்றி வருகின்றன. செங்கற்பட்டு மாவட்டத்தில் செங்கற்பட்டு, காஞ்சீபுரம், பூண்டி, திருவள்ளூர், பறங்கிமலை ஆகிய இடங்களில் உள்ள மருத்துவ மனைகளில் குடும்பக் கட்டுப்பாடு நிலையங்கள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் இரண்டாவது திட்டக் காலத்தில் ரு. 59,000 செலவழிக்கப்பட்டுள்ளது.

சுத்தமும் சுகமும்

"சுத்தம் சோறு போடும்" என்பது பழமொழி. நோய்கள் வராமல் தடுப்பதற்குத் தூய்மையாக இருப்பதே சிறந்த வழியாகும். "சுத்தமுள்ள இடமெங்கும் சுகமும் உண்டு" என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.



சமுதாயம் என்பது, மக்கள் அனைவரும் அங்கம் வகிக்கும் ஒரு பெரிய குடும்பமே ஆகும். ஆகையினல், ஒவ்வொருவரும் தூய்மையுடன் இருக்கத் தொடங்கினல் சமுதாயம் முழுவதும் தூய்மை பெற்றுவிடும். அதனல் நோயும் பெரும்பான்மை அழிக்கப் பட்டு விடும்.

அழுக்கான இடம், சேறும் சகதியுமான இடம், இருட்டான இடம் ஆகியவற்றில் கொடிய நோய்களுக்குக் காரணமான கிருமிகள் ஒன்று பத்தாகப் பெருகி வளர்கின்றன. இதனல் பெரிய அளவில் நோய்கள் மக்களைப் பிடித்து அவதிக்குள்ளாக்குகின்றன. ஆகையினல் நோய்கண்ட அனைவருக்கும் சிகிச்சை செய்ய வேண்டியுள்ளது. அத்துடன் காரியம் முடிவடைந்து விடுவது இல்லை. நோய் பரவக்கூடிய சூழ்நிலையில் உள்ளவர்களுக்கும்

மருந்து தரவேண்டும். மேலும், நோய்க் கிருமிகளின் பெருக்கத்திற்கான சூழ்நிலைகளையும், சுற்றுப்புறங்களையும் சீர்திருத்திச் செம்மைப்படுத்த வேண்டும். இந்தப் பணியினைப் பொதுச் சுகாதாரத் துறையினர் திறம்பட நடத்தி வருகின்றனர். அவர்தம் முயற்சியால் இன்று பல தொத்து நோய்கள் கட்டுப்படுத்தப்பட்டு, ஒழிக்கப்பட்டும் வருகின்றன.

செங்கற்பட்டு மாவட்டத்தில் நகரங்களிலும், கிராமங்களிலும் யானைக்கால் நோய் பரவலாய் உள்ளது. 1955-56 இல் மாவட்டம் முதல் தடவையாக அளவிடு செய்யப்பட்டது. மொத்தம் 3,23,121 மக்கள் தொகையுள்ள 79 கிராமங்கள் அளவீடு செய்யப்பட்டன. மாவட்டம் முழுவதையும் அளவீடு செய்து, நோய்க் கட்டுப்பாட்டிற்கான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்வதற்காக யானைக்கால் நோய்க் கட்டுப்பாடு குழு ஒன்று 1957 ஆம் ஆண்டிலிருந்து மாவட்டத்தில் இயங்கத் தொடங்கியது. நோய் பரவியுள்ள பிரதேசங்களில் வாழும் மக்களுக்கு மாத்திரைகள் அளித்தல், கொசுக்களைக் கட்டுப்படுத்துதல் ஆகிய இரு காரியங்களும் மேற்கொள்ளப்பட்டன.

மக்களுக்கு நோய்த் தடுப்பு மாத்திரைகள் அளிக்கும் வேலை முதலில் காஞ்சீபுரம் வட்டத்தில் மாஞுமதி, பெருநகர் ஆகிய ஊர்களில் ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் வாலாஜாபாத்துக்கு விஸ்தரிக்கப்பட்டது. அதற்குப் பிறகு, மாவட்டத்தில் பெரியதோர் நகராட்சியாக விளங்கும் காஞ்சீபுரத்தில் இத்திட்டம் தொடங்கப்பட்டது. மாத்திரைகள் வழங்கும் பகுதிகளில், அவற்றின் நன்மையைப்பற்றிப் பொதுமக்களிடம் பிரசாரம் செய்யப்பட்டது.

யானைக்கால் நோய்

மக்களுக்கு மருந்து அளிப்பதற்கு 45 பேர் நியமிக்கப்பட்டனர். இவர்களது பணியைக் கண்காணிப்பதற்கு 15 சுகாதார இன்ஸ்பெக்டர்களும் நியமிக்கப்பட்டார்கள். இவர்களைத் தவிரச் சுகாதார அதிகாரிகள், ஆராய்ச்சி அதிகாரி முதலியோரின் சேவையும் பெறப்பட்டது.

காஞ்சீபுரம் நகராட்சியில் நோய்த் தடுப்பு வேலை 1958 இறுதியில் முடிவடைந்ததும், சுற்றுப்புறங்களிலும், கிராமப் பகுதிகளிலும் அது விஸ்தரிக்கப்பட்டது. அதன் பின்னர், செங்கற்பட்டு, அதன் சுற்றுப்புறப் பகுதிகள், மதுராந்தகம், இவ் வட்டத்தின் கிராமப் பகுதிகள், ஸ்ரீபெரும்புதூர் வட்டம் ஆகிய இடங்களிலும் மக்களுக்கு நோய்த் தடுப்பு மாத்திரைகள் வழங்கப்பட்டன.

பின்னர் பூவிருந்தவல்லி, சைதாப்பேட்டை வட்டம், அனக்கா புத்தூர், புழலேரி, திருநின்றவூர், திருவொற்றியூர் நகராட்சிப் பகுதி ஆகிய இடங்களுக்கும் திட்டம் விஸ்தரிக்கப்பட்டது.

இவ்வாறு மாவட்டத்தில் காஞ்சீபுரம், செங்கற்பட்டு, மதுராந்தகம், ஸ்ரீ பெரும்புதூர், சைதாப்பேட்டை ஆகிய ஐந்து வட்டங்களில் யானைக்கால் நோய் பரவியுள்ள பகுதிகள் அனைத்திலும் மக்களுக்குத் தடுப்பு மாத்திரைகள் வழங்கப்பட்டன.

காலக்கிரமத்தில் மருந்து தெளித்தல், நீர் தேங்கி நிற்கும் குழிகளை மூடுதல், சாக்கடைக் குழிகளை வெட்டுதல் போன்ற முறைகளின் மூலம் கொசுக் கட்டுப்பாடு செய்யப்பட்டது. செங்கற்பட்டு, காஞ்சீபுரம், திருவொற்றியூர், திருவள்ளூர் ஆகிய நகராட்சிகளிலும், பூவிருந்தவல்லி, மதுராந்தகம், உத்திரமேரூர், ஆலந்தூர், திருமழிசை, பொன்னேரி ஆகிய பஞ்சாயத்துகளிலும் மூன்றில் ஒரு பகுதி அரசாங்க மானியத்துடன் இத்திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

குடிநீர் வசதி

உடல் நலத்திற்குத் தூய்மையான குடிநீர் வசதி செய்துதர வேண்டியது மிகவும் முக்கியமாகும். முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலேயே நகர்ப்புறங்களில் நீர் வழங்கும் திட்டம் பெரும் அளவில் மேற்கொள்ளப்பட்டது. நகராட்சி மன்றங்களுக்கு இதற்காக அரசாங்கம் உதவித் தொகையும் வழங்கி வருகிறது.

செங்கற்பட்டு மாவட்டத்தில் காஞ்சீபுரம் நீர் வழங்கு திட்டமும் (அபிவிருத்தி), செங்கற்பட்டு நீர்வழங்கு திட்டமும் இரண்டாவது திட்டக் காலத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளன. தண்ணீரின் மூலமாகப் பரவும் காலரா, டைபாய்டு போன்ற நோய்களைக் கட்டுப்படுத்தி அழிப்பதற்காகத் தேசீயத் தண்ணீர் வழங்கு, துப்புரவுத் திட்டம் அமுலாக்கப்பட்டது. கிராமங்களுக்குப் பாதுகாக்கப்பட்ட தூய்மையான குடிநீர் வசதியைச் செய்து தருவதே இத் திட்டத்தின் நோக்கம். அதற்காகக் கிராமங்களில் கிணறுகள் அமைத்துத் துப்புரவு வசதிகள் செய்து தரப்பட்டன.

நாட்டின் நரம்புகள்

நாட்டின் முன்னேற்றத்தில் போக்குவரத்துக்கும் முக்கியப் பங்கு உண்டு. உழவும், தொழிலும் செழித்து வளரப் போக்குவரத்துப் பாதைகள் மிக இன்றியமையாதன. உற்பத்திப் பொருள்களை நகரங்களுக்குக் கொண்டு செல்லவும், விஞ்ஞான வசதிகள்; வைத்திய வசதிகள் முதலான பல நன்மைகள் கிராம மக்களுக்குக் கிடைக்கவும் போக்குவரத்துப் பாதைகள் பெரிதும் உதவுகின்றன. ஆகையினால், அவற்றின் அபிவிருத்தியிலும் ஐந்தாண்டுத் திட்டங்கள் பெருங் கவனம் செலுத்தின.

செங்கற்பட்டு மாவட்டம் சென்னை மாநகருக்கு அணித்தாக இருப்பதாலும், சென்னை மாநகரை மூன்று புறங்களிலும் சூழ்ந்து இருப்பதனாலும் இங்குப் போக்குவரத்து மிகவும் பெருகியுள்ளது. ஆகையினால், மாவட்டத்தில் சீரான முறையில் சாலை வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன; பாலங்கள், மதகுகள் முதலானவை கட்டப்பட்டுள்ளன.

செங்கற்பட்டு மாவட்டத்தில் இப்பொழுது 2,077 மைல் அளவுக்குப் பாதைகள் இருக்கின்றன. ஆயின், பத்தாண்டுகளுக்கு முன்னர் பெருவழித் துறையினரின் நிர்வாகத்தில் 1,663 மைல் பாதைகளே இருந்தன. முதல் திட்டக் காலத்திலும் இரண்டாவது திட்டக் காலத்திலும் இம்மாவட்டத்தில் பல சாலை வளர்ச்சி, பால அமைப்பு வேலைகள் மேற்கொள்ளப் பட்டன. அதனால் இன்று இங்குள்ள சாலைகள் போக்குவரத்துக்கு நல்ல முறையில் பயன்படும் வகையில் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன.


முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் பாதைகளுக்காக ரூ. 10 லட்சம் செலவிடப்பட்டுள்ளது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மட்டும் அரசாங்கப் பாதைகளுக்காக ரூ. 16 லட்சமும், மற்றப் பாதைகளுக்காக ரூ. 15 லட்சமும் செலவாகியுள்ளது. முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் சுமார் ரூ. 32 லட்சம் செலவில் 12 பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டன. இவற்றைத் தவிர, இரண்டாவது திட்டக் காலத்தில் ரூ. 9 லட்சம் செலவில் 4 பாலங்கள் கட்டடப்பட்டிருக்கின்றன.

முதல் திட்டக் காலத்தில் கட்டி முடிக்கப்பட்ட பாலங்களுள், செங்கற்பட்டுக்கு அருகில் தென் பெருஞ்சாலை (Great Southern Trunk Road) யில் பாலாற்றின் குறுக்கே கட்டப்பட்ட பாலம் மிக முக்கியமானது ஆகும். இப்பாலத்தைக் கட்டி முடிக்கச் சுமார் ரூ. 26 லட்சம் செலவாயிற்று.

கூவம் ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள பெரிய குப்பம் பாலம்



இப்பாலாற்றுப் பாலம் புதிய முறையில் கட்டப்பட்டது ஆகும். அதாவது, முன்னரே நன்றாக இறுக்கப்பட்ட காங்கிரீட்டினால் கட்டப்பட்டுள்ளது. இம்முறையிலே கட்டப்படும் பாலங்கள், பளு மிகுதியானாலும் தாங்கி அழியாமல் நிற்கும். இந்தியாவிலேயே முதன் முதலில் இப்பாலம்தான் இம்முறையிலே கட்டப் பெற்றது. இப்பாலம் மாநிலத்தில் மிகப் பெரிய பாலமாக விளங்குகிறது.



கொற்றலையாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள ஒதப்பை ஒடு பாலம்

இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்ட கடந்த பத்தாண்டுக் காலத்தில், செங்கற்பட்டு மாவட்டத்தில் ஏற்பட்ட சாலை வளர்ச்சியைக் காட்டும் முக்கியமான சில புள்ளி விவரங்கள் பின்வருமாறு :—

	1951	1961
	(நீளம் மைல்களில்)	
சிமெண்ட், காங்கிரீட் பாதை	27	31
தார்ப் பாதை	156	705
'மெக்காடம்' பாதை	831	679
மண், சரளைக்கல் பரப்பிய பாதை	649	662
	1,663	2,077

மத்திய அரசாங்க திட்டங்கள்

தமிழ் நாட்டில் மத்திய அரசாங்கம் ஏற்படுத்தியுள்ள மிகப் பெரிய தொழில்கள் பெரம்பூர் ரயில் பெட்டித் தொழிற்சாலையும், நெய்வேலிப் பழுப்பு நிலக்கரித் திட்டமும் ஆகும். இவையல்லாமல் கச்சா பிலிம் தொழிற்சாலை, டெலிபிரின்டர் தொழிற்சாலை, மருத்துவ மனைகளுக்கான அறுவைக் கருவிகள் தயாரிக்கும் தொழிற்சாலை முதலியனவும் அமைக்கப்பட்டு வருகின்றன.

நெய்வேலி நிலக்கரி

இரண்டாவது திட்டக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களில் நெய்வேலிப் பழுப்பு நிலக்கரிச் சுரங்கம் மிக முக்கியமானது ஆகும். தென் ஆர்க்காடு மாவட்டம் நெய்வேலிப் பிரதேசத்தில், 145 லிருந்து 200 அடிக்கு மேற்பட்ட ஆழத்தில் 100 சதுர மைல் பரப்பளவுக்கு 200 கோடி டன்கள் பழுப்பு நிலக்கரி படிந்துள்ளது. ஆண்டு ஒன்றுக்கு 35 லட்சம் டன் பழுப்பு நிலக்கரி வெட்டியெடுக்கப்படும். இதைப் பயன்படுத்தி 4 லட்சம் கிலோவாட் வரை மின்சாரம் உற்பத்தி செய்யவும்,

1·5 லட்சம் டன் யூரியா உரம் தயாரிக்கவும், 3·8 லட்சம் டன் சுட்ட நிலக்கரி அச்சுக்கள் தயாரிக்கவும், 6,400 டன் மோட்டார் ஸ்பிரிட், 54,300 டன் தார், 1,082 டன் பினுயில் ஆகியன தயாரிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. நிலக்கரியைத் தோண்டும்போது வெளிவரும் தரமான களிமண்ணைப் பயன் படுத்துவதற்கான தொழிற்சாலையும் ஏற்படுத்த உத்தேசிக்கப் பட்டுள்ளது. நெய்வேலி நிலக்கரித் திட்டத்திற்கு மொத்தம் சுமார் ரூ. 110 கோடி செலவிடப்படும்.

பெரம்பூர் ரயில்பெட்டி

பெரம்பூர் ரயில்பெட்டித் தொழிற்சாலை முதல் திட்டக் காலத்தில் இந்திய அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்டது. இது 1955 இல் உற்பத்தியைத் தொடங்கிற்று. சுவிட்ஸர்லாந்து உதவியுடன் இது அமைக்கப்பட்டது. இதில் முதலீடு செய்யப்பட்டுள்ள தொகை 8 கோடி ரூபாய். இரண்டாம் திட்டக் காலத்தில் இத்தொழிற்சாலை விஸ்தரிக்கப்பட்டு ஆண்டு ஒன்றுக்கு 620 பெட்டிகளைத் தயாரிக்கும் திறன் பெற்றுள்ளது. தற்போது இத் தொழிற்சாலையில் சுமார் 7,800 பேர் வேலை செய்கின்றனர். 300 பெட்டிகளுக்கு ஆசனம் முதலிய வசதிகளை அமைப்பதற்கான தொழிற்சாலைப் பிரிவு ரூ. 3·5 கோடி செலவில் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. மூன்ருவது திட்ட மத்தியில் இங்குத் தயாராகும் எல்லாப் பெட்டிகளுக்கும் இந்தத் தொழிற்சாலையிலேயே ஆசனம் முதலிய வசதிகள் அமைக்கப்படும்.

உதகையில் கச்சா பிலிம் தொழிற்சாலை அமைப்பதற்கான நடவடிக்கைகளை இந்திய அரசாங்கம் மேற்கொண்டுள்ளது. பிரெஞ்சு நிபுணர்களின் ஒத்துழைப்புடன் போட்டோ பிலிம்கள் உற்பத்தி செய்யப்படும். இத்திட்ட வேலைக்காக இந்துஸ்தான் போட்டோ பிலிம் உற்பத்தி கம்பெனி அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்குச் சுமார் ரூ. 6·5 கோடி செலவாகும். நானூறு நிபுணர்கள் உட்படச் சுமார் ஆயிரம் பேர் இதில் வேலை வசதி பெறுவர். எக்ஸ்-ரே போட்டோ பிலிம், பதிவுத் தாள்கள், போட்டோ லித்தோவுக்கான தாள்கள் முதலியன இதில் உற்பத்தியாகும். மூன்ருவது திட்ட முடிவில் கலர் பிலிம்களும், கலர் போட்டோ தாள்களும் உற்பத்தியாகும். ஆண்டு ஒன்றுக்குச் சுமார் 5 கோடி ரூபாய் மதிப்புள்ள பொருள்கள் இதில் உற்பத்தியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தக் கம்பெனிக்காக 272 ஏக்கர் நிலம் இலவசமாக வழங்கத் தமிழ்நாடு அரசாங்கம் இசைந்துள்ளது.

"ஆலிவெட்டி" என்ற இத்தாலி நாட்டு நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் இந்திய அரசாங்கம் கிண்டியில் ஒரு டெலிபிரிண்டர்

தொழிற்சாலையை ஏற்படுத்தியுள்ளது. மாதம் 100 டெலிபிரின்டர்கள் இதில் உற்பத்தி செய்யப்படும். இதில் மொத்தம் சுமார் 200 பேர் வேலை பெறுவர். கிண்டித் தொழிற் பண்ணையில் ஏற்கனவே இதற்கு ஒரு இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. சிறு அளவில் உற்பத்தி தொடங்கிவிட்டது.

மத்திய அரசாங்கம், ரஷ்யத் தொழில் நுணுக்க உதவியுடன் கிண்டியில் அறுவைச் சிகிச்சைக் கருவிகள் தயாரிப்பு நிலையம் ஒன்றை நிறுவத் திட்டமிட்டுள்ளது. இதற்குச் சுமார் 5 கோடி ரூபாய் செலவாகும். இங்கு 150 வகைகளில் சுமார் 25 லட்சம் அறுவைச் சிகிச்சைக்கருவிகள் தயாரிக்கப்படும். இந்தக் கம்பெனிக்காக 115 ஏக்கர் நிலம் இலவசமாக வழங்கத் தமிழ்நாடு அரசாங்கம் இசைந்துள்ளது.

சேலம் இரும்பு

சேலம் மாவட்டத்தில் இரும்புக் கனி அதிக அளவில் கிடைக்கிறது. ஆயின் அதில் இரும்புச் சத்துக் குறைவாக இருக்கிறது. இப்பொழுது நெய்வேலியில் நிலக்கரி கிடைப்பதனால், அதையும் சேலம் இரும்புக் கனியையும் கொண்டு இரும்பு உற்பத்தி செய்ய முடியுமா என்ற ஆராய்ச்சிகள் நடைபெற்றுவருகின்றன. பூர்வாங்க சோதனைகள் நம்பிக்கை அளித்துள்ளன. நிலக்கரி வெட்டி எடுக்கப்பட்ட பின்புதான், விரிந்த அளவில் சோதனைகளை மேற்கொள்ள இயலும். இந்தத் திட்டத்திற்கு இந்திய அரசாங்கம் மூன்றும் திட்டத்தில் ரூ. 25 கோடி ஒதுக்கியுள்ளது. பூர்வாங்க வேலைகளுக்காக மாநில அரசாங்கம் மூன்றுவது திட்டத்தில் ரூ. 75 லட்சம் ஒதுக்கியுள்ளது.

காவேரிப் பகுதியில் எண்ணெய் கிடைக்கும் வாய்ப்புக்களைப் பற்றிப் பல அயல்நாட்டு நிபுணர்களால் ஆராய்ச்சி நடத்தப்பட்டு

வந்துள்ளது. 1956ஆம் ஆண்டு ரஷ்ய நிபுணர்கள் அவ்விடத்தைப் பார்வையிட்டு இங்கு எண்ணெய் கிடைப்பதற்கான அறிகுறிகள் இருப்பதைத் தெரிவித்தனர். அதனையொட்டி 1957-58இல் பூர்வாங்க சோதனைகள் நடத்தப்பட்டன. இந்தியப் புவியியல் ஆராய்ச்சிக் கழகம் இதற்கான சோதனைகளை மேற்கொண்டது. இதுவரை சுமார் 4,000 சதுர மைல் அளவில் சர்வே நடத்தப்பட்டுள்ளது. மேலும் சில பகுதிகளில் சோதனைகள் நடத்தப்பட்டு வருகின்றன. பூர்வாங்க சோதனைகள் இந்தப் பகுதியில் எண்ணெய் கிடைக்கும் என்ற நம்பிக்கையை ஊட்டுகின்றன.


சேது சமுத்திரத் திட்டமும் இந்திய அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்து வருகிறது. பாக் ஜலசந்திக்கும் மன்னார் வளைகுடாவிற்கும் இடையில் அடித்தரை பாறையாக உள்ள பகுதியில் கால்வாய் அமைத்து, போக்குவரத்துக்கு வழி செய்வதே இத் திட்டத்தின் முக்கிய அம்சம் ஆகும். இந்தக் கால்வாய் அமைப்பின் மூலம் இந்தியாவின் மேற்குக் கரையிலிருந்து கிழக்குக் கரைக்கு வரும் கப்பல்கள் இலங்கையைச் சுற்றிவர வேண்டிய அவசியம் இராது. இதன் மூலம் கப்பல் பிரயாண நேரமும் எரி பொருளும் கணிசமாகக் குறையும்.

ரயில் பாதை

தமிழ் நாட்டில் ரயில்பாதை வசதிகளை அதிகரிப்பதற்கான திட்டங்களும் பரிசீலனையில் உள்ளன. சேலம்-பெங்களூர், விருதுநகர்-மானாமதுரை, திருநெல்வேலி-கன்னியாகுமரி ரயில் பாதைத் திட்டங்களை மூன்றாவது திட்டத்தில் சேர்ப்பதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கல்கத்தா-சென்னை, அரக்கோணம் - ஈரோடு ஆகியவற்றுக்கு இடையில் பிராட்கேஜ் லைன் இரட்டைப்பாதை அமைப்பதற்கான ஏற்பாடும், ரயில்வே அபிவிருத்தித் திட்டத்தில் இடம் பெறும் என்று நம்பப்படுகிறது.

புதியதோர் நகரமும் எழுந்துள்ளது.



வளமான எதிர்காலம்

சுதந்திரப் பாதையில் பயணம் தொடங்கிப் பதினான்கு ஆண்டுகள் ஆகிவிட்டன. முதல் ஐந்தாண்டுத் திட்டமும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டமும் நிறைவேறி விட்டன. தற்போது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் நடைபெற்றுவருகிறது.

நாட்டு மக்கள் நலனுக்காக முதல் திட்டக் காலத்தில் ரூ. 80 கோடியும், இரண்டாவது திட்டக் காலத்தில் ரூ. 186 கோடியும் அரசாங்கத்தால் செலவிடப்பட்டதை அறிந்தோம். மூன்றாவது திட்டக் காலத்தில் ரூ. 291 கோடி செலவிடப்படும். இரண்டாவது திட்டக் காலத்தில் தொடங்கப்பட்ட பணிகளைத் தொடர்ந்து நடத்தவும், நிறுவனங்களைப் பராமரிக்கவும் ஆண்டுதோறும் ரூ. 8 கோடி செலவிட வேண்டியிருக்கிறது. மூன்றாவது திட்டக்கால அளவில் இச்செலவு ரூ. 40 கோடியாகும். இதற்கு வழி வகுப்பதோடு, திட்டச் செலவுக்காக மாநில அரசாங்கம் ரூ. 101 கோடி ஒதுக்கும். அதற்கு மேல் ரூ. 190 கோடி வரை மத்திய அரசாங்கம் உதவி செய்யும். இந்த வகையில் மூன்றாவது திட்டத்தின் மொத்த அளவு

ரூ. 291 கோடியாக இருக்கும். திட்ட வாரியான செலவு விவரங்கள் பின் வருமாறு :—

(1)	முதல் திட்டச் செலவு (2)	இரண்டாம் திட்டச் செலவு (3)	மூன்றும் திட்ட உத்தேசச் செலவு (4)
	(ரூபாய்கள் கோடியில்)		
வேளாண்மை	9·67	16·80	36·98
சமுதாயநல அபிவிருத்தியும் கூட்டுறவும்		15·23	25.18
பாசனமும் மின்சக்தியும்	50·43	95·78	127·61
பெருந் தொழில்களும், நடுத்தரத் தொழில்களும்,	1·53	1·13	3·35
சிறு தொழில்களும், கிராமத் தொழில்களும்		12·72	20·16
சாலைகள், சுற்றுலா வசதிகள்	2·70	5·38	11·25
கல்வி	3·82	13·73	32·16
சுகாதாரம்	6·42	14·35	21·50
வீட்டு வசதி	1·29	4·80	7·00
பின்தங்கிய வகுப்பினர் நலன்	4·52	4·59	5·38
			(—) 2·12*
சமூக நலன்		0·18	0·52
தொழிலாளர் நலன்		0·48	1·33
மற்ற இனங்கள்		1·01	0·59
மொத்தம்	80·38	186·18	290·89

* மத்திய அரசாங்கத் துறையில் செலவிடப்படும் தொகை

நம் நாட்டில் பெரும்பாலோர் ஈடுபட்டிருக்கும் வேளாண்மைக்காக உற்பத்திக்கும், சிறு பாசனத்திற்கும் இரண்டாவது திட்டத்தில் ரூ. 11 கோடி ஒதுக்கப்பட்டிருந்தது. இப்போது மூன்றுவது திட்டத்தில் ரூ. 24 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. சிறு பாசனக் குளங்களையும் ஏரிகளையும் புதுப்பிப்பதற்காக இரண்டாவது திட்டத்தில் ரூ. 4·4 கோடி செலவாகியிருக்க, இப்போது அதற்கு ரூ. 8 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இவை மட்டும் அல்லாமல், தூர்வாரிச் செப்பஞ் செய்யும் வேலைத் திட்டம் ரூ. 80 லட்சம் செலவில் தொடர்ந்து நடத்தப்படும். கிணறுகள் வெட்டுவதற்காக ரூ. 1 கோடி அளவிற்குக் கடன் தொகைகளும், உதவித் தொகைகளும் வழங்கப்படும். சுமார் 7,200 மின்சார மோட்டார் பம்பு செட்டுகளும், 1,240 ஆயில் எஞ்சின் பம்பு செட்டுகளும் வாடகைக் கிரய அடிப்படையில் வழங்கப்படும். இதற்குச் சுமார் ரூ. 1 கோடி

ஆகும். வாடகைக் கிரய அடிப்படையில் 250 யந்திரக் கலப்பைகள் விநியோகிக்கப்படும். மேலும் 2,000 துளைக் கிணறுகளுக்காக ரூ. 50 லட்சம், 150 குழாய்க் கிணறுகள், 500 ஊற்றுக் கிணறுகள் ஆகியவற்றிற்காக ரூ. 94 லட்சம், 3,000 வடிமுனைக் கிணறுகளுக்காக ரூ. 50 லட்சம் செலவிடப்படும். அரசாங்க விதைப் பண்ணைகள் புதிதாக 76 நிறுவ ரூ. 100 லட்சம் செலவாகும். தனிப்பட்ட சாகுபடியாளர்க்கு வாடகைக்கு விடுவதற்காக 25 கனரக டிராக்டர்கள் வாங்க ரூ. 50 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. கிருமி, பூச்சிகளைக் கொல்லும் மருந்துகள் வழங்க ரூ. 100 லட்சமும், சிறந்த வேளாண்மைக் கருவிகளை வழங்க ரூ. 20 லட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளன. வாணிகப் பயிர்களின் உற்பத்தியை அபிவிருத்தி செய்வதற்குரிய பல்வேறு திட்டங்களுக்காக மொத்தம் ரூ. 192 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

பாசனத்துக்கு ரூ. 27 கோடி

பாசனத்துக்காக இரண்டாவது திட்டத்தில் ரூ. 17 கோடி செலவிடப்பட்டது. மூன்றுவது திட்டத்தில் இதற்கென ரூ. 27 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. பரம்பிக்குளம்—ஆளியாறு திட்டத்தை நிறைவேற்றுவதற்காக வகை செய்துள்ள ரூ. 21 கோடியும் இதில் சேர்ந்ததாகும். ரூ. 48 லட்சம் செலவில் பாலாறு கால்வாய்த் திட்டம், ரூ. 55 லட்சம் செலவில் சாத்தனூர் (இரண்டாம் நிலை) திட்டம் ஆகிய திட்டங்கள் நிறைவேற்றப்படும்.

வேளாண்மைத் துறையில் மேற்கொள்ளப்படும் இத்தகைய நடவடிக்கைகளால் உணவு உற்பத்தி 53 லட்சம் டன்களிலிருந்து திட்ட முடிவில் 70 லட்சம் டன்களாக உயரும் என எதிர்பார்க்கலாம். கரும்பு (வெல்லம்) 4 லட்சம் டன்னிலிருந்து 5 லட்சம் டன்னுகவும், எண்ணெய் வித்துக்கள் 10·50 லட்சம் டன்னிலிருந்து 13·40 லட்சம் டன்னுகவும், பருத்தி 4·20 லட்சம் பேல்களிலிருந்து 5·20 லட்சம் பேல்களாகவும், தேங்காய் 4,150 லட்சம் காய்களிலிருந்து 5,160 லட்சம் காய்களாகவும் உற்பத்தி அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கால்நடை வளர்ப்புக்கென மூன்றுவது திட்டத்தில் ரூ. 352 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. கேந்திர கிராம நிலையங்களுக்கான ரூ. 75 லட்சமும், கோழி வளர்ப்புக்கான ரூ. 52 லட்சமும் இதில் அடங்கும்.

பால் பண்ணையும், பால் வழங்கலும் என்பதன்கீழ் மூன்றுவது திட்டத்தில் ரூ. 275 லட்சம் செலவாகும். இத்தொகையிலிருந்து சென்னை பால் பண்ணைத் திட்டத்திற்காக ரூ. 100 லட்சமும்,

திருச்சி, தஞ்சாவூர், மதுரை ஆகிய இடங்களில் பால் பதப்படுத்தும் இயந்திரங்கள் அமைக்க ரூ. 53 லட்சமும் செலவிடப்படும். மதுரையில் ஏற்படுத்தப்படும் இயந்திரத்திற்காக ஐக்கிய நாட்டு சர்வதேசக் குழந்தைகள் நிதியிலிருந்து உதவி கிடைக்கக்கூடும். ரூ. 15 லட்சம் செலவில் வெண்ணெய், பால் பவுடர் தொழிற்சாலையும், ரூ. 6 லட்சம் செலவில் கால்நடைத் தீனித் தயாரிப்பு நிலையமும் அமைக்கப்படும்.

மீன் வளத்திற்காக இரண்டாவது திட்டக் காலத்தில் ரூ. 79 லட்சம் செலவாயிற்று. இப்போது மூன்றுவது திட்டத்தில் இதற்காக மொத்தம் ரூ. 2·22 கோடி செலவிடப்படும். அத்தொகையில் படகுகள் வழங்க ரூ. 63 லட்சமும், நைலான் வலைகள் போன்றவை வாங்க ரூ. 20 லட்சமும், மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடன் கொடுக்க ரூ. 30 லட்சமும், மீன்பிடி துறைமுகங்களை அபிவிருத்தி செய்யவும், மீன்களைக் கரை சேர்க்கும் வசதிகளைச் செய்து தரவும் ரூ. 35 லட்சமும் செலவிடப்படும்.

ரப்பர் தோட்டம்

மூன்றுவது திட்டத்தில் வன வளத்திற்காக ரூ. 2·12 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களில் 2·62 லட்சம் ஏக்கரில் கிராமக்காடு வளர்ப்புத் திட்டம் மேற்கொள்ளப்படும். இதற்கு ரூ. 75 லட்சம் செலவாகும். ஆறுகள், ஏரிகள், கால்வாய்கள் ஆகியவற்றின் கரைகளில் மரங்கள் நட ரூ. 30 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்தில் 2,000 ஏக்கர் பரப்பில் ரப்பர் தோட்டம் வைக்கப்படும். மண் வளப் பாதுகாப்புத் திட்டங்களுக்காக ரூ. 250 லட்சம் செலவிடப்படும். குந்தா பள்ளத்தாக்கு மண்வளப் பாதுகாப்பு சிறப்புத் திட்டத்திற்கு ஆகும் செலவுக்காக ரூ. 25 லட்சம் செலவுத் தொகையை மத்திய அரசாங்கம் ஏற்கும்.

சமுதாய நல வளர்ச்சித் திட்டத்திற்கு மூன்றுவது திட்டத்தில் ரூ. 20 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 1962-63க்குள் மாநிலம் முழுவதற்கும் சமுதாய நலவளர்ச்சி வேலை விஸ்தரிக்கப்படும்

மூன்றுவது திட்டக்கால அளவில் கூட்டுறவுக் கடன் வழங்கும் சங்கங்கள் குறுகியகால, நடுத்தரக் காலக் கடன்களாக ரூ. 47 கோடியும், நீண்டகாலக் கடன்களாக ரூ. 3 கோடியும் வழங்கும். கூட்டுறவு என்பதன்கீழ் பல்வேறு திட்டங்களுக்காக ரூ 471 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்தொகையில், நான்கு கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் அமைப்பதற்கான ரூ. 110 லட்சமும், 1,030 கிடங்குகளைக் கட்டுவதற்கான ரூ. 100 லட்சமும் அடங்கும்.

இரண்டாவது திட்டக் காலத்தில் திருநெல்வேலி மாவட்டம் பேட்டை, நாசரத் ஆகிய இடங்களிலும், இராமநாதபுரம் மாவட்டத்தில் ஸ்ரீவில்லிப்புத்தூரிலும், சேலம் மாவட்டம் அம்மாபேட்டையிலும் ஆக நான்கு இடங்களில் கூட்டுறவு நூற்பு ஆலைகள் ஏற்படுத்த அனுமதிக்கப்பட்டது. பேட்டை, ஸ்ரீவில்லிப்புத்தூர் ஆகியவற்றில் ஆலைகள் ஏற்படுத்தப்பட்டு உற்பத்தி தொடங்கிவிட்டன. நாசரத்தில் கூட்டுறவு நூற்பு ஆலை விரைவில் உற்பத்தி தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சேலம் கூட்டுறவு நூற்பு ஆலை இன்னும் உருவாகும் கட்டத்தில் உள்ளது. மூன்றுவது திட்டக் காலத்தில் தமிழ் நாட்டில் மேலும் நான்கு கூட்டுறவு நூற்பு ஆலைகளை ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இரண்டாவது திட்டக் காலத்தில் கூட்டுறவு நூற்பாலைகளின் பங்கு மூலதனத்தில் அரசாங்கம் ரூ. 39 லட்சம் முதலீடு செய்துள்ளது. மூன்றுவது திட்டக் காலத்தில் இதற்கென ரூ. 50 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. நெசவாளர்களுக்கு நியாய விலையில் நூல் கிடைக்கச் செய்வதே இத் திட்டத்தின் நோக்கமாகும்.

அணு மின்சார உற்பத்தி

மின்சார அபிவிருத்திக்காக இரண்டாவது திட்டத்தில் ரூ. 79 கோடி செலவிடப்பட்டது. மூன்றும் திட்டத்தில் மின்சாரப் பெருக்கத்திற்கு ரூ. 100 கோடி செலவிடப்படும். நெய்வேலியில் மத்திய அரசாங்கத் திட்டத்தின்கீழ் அனல் மின்சாரநிலைய விஸ்தரிப்பு வேலை ரூ. 15 கோடி செலவில் மேற்கொள்ளப்படும். இரண்டாம் திட்ட முடிவில் தமிழ்நாடு மின்சார இணைப்பில் உற்பத்தி 5·71 லட்சம் கிலோ வாட்டாகும். மூன்றும் திட்ட முடிவில் 10·46 லட்சம் கிலோ வாட்டாக இது உயரும். ஆனாலும்கூட, மின்சாரத் தேவை இந்த உற்பத்தித் திறனுக்கும் மேல் போகக்கூடுமாதலால், மாநிலத்தில் அணு மின்சார நிலையம் அமைப்பு சம்பந்தமான ஆய்வு வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மின்சார விநியோக வேலைத் திட்டங்களுக்காக ரூ. 60 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. கிராமங்களுக்கு மின்சார வசதியும் இதில் அடங்கும். 7,300 கிராமங்களுக்கு மின்சார வசதி அளிப்பதென்ற லட்சிய அளவை அடைவது கடினமாக இருக்காது என்று கருதப்படுகிறது. கிராம மின்சாரத் திட்டங்களுக்காகத் தனிப்பட்ட லைசென்சுதாரர்களுக்குக் கடன் கொடுப்பதற்கென ரூ. 200 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

சிறு தொழில்கள் அபிவிருத்திக்காக மூன்றுவது திட்டத்தில் ரூ. 11·2 கோடி செலவிடப்படும். தொழிற் கூடங்கள், தொழிற் சாலை யூனிட்டுகள் இவற்றை நிறுவவும், அபிவிருத்தி செய்யப்பட்ட மனைகளை வழங்கவும் ஒதுக்கப்பட்ட ரூ. 320 லட்சம்

இத்தொகையில் அடங்கும். கைத்தறிகளுக்காக மொத்தம் ரூ. 800 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. கைத்தறிக் கூட்டுறவுச் சங்கங்களில் 2,500 விசைத் தறிகளை நிறுவுவதற்கென மத்திய அரசாங்கத் தொழில் துறையின் கீழும் தொகை ஒதுக்கப்படும்.

சாலைகள் அபிவிருத்திக்காக இரண்டாம் திட்டத்தில் ரூ. 5·33 கோடி செலவிடப்பட்டது. மூன்றும் திட்டத்தில் இந்த வகையில் சுமார் ரூ. 11 கோடி செலவிடப்படும்.

கல்வி அபிவிருத்திக்காக மூன்றும் திட்டத்தில் ரூ. 25 கோடி செலவிடப்படும். கட்டாய ஆரம்பக் கல்வியை அமுலாக்க ரூ. 11 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. அதன்மூலம் 6 முதல் 11 வயது வரையுள்ள எல்லாக் குழந்தைகளும் 1965-66 ஆம் ஆண்டுக்குள் பள்ளி செல்வர். மூன்றும் திட்டக்கால முடிவில் 17 லட்சம் குழந்தைகள் நண்பகல் உணவு பெறும்படியாகத் திட்டம் விஸ்தரிக்கப் படும்.

பொறியியற் கல்லூரிகளில் மேற்கொண்டு 610 மாணவர்களைச் சேர்க்கவும், பாலிடெக்னிக்குகளில் மேற்கொண்டு 1,060 மாணவர்களைச் சேர்க்கவும் திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. மத்தியத் திட்டத்தின் பாகமாகப் பிராந்தியப் பொறியியற் கல்லூரி ஒன்று இம்மாநிலத்தில் நிறுவப்படும். தனியார் துறையில் மேலும் ஒரு பொறியியற் கல்லூரி ஏற்படும். புதிதாக ஆறு பாலிடெக்னிக்குகள் தொடங்கப்படும். அவற்றுள் மூன்று பெண்களுக்கானவை. ரூ. 100 லட்சம் செலவில் 20 ஜூனியர் தொழில் நுட்பப் பள்ளிகள் தொடங்கப்படும்.

வீட்டு வசதிகள்

ஹரிஜன நலனுக்காக 1955-56 ஆம் ஆண்டுச் செலவு ரூ. 117 லட்சமாக இருந்தது. 1960-61 இல் இது ரூ. 355 லட்சமாக அதிகரித்தது. மூன்றும் திட்டத்தில் ஹரிஜன நலனுக்காக மேற்கொண்டு ரூ. 5·4 கோடி செலவிடப்படும். அதில் மத்திய அரசாங்கப் பங்கு ரூ. 2·1 கோடியாகும். இத்தொகை மாநிலத் திட்டத்தில் ஒதுக்கிய தொகைக்கு மேற்பட்டுள்ள தொகையாகும். ஹரிஜன நலன் சம்பந்தப்பட்ட எல்லாத் திட்டங்களுக்காகவும் மூன்ருவது திட்டத்தில் ரூ. 20 கோடி செலவிடப்படும்.

வீட்டு வசதி, நகர அபிவிருத்தித் திட்டங்களுக்காக மூன்றும் திட்டத்தில் ரூ. 11 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் ரூ. 4 கோடி மத்தியத் திட்டத்தின் பங்காக இருக்கும்.

சுகாதார அபிவிருத்திக்காக மூன்றும் திட்டத்தில் ரூ. 21·5 கோடி செலவிடப்படும். நகர தண்ணீர் வசதித் திட்டங்களுக்காக ரூ 7½ கோடியும், கிராமங்களில் தண்ணீர் வசதித் திட்டங்களுக்காக ரூ. 1½ கோடியும் இதில் அடங்கும்.

மூன்றுவது திட்டக் காலத்தில் புதிய மருத்துவக் கல்லூரி ஒன்று ஏற்படுத்தப்படும். ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்காக ரூ. 100 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆஸ்பத்திரிகள் அபிவிருத்திக்காகவும், மருத்துவப் பயிற்சி வசதிகள் அதிகரிக்கவும் ரூ. 456 லட்சம் செலவிடப்படும். குடும்பக் கட்டுப்பாடு திட்டங்களுக்காக ரூ. 161 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. மாநிலத் திட்டத்தில் அந்த வகையில் ரூ 64 லட்சம் மட்டுமே குறிக்கப்பட்டுள்ளது. பாக்கியுள்ள ரூ. 97 லட்சத்தை மத்திய அரசாங்கம் ஏற்றுக் கொள்ளும்.

இவ்விதமாக, வளமான எதிர்காலத்தை நோக்கி மேலும் முன்னேறும் முயற்சியாக மூன்றுவது திட்டம் விளங்குகிறது.